flex


# அருள்

ஜூன் 2012 கடவுளை வணங்குவோம் அருளினைப் பெறுவோம் விலை ரூ.50

www.flexguidemag.com

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 19



தினசரி தியான வழிபாடு

இவ் இதழுடன் இணைப்பு





முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்


JEYECHANDRANS

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 4528438/5, Fax: 011 2362822
New Branch : 194, Main Street, Colombo 11.
Tel: 011 2448870, Fax: 011 2448860
Web: www.jeyechandrans.com | Skype: jeyechandrans 888


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்....

## ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்


**06-09** சைவம் ஓர் வாழ்க்கை நெறி



**39-50** ஸ்ரீ ராம பக்த அனுமார் புராணம்



**59-64** விநாயகர் புராணம்



**15-19** சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும்



**21-34** அற்புத ஆலயங்கள்



| | |
|---|---|
| **05** | எமது நோக்கம் |
| **10-11** | ஆனி உத்திரம் |
| **12-13** | சிவபெருமான் போற்றி வழிபாடு |
| **14** | இந்து தர்ம சாஸ்திரம் |
| **35-37** | சூரிய வழிபாடு |
| **51-53** | மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு |
| **54-57** | வாழ்நாள் பங்கீடு |
| **66** | ஆறுமுக நாவலர் |
| **67-69** | பஞ்சாங்கம் |
| **73-76** | ராசி பலன்கள் |
| **77-80** | பக்திக் கதைகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUTDOOR ADVERTISING

**FLEX OFFSET PRINTING**
**100 nos**
**VISITING CARDS**
**Rs. 1350/=**

**FLEX DIGITAL PRINTING**
**Rs. 45/= Per Sqft**

- Flex Digital Light Box
- Plastic Name Board
- Flex Name Board
- Flex Digital Printing



**PLASTIC ID CARDS**



Ideal for
> Restaurants
> Hotels
> Textile Shops
> Pharmacies etc.

**FREE! DESIGNING**
**LOGOS**
**LEAFLETS**
**PRESS ADS**

**A4 Certificates**
1 ONE DAY SERVICE
**100nos**
**Rs. 6,000/=**

அனைத்து விளம்பரங்களும்
ஏற்றுக்கொள்ளப்படும்

Daily News | සිළුමිණ | දිනමිණ
வீரகேசரி | ලංකාදීප | தினகரன்
Sunday Observer | Hit Ad classified

**Letterheads**



100 nos Rs. 3,000/-
* One day service
* With designing

www.flexgraphic.lk

flex GRAPHIC
THE LEADING DIGITAL HOUSE FOR ADVERTISING

**FLEX Graphic**
4, IBC Road, Colombo 6. Tel: 2364157, 2506614.
Fax: 2501766 E-mail: flexvijay@sltnet.lk
Hotlines: 0777-555026, 0777-614-186



Sri Lanka Entrepreneur of the Year 2007
Young Entrepreneur Award
(Western Province)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கம்

"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"

மனித வாழ்வில் கடின உழைப்பு, இறைபக்தி, உதவும் மனப்பான்மை மனத் தைரியம் இவை தான் அவனை முன்னேறச் செய்கிறது. அதிஷ்டமும் அவசியம் தான். ஆனால் திடீர் அதிஷ்டம் அவன் வாழ்க்கைப் பாதையையே முற்றும் முழுதாக மாற்றிவிடுகிறது. அத்தோடு அவனை சோம்பேரியாகவும் மாற்றுகிறது.

ஒரு காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்தான் இளைஞன் ஒருவன். தெய்வ நம்பிக்கையோடு தன்னம்பிக்கையும் நிறைந்தவன். கடுமையான உழைப்பாளி, தினமும் குளித்து முடித்து கடவுளை வணங்கி நம்பிக்கையோடு காட்டில் விறகு வெட்டி அதனைச் சேகரித்து நகரத்துக்கு கொண்டு சென்று விற்றபணத்தில் உணவு சமைத்து கடவுளை வணங்கி ஏழைகளுக்கும் கொஞ்ச உணவை தர்மம் செய்து நிம்மதியாக உறங்கச் செல்வான். அவன் மிகுந்த சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டான். அவன் முகமே பிரகாசமாக தெய்வீகம் நிறைந்ததாக ஊர்மக்கள் பேசிக் கொண்டார்கள். ஒரு நாள் அவன் மரம் வெட்டிக் கொண்டிருக்கும் வேளையில் அந்த நாட்டின் மன்னன் அந்தப் பக்கமாக வந்தான். கடமையே கண்ணாக இருந்த அவனைக் கண்டதும் மன்னன் அருகில் வந்தான். வந்த மன்னன் அரண்டு போனான். காரணம் கொடிய விஷமுள்ள ராஜ நாகம் ஒன்று மரம் வெட்டிக்கு அருகில் சீற்றத்துடன் படமெடுத்து நின்றது. எந்த நேரமும் கொட்டிவிடும் என்ற நிலைமை. பதறிய மன்னன் கத்தினான் "தம்பி திரும்பிப்பாராமல் சடக்கென முன்னே ஓடிவா கொடியபாம்பு கொத்தும் நிலையில் உன் பின்னால் இருக்கிறது". இளைஞன் பதறவில்லை திரும்பிப்பார்த்தான் எந்த தயக்கமும் இன்றி அந்த கொடிய ராஜநாகத்தைத் தன் கையால் பிடித்துத் தூக்கி சற்றுத் தொலைவில் வீசி எறிந்தான். பின் அலட்டிக் கொள்ளாமல் மரத்தை வெட்டத் தொடங்கினான்.

ஆடிப்போய்விட்ட மன்னன் "அந்த பாம்பு உன்னை தீண்டியிருந்தால் இந்நேரம் நீ செத்துப்போயிருப்பாய்." இளைஞன் சிரித்துக் கொண்டே "இவ்வாரான ஆபத்துக்களை இதற்குமுன் ஏராளமாக சந்தித்திருக்கிறேன்." இதற்கெல்லாம் பயந்து போனால் வாழ்க்கை நடத்த முடியுமா? "என்று கணீரென்ற குரலில் கூற மன்னனும் ஆகா இவனல்லவா வீரன் என்று பல பரிசுகளையும் பொற்குவியல்கள் மற்றும் ஆடம்பர மாளிகையையுடன் பணியாட்களையும் கொடுத்ததுடன் அவனை வாழ்த்திச் சென்றான். அவ்வளவு தான் அவன் வாழ்க்கையே திசை திரும்பியது. கடவுளை தொழுவதை மறந்தான். உழைப்பதை விடுத்து ஆடம்பர செலவுகளிலும் ஈடுபட்டதுடன் ஏழைகளுக்கு இறங்குவதையும் கைவிட்டான். நிறைய செல்வம் இருந்ததால் சொகுசு பேர்வழியாக வலம்வர ஆரம்பித்தான். சிலமாதங்கள் சென்றன அரசன் அந்த பக்கமாக வந்தான். அந்த இளைஞன் காலில் ஒரு கட்டுப் போட்டு உட்கார்ந்திருந்தான். என்னப்பா ஆச்சு என்று மன்னன்கேட்க தோட்டத்தில் சுற்றி வந்த போது, நெருஞ்சி முள் குத்திவிட்டது அதுதான் மருத்துவர் சிகிச்சை தந்திருக்கிறார் என்று சொன்னான். இந்த தலை கீழ் மாற்றத்திற்கு என்ன காரணம்? கடவுள் பக்தியுடன் கடுமையாக உழைத்து ஏழைகளுக்கு உதவிய வரை அவன் ஆரோக்கியமாக இருந்தான். பயங்கர பாம்பைக் கூடக் கையால் பிடித்து தூக்கியெறிந்தான். ஆனால் உழைக்காமலே காசு கிடைத்ததும் அவனது பக்தி போய்விட்டது. உழைப்பு போய்விட்டது. உதவும் எண்ணமும் போய்விட்டது. நெருஞ்சி முள் கூட அவனை நோயாளியாக்கி விட்டது. வாழ்க்கையின் தத்துவம் மன்னனுக்குப் புரிந்தது.

- ஆசிரியர்



4/A, Fussels Lane, Galle Road, Wellawatte. (Close to Wellawatte Market)
Tel: 2360132 Fax: 0094 1 2503471 Mobile: 077 5415526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ கீதை கண்ட பெருமான்...

சிவபெருமான் ராமருக்கு உபதேசித்த கீதையிது. முருகக் கடவுளில் தொடங்கி முனிவர்கள் வரை குரு பரம்பரையாக இது உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

சிவபெருமானின் பிரபாவங்களைப் பேசுவதோடு ஞான அமுதமாகவும் அமைந்தது சிவகீதை. மனித வாழ்வின் மேன்மைக்கான நெறிமுறைகளையும் இது விவரிக்கிறது.

'சிவபெருமானிடம் ஒருவர் பக்தி கொள்வதற்கு அவருடைய முந்தைய பிறவிகளில் அவர் புண்ணியம் செய்திக்க வேண்டும்.

மனிதன் எந்த நற்காரியத்தைச் செய்தாலும் அதனால் வரும் புண்ணிய பலனை சிவபெருமானுக்கே அர்ப்பணிக்க வேண்டும்.

சிவனது அருளைப் பெற்றவர்க்கு திடசித்தம் உண்டு.

சிவனுடைய பிரபாவத்தை (மகிமை)க் கேட்டாலே ஞானம் வரும். பிற்பாடு முக்தியும் கிடைக்கும்.

உங்களுக்கு சிவபெருமானிடம் உறுதியான பக்தி இருந்துவிட்டால் எப்பேர்ப்பட்ட பாவத்தில் இருந்தும் நீங்கள் விடுபட முடியும்.

நீங்கள் சிறப்பானவைகளைப் படைக்க வேண்டும் என்பதில்லை. கொஞ்சம் தீர்த்தம் (நீர்) எடுத்து நியமமாக சிவபிரானுக்குச் சமர்ப்பித்தாலே போதும். மூவுலகப் பேற்றினையும் அவர் உங்களுக்கு வழங்குவார்.

(மூவுலகம் - பூமி. அந்தரம். சுவர்க்கம்)

எதையுமே சமர்ப்பிக்க முடியாவிட்டால் சிவனை வலம் வந்தாலும் போதும். அதுவும் இயலாவிடில் இருந்த இடத்தில் இருந்தபடி சிந்தித்தாலும் பலனுண்டு.


யோகம் என்று தனியே எதுவும் செய்யத் தேவையில்லை. சிவபெருமானை இடைவிடாமல் சிந்தித்திருப்பதே யோகம்.

சீவர்களுக்கு மயக்கத்தைக் கொடுக்கிற சிவன்தான் அந்த மயக்கத்தில் இருந்து (மாயை) அவர்களை விடுவிக்கவும் செய்கிறான்.

சிவன் சம்சாரப் பிணியை போக்கடிப்பவன். அழகில் சிறந்தவன். எக்காலத்திலும் உள்ளவன்.

இரவு பகல் பாராமல் எக்காலத்திலும் சிவசகஸ்ர நாமத்தை செபிக்கிறவர்களுக்கு சிவபிரான் காட்சியளிக்கிறான்.

பதினான்கு உலகங்களும், பஞ்சபூதங்களும், கடல்களும், மலைகளும், தேவர்களும், அரக்கர்களும். ரிஷிகள் முதலான மற்றையோரும் சிவனது அம்சங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் படைப்புக்கு முன்பும் இருந்தான், தற்போதும் இருக்கிறான். இனியும் இருப்பான்.

சிவன் நித்யமாகவும், அநித்யமாகவும் இருக்கிறான். பிரம்மம் என்கிற பெயருக்கு ஏதுவாக (மூலம், காரணம்) இருப்பதும் சிவனே.

திசைகள் அனைத்தும் சிவன். மூன்று வேதங்களும் அவனே. இதிகாசங்களாகவும், புராணங்களாகவும் இருப்பது அவன்தான். அவன் சத்தியமானவன், சாந்த சொருபன். அவன் பரமகுருவானவன். அவனே மழையாகவும், கடலாகவும் இருக்கிறான்.

சிவன் ஆதியானவன், சோதியானவன், அவனே பிரும்மா, அவனே பிருகஸ்பதி (வியாழன்) தேவர்களின் குரு.

சுலோகங்களும் சூத்திரங்களும் அவன்தான், வித்யை, யாகம், தானம் அவனே. அழிவற்ற பிரம்மமாகிய சிவன்தான் உள்ளும், வெளியிலும், எதிரிலும் இருக்கிறான். அத்தனை இறை வடிவங்களும் (பிரும்மா, விஷ்ணு, மகேஸ்வரன், அக்னி, வருணன், வாயு, விநாயகன், முருகன், இந்திரன்) சிவனது வடிவங்களே. நீரும், மண்ணும், நெருப்பும், காற்றும் சிவனது பரிமாணங்களே. ஏழுலகங்களிலும் அவனே வியாபித்திருக்கிறான்.

(பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மஹர்லோகம், ஜநோலோகம், தபோலோகம், சத்தியலோகம்)

நிகழ்கின்றதும், நிகழப்போவதும் அவனே. செய்யப்பட்டதும், செய்யப்படாததும் அவனே.

சிவன் விசுவரூபன். அவன் ஆகாயமாகவும் அணுவாகவும் இருக்கிறான். அவன் ஒளியின் இடம். அனைவரும் சென்றடையும் இடம்.

ஓம் என்கிற பிரணவத்தில் உறைபவன் சிவன்.

திருமாலும் நான்முகனும் சிவனைத் தேடியடைய முடியாத காரணத்தால் சிவன் 'அனந்தன்' எனப்படுகிறான். உயிரினங்களின் இதயத்தில் அவன் சூட்சுமமாக உறைவதால் 'சூட்சுமன்' எனப்படுகிறான்.

அனைத்தையும் தன்னுள் அடக்கியிருப்பவன், தானே அனைத்தையும் செய்பவன் என்பதால் அவன் 'ஏகன்' என்று அழைக்கப்படுகிறான்.

சகல வித்தைகளுக்கும் தலைவன் என்பதால் அவன் ஈசானன். (ஈசானி- பஞ்ச சக்திகளுள் ஒன்று)

சகலத்திலும் காணப்படுவதாலும், ஆத்ம ஞானத்தை விளங்கச் செய்து, யோகசித்தியை வழங்குவதால் அவன் பகவான்.

பிரளயகாலத்தில் உலகங்களை தன்னுள் ஒடுக்கிக் கொள்வதுடன், மீண்டும் அவற்றைப் படைத்தளிப்பதால் அவன் மகேஸ்வரன்.

சிவனிடம் சிந்தை வைத்து தியானிப்பவர்களுக்கும், பூஜிப்பவர்களுக்கும் சாசுவத அமைதி கிட்டும் அவனைத் தியானிப்பவர்களுக்கு அச்சம் என்பதேயில்லை.

'சிவன் கண்களில்லாமல் பார்க்கிறான்,
காதுகளில்லாமல் கேட்கிறான்
அவன் அனைத்தையும் அறிந்தவன், ஆனால்
அவனை அறிந்தவர் எவருமில்லை'

சிவன் ஞானவடிவினன், ஆனந்த சொருபி. அவன் முடிவற்றவன். அனைத்துக்கும் அவனே மூலாதாரம், உலகமெல்லாம் அவனிடமே தோன்றுகிறது, இருக்கின்றது. ஒடுங்குகின்றது.

'வேதங்கள் போற்றும் முதல்வன்'!

ஆதியும் அந்தமும் அற்ற இறைவனைப் போன்றது தான் வேதமும்.

இறைவனைப் பற்றிய, இறைவனால் உபதேசிக்கப்பட்ட வேதத்தை ரிஷிகள் குருமரபில் கொண்டுவந்தனர்.

உலகம், உயிரினங்கள், அவற்றின் இயக்கம் பற்றி இறைவன் பிரம்மாவுக்குச் சொல்ல, அவை மந்திர அலைகளாய் உலகெங்கும் பரவியது. ரிஷிகள் அந்த மந்திர ஒலிகளைத் தங்கள் தவசக்தியால் கேட்டறிந்து உலகிற்கு தெரிவித்தனர்.

வேதங்களை எளிமையான முறையில் தொகுத்தளித்தார் வியாசர். ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்கிற தொகுப்புகள் அவை.

வேதங்களிடையே காணப்படுகிற பொதுத் தன்மை, அவை மக்கள் நலனுக்காக வாழ்க்கை நெறி, கேள்வி பிரார்த்தனை பற்றி வலியுறுத்துகின்றன என்பதுதான். வேதம் தோன்றிய காலம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முக்கியமல்ல. அது சொல்கிற கருத்துகள்தாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

வேதங்களில் மந்திரங்களும் வாழ்க்கைக் கோட்பாடுகளும் இடம் பெற்றிருக்கின்றன. சில மந்திரங்கள் ஜெபித்தற்கானவை. சில விஷயங்கள் கதைப் பாங்கில் சொல்லப்பட்டுள்ளன. தேவியரைப் போற்றும் சுலோகங்களும் இடம்பெற்றிருக்கின்றன. வேள்வி செய்வதற்கான வழிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

'ரிக்' வேதம் மிகப் பழமையானது. அதில் சொல்லப்பட்ட பெரும்பாலான விஷயங்களே மற்ற வேதங்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இந்திரன், அக்னி, விஷ்ணு, வருணன் என்று பல தெய்வங்களைப் பற்றிய துதிகளைக் கொண்ட நூலிது.

'யஜுர்' என்றால் மனம். மனதுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது யஜுர் வேதம். வியாசபகவானின் சீடரான வைசம்பாயனர் என்பவரே யஜுர் வேதத்தை உலகில் பரவச் செய்தார்.


உலகோர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை வேள்விகளின் பலன்களைப் பற்றிப் பேசுவது யஜுர் வேதம். மனித சரீரம், விலங்குகள், விவசாயம் இவற்றை அறிவியல் நோக்கில் சொல்கிறது யஜுர் வேதம்.

சாமவேதம் இசைக்கக்கூடிய கீதங்களாய் அமைந்தவை. அக்னியைப் போற்றும் மந்திரங்களின் தொகுப்பே இதுவெல்லாம். அக்னியின் துணை கொண்டு நாம் நலம் பெறவும், ஆற்றல் கொள்ளவும், வெற்றி காணவும் தேவையான வழிமுறைகளை உரைப்பது சாம வேதம்.

அதர்வண வேதம் மற்ற மூன்று வேதங்களில் சொல்லப்பட்டவைகளை ஒட்டியே அமைந்தது. பிருகு முனிவரின் மகனாகிய அதர்வணரால் இது தொகுக்கப்பட்டது. இது மனிதனின் வாழ்க்கை, அரசியல், வசியம், தீயசக்திகள் போன்ற விஷயங்கள் உள்ளடக்கியிருப்பது.

இறைவனைப் பற்றிய அறிவையும், தன்னை அறிந்து தெளிதற்கான வழியையும் கொண்டிருப்பது வேதத்தின் சிறப்பு. மனிதவாழ்வின் அத்தனை கூறுகளையும் தொட்டுச் செல்கிற வேதம், இக்காலத்துக்கும் பொருந்துவதாய் இருக்கிறது.

தொடரும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆனி உத்திரம்

## 'ஆடல் நாயகனின்' ஆனந்த நடனம்

ஆனி உத்திரம் அன்றைய தினம் ஆனந்தமான மன நிலையில் இருந்தார் ஆடல் வல்லோன். மகேசன் மகிழ்ச்சியாக இருந்தால் அடுத்து அவர் என்ன செய்வார் என்று நந்திதேவருக்குத் தெரியும். நந்திதேவர் தன் மிருதங்கத்தை எடுத்து சுருதி சேர்த்து வைத்துக் கொண்டார்.

நந்திதேவரின் மிருதங்க சத்தத்தைக் கேட்டு எட்டு திக்குகளிலும் இருந்த தேவரும், முனிவரும், யாவரும் கயிலை வந்து கூடினார்கள். இனிமையான தருணத்தில் அவர்கள் எதிர்பார்த்தபடி இடது பதம் உயர்த்தி ஆட ஆரம்பித்தார் இடபவாகனன். உமாமகேஸ்வரனின் அந்த நடனத்தில் உலகமே இணைந்து ஆடியது. எங்கும் உவகை பொங்கியது.

ஆடல் வல்லோனுக்கு ஆனந்தம் மேலும் பெருக அதிவேகமாக ஆடினார். அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஈரேழு உலகமும் நடுங்கியது. இடது பாதம் தூக்கிய நிலையில் அப்படியே நின்றார் நடேசன். வேகமாக ஆடியதால் வேகமாக மூச்சுவிட்டார். அதுவே உயிர்களின் பிராணவாயுவாக மாற, பெருமூச்சு விட்டார்கள் எல்லோரும்.

எப்பொழுதெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுகிறதோ! அப்போதெல்லாம் நடனம் புரிவார் நடேசன். அதனால் தான் நடராஜனின் திருவடிவை தரிசிக்கும் போதெல்லாம், நமக்குள்ளும் மகிழ்ச்சி பொங்கும், மனம் குளிரும், நிம்மதியும், சந்தோசமும், உற்சாகமும் ஊற்றெடுக்கும்.

சிவனின் சிவதாண்டவங்களோ ஏராளம் அவற்றில் இதோ சில:

சிவபெருமான் படைத்தலின்போது ஆடியது 'காளிகா தாண்டவம்,' காத்தலின் போது ஆடுவது 'சந்தியா தாண்டவம்' அழித்தலின் போது ஆடுவது 'சங்காரத் தாண்டவம்,' மறைத்தல் செயலின்போது ஆடுவது 'திரிபுர தாண்டவம்'. அருளல் செயலின் போது ஆடுவது 'ஊர்த்துவ தாண்டவம்,' ஐஞ்செயல்களை செய்யும் போது ஆடுவது ஆனந்த தாண்டவம். பார்வதிக்காக ஆடுவது 'கௌரி தாண்டவம்' கடல் அலைபோல் அசைந்து ஆடுவது "தரங்க நடனம், வண்டு மலரைக் குடைவது போல ஆடுவது" பிருங்க நடனம்" பித்தனைப் போல் தலை சுற்றி ஆடுவது "உன்மத்த நடனம்".

ஆடிடும் பாதம் தேடிடும் கண்கள்
நாடிடும் மனமோ கூடிடும் இசையில்
வாடிடும் வாழ்வில் சேர்ந்திடும் வளங்கள்
பாடிடும் சூடிடும் பரமனை நெஞ்சம்
ஹரஹர சிவசிவ தாண்டவ சங்கர
புரஹர நமசிவ குண்டல கங்கண
நரஹர நடனம் மனோஹர ரஞ்சித
கரஹர திகம்பர ஆண்டவ வல்லபா

சிவபெருமான் அபிஷேகப் பிரியராதலால், ஆனி உத்திர விழாவன்று எம்பெருமானுக்கு பால், நெய், தயிர், பன்னீர், தேன், இளநீர், சந்தனம், விபூதி, குங்குமம், பஞ்சாமிர்தம் ஆகியவற்றால் விஷேட அபிஷேகம் இடம் பெறும்.

ஆனி உத்திர தினத்தில் இரவு நடேசர் அபிஷேகம் நடைபெற்று உதயத்தில் ஆனி உத்திர தரிசனம் நிகழும். அபிஷேக பஞ்சாமிர்தம் சகல ரோக நிவாரணியாக, பக்தர்களுக்கு வழங்கப்படும். இதனை அருந்த ஆயுள், கீர்த்தி, புகழ், செல்வம் முதலிய நன்மைகள் வந்தடையும். ஒரு வருடத்தில் ஆடல் வல்லோனாகிய நடேசபெருமானுக்கு ஆறு அபிஷேகங்கள் இடம்பெறும்.

1.சித்திரைமாதம் - திருவோண நட்சத்திரத்தில்

2.ஆனி மாதம் - உத்திர நட்சத்திரத்தில்

3.ஆவணி மாதம் - பூர்வபக்க சதுர்த்தசியிலும்

4.புரட்டாசி மாதம் - பூர்வபக்க சதுர்த்தசியிலும்

5.மார்கழி மாதம் - திருவாதிரை நட்சத்திரத்திலும்

6.மாசிமாதம் - பூர்வபக்க சதுர்த்தசியிலும் அபிஷேகங்கள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மார்கழி திருவாதிரையன்று ஆருத்ரா தரிசனமும் நடைபெறும்.ஒவ்வொரு பொருளால் அபிஷேகம் செய்யும்போதும் ஒவ்வொரு பயன் கிடைக்கின்றது. அவையாவன:

| | | |
|---|---|---|
| நீர் | - | மனத்தூய்மை |
| பால் | - | ஆயுள்விருத்தி |
| தயிர் | - | உடலாரோக்கியம் |
| நெய் | - | மோட்சம் |
| தேன் | - | குரலினிமை |
| பழபஞ்சாமிர்தம் | - | செல்வம் |
| இளநீர் | - | சிறந்த புத்திரபாக்கியம் |
| விபூதி | - | பாவ விமோசனம், ஞானம் |
| சந்தனம் | - | சாயுச்சிய பதவி |
| குங்குமம் | - | மங்களம் |
| பன்னீர் | - | நல்வாழ்க்கை, புகழ் |

விஷேட அபிஷேகம் இடம்பெற்று அலங்காரம் முடித்து பூசை நிறைவேறியதும் நடேசப் பெருமான் சிவகாம சுந்தரி சமேதராக வீதி உலா வருவார். இவ் ஆனி உத்திர நன்நாளில் நடராஜர் தரிசனம் காண்பது விஷேடமானது. ஆடல் வல்லோனாகிய நடராஜ பெருமானை பாடி பணிந்து வணங்குவோமாக.

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை*





# சிதம்பர ரகசியம்

சிதம்பரம் என்றாலே ரகசியம் என்ற வார்த்தையும் உடன் சேர்ந்து கொள்கின்றது. பேச்சு வழக்காகிப்போன இந்த ரகசியத்தின் அர்த்தம் அனேகம்பேருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

திருவாரூரில் மண்ணாக, திருவண்ணாமலையில் நெருப்பாக, திருவானைக்காவலில் நீராக, திருக்காளத்தியில் காற்றாக வழிபடும் இறைவனை சிதம்பரத்தில் ஆகாய உருவில் வழிபடுவதுதான் அந்த ரகசியம்.

ஆலயத்தின் அந்த சபையில் ஸ்ரீ நடராஜ பெருமான் நடன கோலத்தில் காட்சி தருகிறார். அவருக்கு இடபக்கம் சிவகாமசுந்தரி அம்பாள் வீற்றிருக்கிறார்.

வலது பக்கம் திரை போடப்பட்ட நிலையில் சிறு வாயில் உள்ளது. நடராஜருக்கு ஆரத்தி காட்டப் பெறும்போது அந்த திரை அகற்றப்படும். அப்போது அந்த இடத்தில் அருவுருவம் எதுவும் தெரியாமல் தங்கத்தினால் ஆன வில்வதளமாலைகள் தொங்கவிடப்பட்ட நிலையில் தெரியும். இதற்கு அர்த்தம் தந்து இறைவன் அருள் வடிவில் (ஆகாயஉருவில்) உள்ளார் என்பதுதான். இதை பார்த்து தரிசித்து பிரார்த்தனை செய்தால் வேண்டியது வேண்டியபடியே கிடைக்கும் 100%.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸர்வ மங்களம் தரும்

# போற்றி வழிபாடு

ஓம் அப்பா போற்றி
ஓம் அரனே போற்றி
ஓம் அரசே போற்றி
ஓம் அமுதே போற்றி
ஓம் அழகே போற்றி
ஓம் அத்தா போற்றி
ஓம் அற்புதா போற்றி
ஓம் அறிவா போற்றி
ஓம் அம்பலா போற்றி
ஓம் அரியோய் போற்றி
ஓம் அருந்தவா போற்றி
ஓம் அணுவே போற்றி
ஓம் அண்டா போற்றி
ஓம் ஆதியே போற்றி
ஓம் ஆறங்கா போற்றி
ஓம் ஆரமுதே போற்றி
ஓம் ஆரணா போற்றி
ஓம் ஆண்டவா போற்றி
ஓம் ஆலவாயா போற்றி
ஓம் ஆரூரா போற்றி
ஓம் இறைவா போற்றி
ஓம் இடபா போற்றி
ஓம் இன்பா போற்றி
ஓம் ஈசா போற்றி
ஓம் உடையாய் போற்றி
ஓம் உணர்வே போற்றி
ஓம் உயிரே போற்றி
ஓம் ஊழியே போற்றி
ஓம் எண்ணே போற்றி
ஓம் எழுத்தே போற்றி
ஓம் எண்குணா போற்றி
ஓம் எழிலா போற்றி
ஓம் எளியா போற்றி
ஓம் ஏகா போற்றி
ஓம் ஏழிசையே போற்றி
ஓம் ஏறூர்ந்தாய் போற்றி
ஓம் ஐயா போற்றி
ஓம் ஒருவா போற்றி
ஓம் ஒப்பிலா போற்றி
ஓம் ஒளியே போற்றி
ஓம் ஒலியே போற்றி
ஓம் ஓங்காரா போற்றி
ஓம் கடம்பா போற்றி
ஓம் கதிரே போற்றி
ஓம் கதியே போற்றி
ஓம் கனியே போற்றி
ஓம் கலையே போற்றி
ஓம் காருண்யா போற்றி
ஓம் குறியே போற்றி
ஓம் குருவே போற்றி
ஓம் குணமே போற்றி
ஓம் கூத்தா போற்றி
ஓம் சடையா போற்றி
ஓம் சங்கரா போற்றி
ஓம் சதுரா போற்றி
ஓம் சதாசிவா போற்றி
ஓம் சிவமே போற்றி
ஓம் சிறந்தாய் போற்றி
ஓம் சித்தா போற்றி
ஓம் சீரா போற்றி
ஓம் சுடரே போற்றி
ஓம் சுந்தரா போற்றி
ஓம் செல்வா போற்றி
ஓம் செங்கணா போற்றி
ஓம் செம்பொன்னா போற்றி
ஓம் சொல்லே போற்றி
ஓம் ஞாயிறே போற்றி
ஓம் ஞானமே போற்றி
ஓம் தமிழே போற்றி
ஓம் தத்துவா போற்றி
ஓம் தலைவா போற்றி
ஓம் தந்தையே போற்றி
ஓம் தாயுமானவா போற்றி
ஓம் தாண்டவா போற்றி
ஓம் திங்களே போற்றி
ஓம் திசையே போற்றி
ஓம் திரிசூலா போற்றி
ஓம் துணையே போற்றி
ஓம் தெளிவே போற்றி
ஓம் தேவதேவா போற்றி
ஓம் தோழா போற்றி
ஓம் நமச்சிவாய போற்றி
ஓம் நண்பா போற்றி
ஓம் நஞ்சுண்டா போற்றி
ஓம் நான்மறையா போற்றி
ஓம் நிறைவே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான்

## போற்றி வழிபாடு

ஓம் நினைவே போற்றி
ஓம் நீலகண்டா போற்றி
ஓம் நெறியே போற்றி
ஓம் பண்ணே போற்றி
ஓம் பித்தா போற்றி
ஓம் புனிதா போற்றி
ஓம் புராணா போற்றி
ஓம் பெரியோய் போற்றி
ஓம் பொருளே போற்றி
ஓம் பொங்கரவா போற்றி
ஓம் மணியே போற்றி
ஓம் மதிசூடியே போற்றி
ஓம் மருந்தே போற்றி
ஓம் மலையே போற்றி
ஓம் மஞ்சா போற்றி
ஓம் மணாளா போற்றி
ஓம் மெய்யே போற்றி
ஓம் முகிலே போற்றி
ஓம் முக்தா போற்றி
ஓம் முதல்வா போற்றி
ஓம் வாழ்வே போற்றி
ஓம் வைரமே போற்றி

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து தர்ம சாஸ்திரம்

விவேகத்தின் அறிவுரைகளுக்கு மனிதா நீ செவி சாய்ப்பாயாக! அவளுடைய மொழிகளை இதயத்தில் இருத்துவாயாக. அவளுடைய கருத்துக்கள் உலகத்தில் யாவருக்கும் பொருந்தும். எல்லா நலன்களும் அவளைச் சார்ந்தே நிற்கின்றன. வாழ்க்கை துணைவியும் தலைவியும் அவளே!.

கடலில் நிற்கும் பாறை போல அவன் உறுதியுடன் இருக்கிறான். அலைகளின் மோதல் அவனை அசைவுறச் செய்வதில்லை. குன்றின் மீதுள்ள கோபுரம் போன்று அவன் தலையை நிமிர்த்துகிறான். செல்வம் ஏந்திய அம்புகள் அவன் பாதங்களில் வீழ்கின்றன.


ஒருவனையும் சோதிக்காமல் நம்பி விடாதே! காரணமற்றும் ஒருவனையும் சந்தேகிக்காதே! இது நியாயமற்றது. ஒருவனது நேர்மையை உணர்ந்த பிறகு உன் இதயத்தில் அவனை வைத்து பொக்கிஷம் போல் போற்றுவாயாக. அவனை விலை மதிக்க முடியாத மாணிக்கமாக கருதுவாயாக.

எது நாளை தேவைப்படுமோ அதை இன்று பயன்படுத்தாதே. எதை முன்யோசனையால் பெறக்கூடுமோ, அதை அசட்டையாக கவனியாமலிராதே. ஆனால் விவேகத்தினின்றும் கூட நிச்சயமாக வெற்றி எப்போதும் உண்டு என்று எண்ணாதே. ஏனெனில் இரவில் என்ன நேரப்போகிறது என்பதை பகல் அறியாது.

உன்னுடைய பொழுது போக்கு கேளிக்கைகள் அதிகம் செலவற்றதாக இருக்கட்டும். ஏனெனில் அதைப்பெறுவதில் அடையும் 'துன்பம்' அதனால் வரும் இன்பத்தை மிஞ்சாமலிருக்க வேண்டும். செழுமை உன்னுடைய முன்யோசனையை பாதிக்காமலிருக்க வேண்டும். செல்வம் சிக்கனத்தின் கரங்களை வெட்டி விடாமலிருக்க வேண்டும். தேவையற்ற ஆடம்பரத்தில் திளைப்பவன் தேவையான பொருட்களுக்கே திண்டாடும் நிலை அடைவான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை நட்சத்திரம் ஆகிய தினங்களில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாமா?



அமாவாசை முன்னோரை வழிபடும் நாள். பௌர்ணமியும், கார்த்திகை நட்சத்திர நாளும் விரதம் இருக்க வேண்டிய நாட்கள். பஞ்சாங்கத்தில் பௌர்ணமி விரதம், கார்த்திகை விரதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். வருடம் முழுவதும் வரும் பௌர்ணமி மற்றும் கார்த்திகை தினங்களில் பலதரப்பட்ட விரதங்கள் தென்படும்.

அவற்றைச் செயல்படுத்தும் வேளையில், எண்ணெய் தேய்த்துக் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். விரதத்தின் பயன் முழுமை பெற அது உதவும்.

## திருவிழாக் காலத்தில், வீதியுலா முடிந்ததும் ஸ்வாமிக்கு திருஷ்டி கழிப்பது ஏன்?

தாய், தன் சேய்க்குப் பட்டாடை அணிவித்து, அலங்கரித்து, கண்ணுக்கு மை இடுவாள். ஒரு கணம் அந்த அழகைப் பார்த்து ரசிப்பாள். சட்டென்று விழித்துக் கொண்டு 'கண்பட்டு விடுமோ' என்ற பயத்தில், விரலில் இருக்கும் மையை குழந்தையின் கன்னத்தில் இடுவாள். நிம்மதி பெறுவாள்.



பூப்பூத்த நங்கையின் முகத்தில் அழகு ஜொலிக்கும். அவளின் கன்னங்களில் சந்தனம் பூசுவார்கள். பரதேசிக் கோலத்தில் மாப்பிள்ளையின் முகம் வசீகரத்துடன் மிளிரும். அவனின் கன்னங்களில் திருஷ்டிப் பொட்டு வைத்து விடுவார்கள். குழந்தைக்கோ, நங்கைக்கோ, மாப்பிள்ளைக்கோ... அவர்கள் மனதில் எந்த நெருடலும் இல்லை. ஆனால், நெருங்கிய உறவினர்களின் மனம் நெருடும். அதுபோல், 'ஸ்வாமிக்கு கண்பட்டு விடுமோ!' என்று நமக்குத்தான் நெருடல். ஸ்வாமிக்கு அல்ல! அதன் காரணமாகவே அவருக்கு திருஷ்டி கழிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண நாளை ஆங்கிலத் தேதிப்படி கொண்டாட வேண்டுமா? அல்லது தமிழ் மாத நட்சத்திரத்தின்படி கொண்டாட வேண்டுமா?



வேத காலத்திலிருந்து வருடம், மாதம், திதி, நட்சத்திரம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து வருகிறோம். பழக்கப்பட்ட ஒன்றை விட்டு விட்டு, புதியதை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? தெளிவான ஒன்றை விட்டு விட்டு, மற்றொன்றைப் பின்பற்றுவது தேவையற்றது.

நமது திருமணத்துக்கும் அதை நிகழ்த்தும் காலத்துக்கும் தனிப் பெருமை உண்டு. திருமண நாளைத் தமிழ் மாதத் தேதி, நட்சத்திரத்தின்படி கொண்டாடுவதே பொருந்தும். பிறரை மகிழ்விக்க நாம் திருமண நாளைக் கொண்டாடுவதில்லை. நமது மகிழ்ச்சியைப் புதுப்பிக்கவே கொண்டாடுகிறோம். அந்தக் கொண்டாட்டம் நமது பண்பாட்டுடன் இணைந்து செயல்பட்டால், அதற்குத் தனிப் பெருமை உண்டு.

# மகாவிஷ்ணு போல் சிவபெருமானுக்கும் அவதாரங்கள் உண்டா?



தேவைப்படும்போது சிவபெருமானும் அவதாரம் பண்ணியிருக்கிறார். சரபாவதாரம் அவருடையதுதான். விஷ்ணுவுக்கு இணையாக சிவபெருமானும் அவதாரங்களை ஏற்றார் என்று சைவ நெறி நூல்கள் விளக்குகின்றன. முன்பு நிகழ்ந்த (அதாவது கலியில்) ஆதிசங்கரின் தோற்றத்தை சிவபெருமானின் அவதாரமாகச் சொல்லுவதுண்டு. ஆன்ம சுகம் அளிக்கும் வள்ளல் பெருமானாகத் தோன்றியவர் சங்கரர். தட்சிணாமூர்த்தி உருவில் தோன்றிய சிவபெருமான் மௌனத்தைக் கலைத்து சங்கரர் ஆனார் என்றும் சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளி ஜோசியம் பலிக்குமா?



கிளி எடுத்துக் கொடுக்கும் சீட்டு ஜோதிடம் அல்ல. அது அடிப்படை இல்லாத ஒரு நம்பிக்கை. நம் மனம் நல்லதை விரும்பும். கெடுதலை சந்திக்கத் தயங்கும். கெடுதலில் இருந்து விலகத் துடிக்கும். கிளி எடுத்த சீட்டு தனக்கு சாதகமாக இருந்தால், சந்தோஷப்படுவர். பாதகமாக இருந்தால், வருத்தப்படுவர். அத்தோடு நிற்காமல் மற்றுமொரு ஜோதிடரை அணுகுவர். சாதகமான பதில் கிடைத்தால் நிறுத்தி விடுவர். அவரவர்களது மன இயல்பை வெளிப்படுத்துகிறது அது.

# விரதநாளில்...



உடலும் உள்ளமும் வலுாக இருப்பவர்கள் விரதநாள் முழுவதும் எதுவும் உண்ணாமல் விரதம் இருக்கலாம். தண்ணீர் அருந்துவது விரதத்தைக் கெடுக்காது. சில விரதங்களில் இரவில் மட்டும் உணவருந்தலாம். உடல் உள்ளம் ஆகியவை பலவீனமாக இருந்தால் மதியம் உணவையும், இரவில் பலகாரத்தையும் எடுத்துகொள்ளலாம். அரிசி உணவு மட்டும் உண்பவரானால், அதை தவிர்த்து, கோதுமையைப் பயன்படுத்தலாம். அதாவது விரதத்தன்று அரிசியை முற்றிலுமாக விலக்கி, மற்ற பண்டங்களைப் பயன்படுத்தலாம்.

வீம்புக்காக உணவை முற்றிலுமாகத் துறப்பது தவறு. உடல் நலத்தை கருத்தில் கொண்டு விரதத்தில் மாற்றம் செய்ய, தர்ம சாஸ்திரம் அனுமதிக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோயில் சுவர்களில் காவியும், வெள்ளையும் கலந்து அடிப்பதன் தாத்பரியம்



வெண்மை - ஸத்வ குணத்தைக் குறிக்கும். சிவப்பு ரஜோ குணத்தைக் குறிக்கும். ஸத்வ குணம் அமைதியை அளிக்கும். ரஜோ குணம் செயல்படத் தூண்டும். உலக வாழ்க்கைக்கு இரண்டும் தேவை. மனத் தெளிவு வேண்டும். அதைப்பெற நல்ல செயல்பாடு வேண்டும். கடவுளை மனதில் நிறுத்தியோ, அவருக்கு பணிவிடை செய்தோ வழிபடலாம். பிரம்மோத்ஸவம், தேர் திருவிழா போன்ற கோலாகலமான வழிபாடுகளும் உண்டு. ஏகாதசி போன்ற சிறப்பு நாட்களில் மனதில் தியானம் செய்து வழிபடுவதும் உண்டு.

உயிரினங்களின் படைப்பு ராஜோ குணத்தின் சேர்க்கையால் நிகழ்கிறது. ஆகையால் செயல்பாட்டுக்கு அடையாளம் சிறப்பு. ஸ்த்வ குணத்தின் அடையாளம் வெண்மை. போரில் வெள்ளை நிறக் கொடியை அசைத்தால், சமாதானமாகப் போக விரும்புகிறார்கள் என்று எடுத்துகொள்வார்கள்.

## பில்லி, சூனியம் பற்றி சாஸ்திரம் என்ன சொல்கிறது?



பில்லி, சூனியம் என்பது இல்லாத ஒன்று. அது ஒரு மன பிரமை. இல்லாத ஒன்றை சாஸ்திரம் எப்படி விளக்கும்? அடிப்படை இல்லாத ஒரு நம்பிக்கை, வைதிகத்துக்கு எதிராக, தந்திர சாஸ்திரத்தின் துணையுடன் எப்படியோ வளர்ந்து விட்டது. நியாயமான வழியில் கடமையை ஆற்றும் மக்களுக்கு அதில் நமபிக்கை வராது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞான யோக தியானம்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

63 நாயன்மார்களும் 18 சித்தர்களும் பெற்ற ஞான கண்ணாகிய அறிவு கண்ணை (ஆறாவது அறிவு) கண்ணை குரு அருளாள் திறக்கவும்.

இப்பிறவியிலேயே வீடுபேறு பெறவும் மரணமில்லா பெருவாழ்வு வாழவும். இவ்வுடம்பிலேயே இறைவனின் திருவடியை கண்டு ஜோதி தரிசனம் பெறவும் இறைவனுடன் இணையும் அதி உன்னத 18 சித்தர்களின் சூஸ்ம தியானம்.

பொய்ஞானம் விடுத்து மெய்ஞானம் என்ன வென்று (அறிவை) அறியவும். திருவாசகம், திருஅருட்பா, மெய்ஞானபோதம், சிவஞானபோதம், ஔவைகுறளில் கூறப்பட்ட (சைவசித்தாந்த வேதத்தின் மெய் பொருள் காண்பது அறிவு) என்ன என்பதை அறியவும் ஞானயோகம் என்றால் என்ன? பக்தி யோகம் என்றால் என்ன? உடல் தியானமா? உயிர் தியானமா? (உயர் தியானம்) என்ன என்று அறியவும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

**உயர் மெய்ஞான விளக்கம் விபரங்களுக்கு முன் அனுமதி பெற்றிட தொடர்பு கொள்ளவும்**

**பிரம்மஸ்ரீ ஸ்ரீலஸ்ரீ ஞானகுரு ஜோதிதாஸன்.**

ஆன்மிக விழிப்பு பெற ஓர் அரிய சந்தர்ப்பம்
ஜோதி குரு ஞான சபை
வள்ளலார் சித்தர் பீடம்

**No 7/3, Davidson Road, Bambalapitiya T.P: 0785308215**
**Wellawatte, Colombo 06. T.P: 0115711775**




இலவச திருமண சேவை (உள்நாடு, வெளிநாடு) இந்து மணமக்களை பெற்றுக் கொள்ளவும், ஜாதகபலன், வருஷபலன், திருமண பொருத்தம் பார்க்கவும், ஜாதக தோஷ பரிகாரங்கள் நிவர்த்திகளைப் பெற்றிடலாம். உங்கள் பிரச்சினை எதுவானாலும், திருமணத் தடை, புத்திரபாக்கியமின்மை, கணவன், மனைவி பிரிவு, வெளிநாட்டு பிரயாணத் தடை, கல்வி, தொழில், வியாபார விருத்தி பெற்றிடலாம்.

## பிரேமி ஜோதிட நிலையம்

NO 7/3, DAVIDSON ROAD, BAMBALAPITIYA
TP:0785308215




தையல்கலை பயிற்சி வகுப்பு
நேரில் தபால்மூலம் கற்பிக்கபடும்.
**BOMBAY CUTTING INDIAN TAILORING**
பெண்களுக்கான ஆடைகள் சாரி பிளவுஸ்கள்,
சல்வார் தைத்து கொடுக்கப்படும்.
(இல்லத் அரசிகள் அன்புடன் அழைக்கலாம்.)

## VAANIE TAILORING



7/3, Davidson Road, Bambalapitiya, Colombo 04. Tel: 075 7223672

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்யாகுமரி

# ஸ்ரீ பகவதி அம்மன் ஆலயம்



கடலலை தாலாட்டும் குமரி திருக்கோயில்

சக்தி பீடங்களில் ஒன்றாக கன்யாகுமரி, திருநெல்வேலியிலிருந்து 82 கி.மீ. தூரத்திலும், நாகர்கோவிலிலிருந்து 19 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. பாரதத்தின் 108 துர்கை ஆலயங்களில் இதுவும் ஒன்று. மேற்கண்ட இரு ஊர்களிலிருந்தும் கன்யாகுமரிக்குச் செல்ல பேருந்து, ரயில் மற்றும் வாடகை கார் வசதி உண்டு. கன்யாகுமரியில் தங்குவதற்கு விடுதிகள் உள்ளன. விமானம் மூலம் திருவனந்தபுரம் அல்லது மதுரை வந்து அங்கிருந்தும் இந்தத் தலத்தை அடையலாம்.

'மகிமை மிக்க தீர்த்தக் கட்டம்' என்று புராதனமான கன்யாகுமரியை வால்மீகி ராமாயணம் மற்றும் வியாச பாரதம் சிறப்பிக்கிறது.

ராமபிரான் இலங்கை கிளம்புமுன், கன்யாகுமரி வந்து அன்னை பகவதியை வணங்கியதாக 'சேது புராணம்' குறிப்பிடுகிறது. எனவே, இது ஆதிசேது என்றும் அழைக்கப்படுகிறது.

குருஷேத்திர யுத்தத்தில் கலந்து கொள்ள விரும்பாமல் தீர்த்த யாத்திரை மேற்கொண்ட ஸ்ரீபலராமர் கன்யாகுமரிக்கும் வந்ததாக பாரதம் கூறுகிறது.

பாண்டவர்களுள் ஒருவரான அர்ஜுனனும் குமரி அம்மனை தரிசித்ததாகக் கூறப்படுகிறது.

கொல்லூர் - மூகாம்பிகா, வடகரா - லோகாம்பிகை, பாலக்காடு - ஹேமாம்பிகை, கொடுங்கல்லூர் - மகா பகவதி, கன்யாகுமரி - பாலாம்பிகா ஆகிய ஐந்தும் ஸ்ரீபரசுராமரால் நிறுவப்பட்ட ஷேத்திரங்கள். இவை பஞ்ச பகவதி தலங்கள் எனப்படுகின்றன.

இந்தியாவின் புண்ணிய தீர்த்தங்களில் கன்யாகுமரி சிறப்பிடம் பெற்றுள்ளதை,

*இமயப் பொருப்பகத் தீராண் டுறைந்த பின்*
*குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்*
*தரும யாத்திரையெனத் தக்கிணம் போந் துழி...*

\- பெருங்கதை

*கங்கையாடிலென் காவிரியாடிலென்*
*கொங்கு தண் குமரித்துறை யாடிலென்.....*

\- அப்பர்


*வடவேங்கடம் தென் குமரி*
*ஆயிடைத் தமிழகம்...*

\- தொல்காப்பியம்

ஆகிய பாடல் வரிகள் மூலம் உணரலாம்.

வாரணாசியைச் சேர்ந்த அபஞ்சிகனின் மனைவி சாலி. இவள் கற்புநெறி வழுவி, பின்னர் குற்றத்தை உணர்ந்து, தென்குமரிக்கு நடைபயணமாகச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்யாகுமரி ஸ்ரீபகவதியம்மன்


தீர்த்தமாடி தனது பாவத்தைப் போக்கிக் கொண்டதாக மணிமேகலை நூல் கூறுகிறது.

முக்கடல் சங்கமிக்கும் குமரிக் கரையில் உள்ள மண் 7 வித நிறங்களில் காணப்படுகிறது. மேலும் இங்கு நிகழும் சூரியோதயம் மற்றும் அஸ்தமனம் மற்றும் சந்திரோதயத்தையும் காணலாம்.

முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'பெரிப்ளஸ் ஆ.'.ப் தி எரித்ரியன் ஸீ' என்ற கிரேக்கப் புத்தகம், கன்யாகுமரியை முக்கியமான தீர்த்த தலங்களுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது.

ஜாவா தீவிலிருந்து பார்க்க இயலாத துருவ நட்சத்திரத்தை, குமரிமுனையிலிருந்து சுமார் 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோயில் விமானங்கள்

கி.மீ. தூரம் பயணித்து, தான் பார்த்ததாக மார்க்கோபோலோ என்ற வெனிஸ் யாத்ரீகர் தனது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்போது கன்யாகுமரி கொடிய விலங்குகள் வசிக்கும் வனமாக விளங்கியது என்றும் அவர் கூறியுள்ளார்.

குமரித்துறை முதலில் பாண்டியரின் ஆதிக்கதில் இருந்து, பின்னர், அது மாறி மாறி சோழர் மற்றும் சேர ஆதிக்கத்துக்கு உட்பட்டதாயிற்று.

பகவதி அம்மனை மூவேந்தர்களும் போற்றியுள்ளனர். பாண்டியர்களுக்கு குமரி அன்னை குலதெய்வமாக விளங்கியுள்ளாள். சுமார் 15-ம் நூற்றாண்டில் கன்யாகுமரி சேர நாட்டுடன் இணைந்தது. அதனால் பாண்டிய சோழ-சேர மன்னர்கள் பகவதி அம்மன் கோயிலுக்கு திருப்பணிகள் செய்துள்ளனர். திருவாங்கூர் சமஸ்தானத்தில் இடம்பெற்றிருந்த கன்யாகுமரி மாவட்டம், மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. அதன்பிறகு கன்யாகுமரியும், மண்டைக்காடும் தமிழ்நாட்டுக் கோயிலாக ஆகிவிட்டன.

முன்னொரு காலத்தில் பகன், முகன் என்ற அசுரர் இருவர் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தனர். தேவர்கள், காசி விஸ்வநாதரிடம் சென்று முறையிட்டனர். அசுரர்களை அழிக்க காசி விஸ்வநாதர் இரண்டு பெண்களைப் படைத்தருளினார். அவர்களுள் ஒருத்தி வடக்கே (கொல்கத்தா) உள்ள காளிதேவி. மற்றொருத்தி தெற்கே கன்யாகுமரியின் பகவதியம்மன். இவர்கள் பகன் - முகனை அழித்ததுடன் பாரதத்துக்கு தீங்கு நேராமலும் காத்தருள்கின்றனர்.

வசுதேவர், தேவகியை சிறையில் அடைத்தான் கம்சன். அவர்களுக்குப் பிறக்கும் ஒரு குழந்தை தன்னை அழிக்கும் என்ற அசரீரியால் பயந்தான் கம்சன். எனவே, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளைத் தொடர்ந்து அழித்தான். எட்டாவதாகப் பிறந்தான் கண்ணன். இந்தப் பிள்ளையைக் காப்பாற்ற வசுதேவர் விரும்பினார். எனவே, இரவோடு இரவாக கோகுலம் சென்று கண்ணனை யசோதையிடம் சேர்ப்பித்தார். அதற்கு பதிலாக அங்கிருந்த பெண் குழந்தையை எடுத்து வந்து தேவகியின் அருகில் கிடத்தினார். கம்சன், வழக்கம்போல் குழந்தையைக் கொல்ல வந்தான். ஆனால், அந்தக் குழந்தை அந்தரத்தில் மறைந்தது. அதுவே அன்னை சக்தி.

அவளே பகவதி என்ற பெயரில் கன்யாகுமரியில் கம்சனை காலால் உதைத்த பாவம் நீங்க, இறைவனை நோக்கித் தவம் செய்தாள். அவளின் பேரழகைக் கண்டு அவளை மணக்க விரும்பினார் சுசிந்திரம் தாணுமாலயன். தேவர்களிடம் தமது விருப்பத்தைக் கூறினார் (அப்போது தேவர்கள் வந்து கூடிய இடமே சுசீந்திரத்தில் கன்னியம்பலம் எனப்படுகிறது). தாணுமாலயரின் விருப்பம் நிறைவேறினால் பகவதியின் தவம் தடைபடும். தங்களுக்குத் தொல்லை தரும் பாணாசுரனை அழிக்க முடியாது என்று வருந்தினர் தேவர்கள். அப்போது அங்கு வந்த நாரதர், திருமணத்தை தான் முடித்து வைப்பதாகக் கூறி, தாணுமாலயரிடம் இரண்டு நிபந்தனைகள் விதித்தார். ஒன்று கண்ணில்லாத தேங்காய், காம்பில்லாத மாங்காய், நரம்பில்லாத வெற்றிலை, கணு இல்லாத கரும்பு மற்றும் இதழ் இல்லாத மலர் ஆகியவை சீதனப் பொருள்களாக வேண்டும். இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயத்துக்கு ஒரு நாழிகை முன்பாக மணமகன் மணவறைக்கு வர வேண்டும்.

இதன்படி தாணுமாலயக் கடவுள் சீதனப் பொருள்களை முதலில் அனுப்பினார். ஐந்து மைல் தூரத்தைக் கடக்க நள்ளிரவிலேயே புறப்பட்டார். உடனே நாரதர் சேவல் உருவெடுத்து உதயத்துக்கு அடையாளமாகக் கூவினார். (நாரதர் கூவிய இடத்தில் இன்றும் சேவலின் கால் தடம் தென்படுகிறது என்கிறார்கள்). அதனால் முகூர்த்த நேரம் தவறி விட்டதாகக் கருதிய தாணுமாலயக் கடவுள் 'தாம் வழுக்கி விட்டோம்' என்ற அவமானத்துடன் சுசீந்திரம் திரும்பினார். அவர் வழுக்கிய இடமே தற்போது 'வழுக்குப் பாறை' எனப்படுகிறது. திருமணம் தடைப்பட்டதால் கோபம் கொண்ட குமரி பகவதி தனக்கு வந்த சீதனப் பொருள்களை கடலில் வீசி எறிந்தாள். அவையே குமரிக்கரையில் ஏழு வண்ண மணலாகவும், குன்றுகளாகவும் பரவிக் கிடக்கின்றன என்கிறார்கள்.

பரமன் தன்னை ஏமாற்றிவிட்டதாகக் கருதிய குமரி பகவதி ஆக்ரோஷமாக நடனமிட்டாள். அண்டங்கள் அதிர்ந்தன! அதன் பின், இனி திருமணமே வேண்டாம் என்று முடிவெடுத்த குமரி மீண்டும் தவம் செய்யத் தொடங்கினாள். நடந்ததை அறிந்த பாணாசுரன் பகவதியைக் காண வந்தான். அவள் அழகில் மனதைப் பறிகொடுத்தான். 'என்னை மணந்துகொள்' என்று விண்ணப்பித்தான். அதை மறுத்து தேவி கூறிய எதையும் அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அதுமட்டுமின்றி, தன்னை மணம் புரியாவிட்டால் கொன்று விடுவதாகவும் தேவியை மிரட்டி தனது உடைவாளை உருவினான். வெகுண்டெழுந்த பகவதி, அவனுடன் போரிட்டு அவன் தலையைத் துண்டித்தாள். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்!

திருமணத்துக்காகக் காத்திருந்த தேவி பரமனைக் காணாததால் சமைத்த சாதம் மணலாகும்படி சபித்தாள். அதனால் இந்தக் கடற்கரையின் மணல் முழுவதும் அரிசி, நொறுங்கிய அரிசி, தவிடு ஆகிய வடிவங்களில் காணப்படுகின்றன.

மன்னன் பரதனுக்கு எட்டு புதல்வர்களும், ஒரு புதல்வியும் இருந்தனர். அவன், பிள்ளைகள் ஒன்பது பேருக்கும் தனது நாட்டைப் பகிர்ந்தளித்தான். அவன் தன் மகளான குமரி என்பவளுக்குக் கொடுத்தது இந்தியாவின் தென் முனையான குமரியம்பதி. அவள் ஆட்சி செய்த இடமே இன்றைய குமரிமுனை என்பர்.

கன்யாகுமரி பகவதியம்மன் கோயிலில் இரு பிராகாரங்கள் உள்ளன. வடக்கில் பிரதான வாயில். வெளிப் பிராகாரம் அகலமானது. இங்கு தினமும் அம்மன் உலா நடைபெறும். இதை அடுத்து துவஜஸ்தம்பமும், பலிபீடமும் உள்ளன. இந்தப் பிராகாரத்தையொட்டி ஊஞ்சல் மண்டபம், உள் பிராகாரத்தில் மணி மண்டபம் மற்றும் சபா மண்டபமும் உள்ளன. மணிமண்டபத்தை ஆறு வட்டத் தூண்கள் தாங்குகின்றன.

மகா மண்டபச் சுவரின் மேல் வரிசையில் புராண சிற்பங்களும் மண்டப மேற்கூரைப் பகுதியில் ஓவியங்களும் காணப்படுகின்றன. இந்தப் பிராகாரத்தின் தென்மேற்கு கோடியில் (கன்னி மூலையில்) சூரிய பகவான் சிலையும் இந்திர விநாயகர் சந்நிதியும் உள்ளது.

2-ம் பிராகாரத்தில் பாதாள கங்கை என்ற கிணறு உள்ளது. பூஜை மற்றும் அபிஷேகத்துக்கு சுரங்கப் பாதை வழியாக இங்கு வந்து பூசாரி தண்ணீர் கொண்டு வருவார். விழாக் காலத்தில் ஸ்ரீசக்கரத் தீர்த்தத்தின் அருகிலுள்ள பால் கிணற்றிலிருந்து வெள்ளிக் குடங்களில் நீரெடுத்து, யானை மேல் ஏற்றி பூஜைக்கு எடுத்துச் செல்வார்கள்.


குமரி பகவதிக்கு தோழிகள் இருவர் உள்ளனர். அவர்களில் ஒருவர் கோயிலின் வடக்கில் தியாக சுந்தரியாகவும், மற்றவர் வடமேற்கில் பாலசுந்தரியாகவும் தரிசனம் தருகிறார்கள்.

பகவதியின் காவல் தெய்வம் பைரவர். சக்தி பீடங்களில் முதலில் பைரவரை வணங்க வேண்டும். இவரை தரிசித்த பிறகே அன்னையை தரிசிப்பர்.

பகவதியம்மனின் வலக் கரத்தில் ருத்திராட்ச மாலையும், இடக் கரத்தை தொடை மீது வைத்தும் நின்றவாறு தவக் கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறாள். தலைக் கிரீடத்தில் பிறைச் சந்திரனும், மூக்கில் வைர மூக்குத்தியும் ஜொலிக்கின்றன.

குமரி பகவதிக்கு கன்னி தெய்வம், அபர்ணா, கன்னிகா பரமேஸ்வரி, பகவதி அம்மன் என்ற பெயர்களும் உண்டு. பண்டைய காலத்தில் இவளை சங்கரி, கௌரி, ஆர்யா, சாமரி, குமாரி, சூலி, நீலி, செய்யாள், கொற்றவை ஆகிய பெயர்களாலும் அழைத்தனராம்.

இங்கு வந்த அகத்தியர், உக்கிரமான துர்கையை சாந்தமான கன்னி வடிவில் தரிசிக்க விரும்பினார். அதை உணர்ந்த தேவி, கன்யாகுமரி அம்மனாக கோயில் கொண்டு அருள்கிறாள் என்பது ஐதீகம்.



**சுசீந்திரம் ஸ்ரீதாணுமாலய ஸ்வாமி திருக்கோயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவதி விக்கிரகத்தின் மேல் பகுதி சொர சொரப்பாகக் காணப்படுகிறது. இதை ருத்திராட்ச விக்கிரகம் என்பர். கொடிமரம் அருகில் உள்ள கல்வெட்டு, இந்த விக்கிரகத்தை 'ருத்திராட்சவிக்கிரகம்' என்கிறது.

குமரி அம்மனின் மூக்குத்தி மகிமை மிக்கது. பனை ஏறும் தொழிலாளியான வீரமார்த்தாண்டன், ஒருமுறை அபூர்வமான ரத்தினக் கல் ஒன்றைக் கண்டெடுத்தாராம். அதை அவர், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மனிடம் தர, மன்னர் அதை மூக்குத்தியாக்கி (கி.பி.18- ஆம் நூற்றாண்டில்) குமரி பகவதிக்கு சமர்ப்பித்ததாகவும் கூறப்படுகிறது.

ஒரு முறை ஜப்பான் நாட்டைச் சார்ந்த கப்பல் ஒன்று கடலில் திசை மாறிச் சென்றது. ஆனால், பகவதியின் மூக்குத்தி ஒளியைக் கண்ணுற்ற அதன் மாலுமிகள் கப்பலை குமரிக்கரை நோக்கித் திருப்பினராம். அப்படியும் கப்பல் கட்டுப்பாட்டை இழந்து (தற்போது விவேகானந்தர் ஆலயம் உள்ள) பாறையில் மோதி உடைந்ததாகவும் தகவல் ஒன்று உண்டு. இதனால் பெரும்பாலும் மூடப்பட்டிருக்கும் கோயிலின் கிழக்கு வாயில் திருக்கதவு ஆராட்டு, திருக்கார்த்திகை, விஜயதசமி இரண்டு அமாவாசைகள் ஆகிய ஐந்து தினங்களில் மட்டுமே திறக்கப்படுகிறது.

அம்மன் மூக்குத்தி கல் குறித்து மற்றொரு கதையும் உண்டு. வீரசூரன் என்பவனை தீண்ட வந்த நாகமொன்று, அவனை நெருங்கி நாகமணியைக் கக்கியதாம். உடனே சாணத்தால் அதை மூடினானாம் வீர சூரன். அந்த நாகமணியை அரசன் மார்த்தாண்டனிடம ஒப்படைத்தான். மன்னர் அதை மூக்குத்தியாக்கி கன்னி பகவதிக்கு அர்ப்பணித்தாராம்.

ஒரு முறை கடற் கொள்ளையர்கள் அம்மனின் மூக்குத்தியைத் திருடத் திட்டமிட்டனர். ஆனால், அம்மனின் சக்தியினால் கொள்ளையர்களது கப்பல் நொறுங்கியதாம். தப்பிப் பிழைத்த கொள்ளையர்கள் கோயிலுக்குள் சென்று மூக்குத்தியை எடுக்க முயன்ற போது அவர்களது பார்வை பறிபோனதாம். அந்த இடத்திலேயே தத்தளித்தனர். விடிந்ததும் கோயில் சிப்பந்திகள் அவர்களை மன்னரிடம் ஒப்படைத்தனராம். அன்று முதல் மன்னனின் கட்டளைப்படி கிழக்குக் கதவை மூடினர். அதற்கு பதிலாக அந்தக் கதவில் அமைக்கப்பட்ட சிறிய துவாரத்தை இன்றும் காணலாம்.

மூக்குத்தி தொடர்பான மற்றொரு தகவல்: குமரி அம்மனின் அழகான நாகமணி மூக்குத்தியை கிழக்கு வாசல் வழியாக வந்த ஒருவன் அபகரித்துச் சென்று விட்டானாம். அதன் பிறகு திருவிதாங்கூர் மன்னர், கோயிலுக்குக் காணிக்கையாக வழங்கிய இரண்டு வைரங்களே அன்னையின் மூக்குத்தியில் இடம் பெற்றிருக்கிறது என்கிறார்கள்.

மைசூரை ஆட்சி செய்த திப்பு சுல்தானது படையெடுப்பின்போது இங்குள்ள பகவதியின் கைவாளின் முனை பின்னமடைந்தது. அந்த வாளோடுதான் தேவி இப்போதும் திகழ்கிறாள்.


பகவதியம்மன் கோயிலையொட்டிய வடக்கு வீதியில் சிறிய கோயில் ஒன்றில் காட்சியளிக்கும் பத்ரகாளிக்கு வழிபாடு நடந்த பிறகே குமரி பகவதி கோயிலின் எந்த விழாவையும் தொடங்குவார்களாம். இந்த பத்ரகாளியே சக்தி பீட நாயகி என்றும் சிலர் சொல்கிறார்கள்.

இங்கு ஒன்பது தீர்த்தங்கள் உள்ளதாக ஐதீகம். கிழக்கே (வங்காள விரிகுடாவில்) சாவித்திரி, காயத்ரி, சரஸ்வதி, கன்யா மற்றும் விநாயக



சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாள் கருவறை விமானம்

தீர்த்தங்கள். வடக்கே பாபவிநாச தீர்த்தம். தெற்கே (இந்துமாக் கடலில்) மாதரு, பித்ரு தீர்த்தங்கள். மேற்கே (அரபிக் கடலில்) - ஸ்தாணு தீர்த்தம். சித்திரை விஷு, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடி தட்சிணாயண புண்ணிய காலம், ஆடி அமாவாசை, புரட்டாசி மஹாளய அமாவாசை, நவராத்திரி, தை உத்தராயண புண்ணிய காலம், தை அமாவாசை, பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் இவற்றில் நீராடி அருள் பெறுகின்றனர்.

ஒரு காலத்தில் பகவதிக்கு மிருக பலி கொடுக்கப்பட்டதாம். தற்போது மஞ்சள் நீரில் சுண்ணாம்பு கலந்த சிவந்த நீரால் குருதி பூஜை நடத்தப்படுகிறது.

காசி விஸ்வநாதரின் அம்சமான பகவதியை தரிசித்தால்தான் காசி யாத்திரை முழுமை அடையும் என்பது நம்பிக்கை.

குமரி பகவதியம்மன் ஆலயத்துக்குள் ஆண்களுக்கு சட்டை அணிந்து செல்ல அனுமதியில்லை.

குழந்தையில்லாத தம்பதி இங்கு வந்து பதினொரு

GTV Enterprises (Pvt) Ltd.



வெளிநாடுகளுக்கு
விரைவாக பொதிகள்
அனுப்பும் சேவைக்கு...
இன்றே நாடுங்கள்!

18/3, Dr. E.A.Cooray Mawatha, Colombo 06.
Tel: 011 4654444 / 011 2360926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிகைகளுக்கு பூஜை செய்து வஸ்திரதானம், அன்னதானம் ஆகியவை செய்தால் குழந்தை பிறக்கும் என்பது ஐதீகம். இது கன்யா பூஜை எனப்படும்.

குமரி பகவதியம்மன் கோயில் கேரளத்துடன் இணைந்திருந்தபோது மேற்கொள்ளப்பட்ட பூஜா விதிகளே இன்றளவும் வழக்கத்தில் உள்ளது. தலைமைப் பூசாரி 'மேல் சாந்தி' எனப்படுவார்.

தினசரி 11 கால பூஜை நடக்கும் கோயில் இது. கேரளத்தின் போற்றிகள் எனப்படும் பூசாரிகள் ஈர வேஷ்டியுடன் பூஜை நடத்துகிறார்கள்.

குமரி பகவதியம்மன் கோயில் திருவிழாக்களுள் முக்கியமானது வைகாசி உற்சவம். அப்போது தேவியின் விக்கிரகம் இரு வேளையிலும் திருவீதி உலா வரும். விழாவின் 9-ஆம் நாளன்று ரதோற்சவம். 10-ம் நாள் அன்ன வாகனத்தில் தரிசனம் தருகிறாள்.

வைகாசி உற்சவத்தின்போது கொடியேற்றுவதற்கான கயிறை, 'வாவாத்துறை' என்ற மீனவக் குப்பத்தைச் சார்ந்த கிறிஸ்தவ மீனவர்கள் தயாரிக்கின்றனர்.

இதற்கு ஒரு பின்னணி உண்டு. தற்போது விவேகானந்தர் பாறை அமைந்துள்ள பாறை அப்போது நிலப் பகுதியில் இருந்ததாம். ஒரு முறை அந்தப் பாறை மீது நின்றிருந்த இளம் பெண் ஒருத்தி தன்னை ஊர் எல்லையில் கொண்டு போய் விடுமாறு அந்த வழியே சென்ற கிறிஸ்தவ மீனவர்களிடம் கேட்டுக் கொண்டாளாம். அவர்கள் 'நீ பொண்ணானதால் தொடமாட்டோம்' என்று கூறி, பனை ஓலைக் குடுவையில் வைத்து அவளை ஊர் எல்லையில் சேர்த்தார்களாம். அந்தப் பெண், 'இந்த ஊர் திருவிழாவுக்கு நீங்கள்தான் இனிமேல் கொடிமரக் கயிறு திரித்துத் தர வேண்டும்' என்று கூறி மறைந்தாளாம். அதன்படி, இந்த மீனவர்களே திருவிழாவுக்குக் கொடி மரக் கயிறு தயாரித்து அளிக்கின்றனர். இதற்காக, கொடியேற்றத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே விரதம் கடைப்பிடித்து இறுதியில் மேள தாளத்துடன் ஊர்வலமாக வந்து கோயில் நிர்வாகிகளிடம் கயிற்றை அளிக்கிறார்கள்.

ஒருமுறை இந்த நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னரின் ஆட்கள் தாங்களே கயிறு தயாரித்து கொடி ஏற்றினராம். அந்தக் கொடி பாதியில் அறுந்து விழுந்ததாம். பிறகு மீண்டும் மீனவர்கள் மூலம் கயிறு கொண்டு வரப்பட்டு கொடியேற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நவராத்திரி விழாவின்போது உச்சைசரிவஸ் (தேவலோகத்துக்குக் குதிரை) எனும் அமராவதியின் குதிரை மீது அமர்ந்து குமரி பகவதியம்மன், பாணாசுரனை அழிக்க போர்க்களம் செல்லும் வைபவத்தை 'அம்பு காத்தல்' என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள். இந்த வைபவம் கோயிலில் இருந்து சுமார் 11 கி.மீ. தூரத்தில் உள்ள மகாதானபுரம் என்ற இடத்தில் விஜயதசமி அன்று நடைபெறுகிறது.

குமரி பகவதியம்மன், பாணாசுரனை அழித்த இடமே தற்போதுள்ள விவேகானந்தர் பாறை என்கிறார்கள். இங்கு அன்னை ஒற்றைக் காலில் நின்று தவம் செய்ததால், அவளின் ஒற்றைத் திருவடி, பாறையில் பதிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

1892 டிசம்பர் மாதம் திருவனந்தபுரத்திலிருந்து கன்யாகுமரிக்கு வந்த சுவாமி விவேகானந்தர் கன்யாகுமரி தேவியை வழிபட்டார். பிறகு, கடலுக்குள் சுமார் 2 கி.மீ. தொலைவில் இருந்த பாறைகள் சுவாமிஜியின் கண்களில் பட்டன. பாறைகளுள் ஒன்று பெரியது. மற்றொன்று சிறியது. பெரிய பாறையின் ஒரு பகுதியில்தான் தேவி தவம் செய்து பாதங்கள் பதிந்துள்ளதாக ஐதீகம். அந்தப் பாறை ஸ்ரீபாத பாறை எனப்படுகிறது. இதன் மீதுதான் ஆதிகாலத்தில் குமரி அம்மனின் கோயில் இருந்ததாம். அது கடல் கொண்டதால், தற்போதுள்ள கோயில் உருவானதாம். அங்கு செல்ல விரும்பினார் சுவாமிஜி.


அங்கே தம்மை அழைத்துச் செல்லுமாறு சுவாமிஜி கேட்டுக் கொண்டார். அவரிடம் பணமில்லாததால் மீனவர்கள் மறுத்து விட்டனர். சுவாமிஜி கடலில்






திருக்கோயில் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீப ஒளியில் குமரி ஸ்ரீபகவதியம்மன்



கொடிமரம்

குதித்து நீந்தி பாறையை அடைந்தார். அங்கு சுவாமிஜியை டிசம்பர் 24 முதல் 26 வரை தியானம் செய்தார். நான்காம் நாள் சுவாமிஜியை கரைக்கு அழைத்து வந்தனர். "பாறையில் நீங்கள் என்ன செய்தீர்கள். என்ன அனுபவம் கிடைத்தது?" என்று அவரிடம் கேட்டபோது, "அகத்தளவிலும், புறத்தளவிலும் நான் எதைத் தேடி இத்தனை காலம் அலைந்தேனோ, அது இந்த இடத்தில் எனக்குக் கிடைத்தது" என்றார் சுவாமிஜி. அவருக்கு வழிகாட்டியது சாட்சாத் ஸ்ரீகுமரி பகவதியம்மனே!

விவேகானந்தர் தியானம் செய்த பாறையில் அவரது நினைவாக கலைக் கோயில் ஒன்றை எழுப்பி இருக்கிறார்கள். அங்கு 4 அடி உயரமுள்ள பீடத்தில் எட்டு அடி உயரத்தில் சுவாமி விவேகானந்தர் சிலை ஒன்றும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதாதேவி உருவச் சிலைகளும் உள்ளன. அங்கு தியான மண்டபம் ஒன்றும் புத்தகாலயம் ஒன்றும் உள்ளன.

காஞ்சி மகா பெரியவாள் விருப்பப்படி கன்யாகுமரியில் பகவதியம்மனின் ஆலயத்தின் பின்புறம் தென்திசை நோக்கி ஆதிசங்கரருக்கு அழகிய மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டது. அதன் மையத்தில் சலவைக் கல்லில் வடிவமைக்கப்பட்ட ஆதிசங்கரரது விக்கிரகம் [illegible]


பண்டிதர்களால் வைதிக முறைப்படி 31.5.1964 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவருக்குச் சுற்றிலும் அவரது சிஷ்யர்களான சுரேச்வரர், தோடகர், பத்மபாதர், ஹஸ்தாமலகர் ஆகியோரது உருவங்களும் அமைக்கப்பட்டன. சுமார் 35,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த மண்டபத்தில் உருவச் சிலை கைங்கர்யம் செய்தவர்கள் நாகர்கோவில் அன்னம் கிருஷ்ணய்யர் குடும்பத்தினர்.

தமிழகம் வந்த காந்திஜி 1937-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் நாள் குமரிமுனையில் நீராடினார். பின்னர் அவர் கன்யாகுமரி அம்மனை தரிசிக்க விரும்பினார். ஆனால், கடல் கடந்து சென்றவரை கோயிலுக்குள் அனுமதிக்க முடியாது என்று கூறி அவரை நிராகரித்துவிட்டது திருவிதாங்கூர் சமஸ்தானம்.

காந்தியடிகளின் மறைவுக்குப் பிறகு அவரது அஸ்தி கலசம் இங்குக் கொண்டுவரப்பட்டு கடற்கரையில் காந்தி நினைவு மண்டபம் அமைக்கப்பட்டது. இங்கு காந்தி ஜெயந்தியன்று அஸ்திகலச மேடை மீது சூரிய ஒளி படும்படி அமைக்கப்பட்டுள்ளது தனிச் சிறப்பு.

கன்யாகுமரியிலிருந்து வடக்கே சுமார் ஒரு கி.மீ. தொலைவில் பெருவழி அருகே உள்ளது ஸ்ரீகாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**காந்தி மண்டபம்**

விஸ்வநாதர் கோயில். இதையொட்டி உள்ளது சக்கரக் குளம். குமரி பகவதியம்மன் ஏவிய சக்கராயுதம் பாணாசுரனை அழித்த பிறகு இங்கு வீழ்ந்து நிலத்தைக் கீறியதால் நீருற்று ஒன்று தோன்றியது. அதுவே சக்கரக் குளம் என்கிறது தல புராணம். இதன் கிழக்கில் சுடுகாடு ஒன்று உள்ளது. இப்படி கோயில் - குளம் - சுடுகாடு ஆகியவை கொண்ட இந்தத் தலம், காசி மாநகரில் உள்ள கோயில் அமைப்பை நினைவூட்டுகிறது.

2004-ம் வருடம் சுனாமி பேரலைகள் தமிழ்நாட்டைத் தாக்கியபோது நடந்த சம்பவம்:

குடும்பத்துடன் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியும், குமரி மாவட்ட தலைமை நீதிபதியும், உயர் காவல் துறை அதிகாரிகளுடன் நீதிமன்ற அலுவலர்களும் கன்யாகுமரிக்கு வந்தனர். எல்லோரும் கன்யாகுமரி பகவதி அம்மனை தரிசித்தனர். பிறகு படகு மூலம் விவேகானந்தர் மண்டபத்தை அடைந்தனர். அப்போது சுனாமி பேரலை விபத்து நிகழ்ந்தது. சுமார் 5 மணி நேரம் மேற்குறிப்பிட்ட எல்லோரும் விவேகானந்தர் பாறையில் உள்ள தியான மண்டபத்தில் அமர்ந்து அம்மனை பிரார்த்தித்தனர். அதன் பலனாக சுனாமி அலைகளது சீற்றம் தணிந்தது. அதன்பின் பத்திரமாக கன்யாகுமரி கடற்கரையை அடைந்த அவர்கள் மீண்டும் கோயிலுக்குச் சென்று தங்களைக் காப்பாற்றிய அம்மனுக்கு நன்றிக்கடனாக அபிஷேக ஆராதனைகள் செய்தனர். முழு மனதுடன் வேண்டினால் பக்தர்களைக் காப்பாற்றுவாள் குமரி பகவதி அன்னை என்பதற்கு இது நிதர்சனமான ஓர் எடுத்துக்காட்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணேச்சரம்

**அமைவிடம்**

இலங்கையின் கீழ்த் திசையில் அமைந்துள்ள இயற்கை எழில் மிக்க நகரம் திருக்கோணமலை. இலங்கையின் மிகப் பெரிய நதியாகிய மகாவலிகங்கை அவ்விடத்திற் கடலுடன் கலப்பதால் அப்பிரதேசம் நீர் வளமும் நில வளமும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. அங்கு சுவாமிமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்று கொட்டியார விரிகுடாவை நோக்கியவாறு அமைந்துள்ளது. அதன் உச்சியிலே திருக்கோணேச்சரக் கோயில் உள்ளது. அது அண்மைக் காலத்தில் எழுப்பப்பட்ட புதிய கோயிலாகும்.

**பண்டைய வரலாறு**

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட கோயில் ஒன்று சமுத்திர ஓரத்தில் அந்த மலையின் அடிவாரத்தில் இருந்ததென நம்பப்படுகின்றது. அது கி.மு. 306 இல் நிகழ்ந்த கடல் கோளினாற் சமுத்திரத்தினுள் மூழ்கிவிட்டது. தெனன்று என்னும் வரலாற்றாசிரியர் எழுதிய 'இலங்கைச் சரித்திரம்' என்னும் நூல் இவ்வாறு நிகழ்ந்ததெனக் கூறுகின்றது. ஆழ்கடலில் அமர்ந்திருக்குங் கோணேச்சரப் பெருமானுக்கு இன்றும் மலைப் பூசை ஒன்று செய்யப்படுவதை நாம் காணலாம். மலையின் அடியில், ஆழ்கடலுக்கு எதிரே, மலைக்குகை போன்று பண்டைக் கோயிலின் மூலத்தானத்தின் ஒரு பகுதி இன்னமும் எஞ்சியிருக்கின்றது. அது பல்லவர் காலக் குகைக் கோயில் போன்றது. அக்கோயிலின் மிகுதி சமுத்திரத்தின் அடியில் உள்ளதென 1961 இல் ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மைக்வில்சன் என்பர் கூறியுள்ளார்.

இராவணன் தென் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலே தட்சிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேச்சரத்தைப் பூசித்து வந்தான் என்று மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. இராவணன் தன் தாயாருக்குச் சிவலிங்கம் ஒன்று பெற விரும்பிப் பெயர்த்த மலை தட்சிண கைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிண கைலாய புராணங் கூறுகின்றது. இதற்குச் சான்று பகர்வது போன்று இம்மலைப் பாறையில் இராவணன் வெட்டு என்ற பெயருடன் மலைப் பிளவு ஒன்று இன்னமும் இருக்கின்றது. இராவணன் கிறிஸ்து யுகத்துக்கு மிகவும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவன் என்றும் அவனுடைய காலத்துக்குப் பின் கடல்கோள்ஒன்று நிகழ்ந்தது என்றும் 'ராஜாவளிய' என்னும் புத்த சமய வரலாற்று நூல் கூறுகின்றது.

கடல் கோளுக்குப் பின் மீண்டுஞ் சுவாமிமலை உச்சியில் அமைக்கப்பட்ட கோயில் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற் சீருஞ் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இதனையே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "தாயினும் நல்ல தலைவர்" என்னுந் தேவாரத்தில், "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே" என்று போற்றிப் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர், பாண்டியர், ஆரியச் சக்கரவர்த்திகள் முதலானோர் இக்கோயிலை ஆதரித்தனர். குளக்கோட்டு மன்னன் குளந் தொட்டு வளம் பெருக்கித் திருப்பணிகள் பலவுஞ் செய்வித்தவன் என்பது வரலாறு. இவன் திருக்கோணேச்சர ஆலயத்துக்குத் திருப்பணி மட்டுமன்றிச் சோதிட முற்கூறலுடன் அமைந்த கல்வெட்டு ஒன்றினையுஞ் செய்வித்தான். அது கோட்டை வாயிலிலுள்ள கற்றூணிற் பதிக்கப்பட்டு இன்னமும் இருக்கின்றது. அதனை ஈண்டு நோக்குதல் சாலப் பொருத்தமானது.

முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப்

பின்னே பறங்கி பிரிக்கவே மன்னவபின்

பொண்ணா ததனை யியற்றவழித் தேவைத்து

எண்ணாரே பின்னரசர் கள்.

என்பது அக்கல்வெட்டு. குளக்கோட்டனின் திருப்பணியால் அமைந்த இவ்வாலயத்தைப் பறங்கியர் உடைப்பார்கள். பின்னர் அரசர்கள் இதனைப் பேணமாட்டார்கள் என்று இதன் எதிர் காலம் பற்றி இங்கு குறிப்பிட்டிருத்தல் வியப்புக்குரியது.


இக்காலத்திற் சிவராத்திரி தினத்திற் கோணேச்சரப் பெருமானுக்கு நகர்வலம் வருதல் என்னுந் திருவிழா ஒன்று சிறப்பாக நடைபெறுகின்றது. அக்காலத்திலும் இத்தகைய திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்வாறாக 1624ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு நாளில் நகர்வலம் வருந் திருவிழா ஒன்று நடைபெற்றது. இதற்காக மாதுமை அம்பாள் சமேத திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவாக அடியார்களுடன் கோயிலிலிருந்து நகருக்கு எழுந்தருளினார். அவ்வேளையிற் போர்த்துக்கேயப் படைவீரர் பிராமணர்கள் போல வேடந் தாங்கிக் கும்பிடப்போவது போன்று கோயிலினுட் புகுந்தனர். அந்நேரத்திற், கோயிலின் உள்ளே பூசகர்கள் சிலரும் வேலையாளரும் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

கொன்ஸ்ரன்ரயின் டீசா என்பவனுடைய தலைமையிற் சென்ற இப்போர்வீரர் எதிர்த்தவர்களை வெட்டிக் கொன்றுவிட்டுக் கோயிலிலிருந்த தங்க, வெள்ளி நகைகளையும், விலைமதிப்புமிக்க பிற பொருள்களையும் சூறையாடிக்கொண்டு சென்றனர். அதன் பின்னர் அடியார்கள் சில விக்கிரகங்களை அகற்றி மறைத்து வைத்தனர்.

போர்த்துக்கேயர் பீரங்கிகளுடன் மீண்டும் வந்து கோயிலை முற்றாக அழித்தனர். போர்த்துக்கேயர் அழித்த கோயிலில் ஆயிரங்கால் மண்டபமும் பெரியதொரு தீர்த்தக் கேணியும் பிற மண்டபங்களும் இருந்தன என்பது அவர்கள் வரலாற்றுச் சான்றாக வரைந்து வைத்த படம் ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது. கொன்ஸ்ரன்ரயின்டீசா செய்த சிவத்துரோகத்துக்காக அவன் 1630ஆம் ஆண்டு வேறு சிலர் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொல்லப்பட்டான்.

**புதிய கோயிலின் வரலாறு**

1944 ஆம் ஆண்டு திருக்கோணமலைக் கோட்டையினுள்ளே நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்கு அகழ்வு வேலை செய்த பொழுது விஷ்ணு, மகாலட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன. 1950ஆம் ஆண்டு ஆடி மாதத்திற் சுவாமிமலைக்கு அண்மையிற் கடற்கரை வீதியருகே கிணறு ஒன்று வெட்டப்பட்டபொழுது மூன்று விக்கிரகங்கள் கிடைத்தன. வேறோர் இடத்தில் அகழ்ந்தபொழுது மேலும் இரண்டு விக்கிரகங்கள் கிடைத்தன. இந்த விக்கிரகங்கள் எல்லாம் 1952ஆம் ஆண்டிற் பிரதிட்டை



செய்யப்பட்டன.


1950.07.03 அன்று கலாநிதி பாலேந்திரா அவர்களின் தலைமையிலே திருக்கோணேச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஆரம்பமானது.

இச்சபையின் பெருமுயற்சியாற் பழைய கோயில் இருந்த இடத்தில் மீண்டுந் திருக்கோணேச்சரர் ஆலயம் அமைக்கப்பட்டு 1963.03.03 அன்று மகா கும்பாபிடேகம் நிறை வெய்தியது. பழைய கோயிலுடன் ஒப்பிடும் பொழுது இது சிறிய கோயிலாகவே இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### மூர்த்திச் சிறப்பு

இக்கோயிலின் இறைவன் பெயர் திருக்கோணேச்சரர், இறைவி பெயர் மாதுமை அம்பாள். தலவிருட்சம் கல் ஆலமரம். இப்பொழுதுள்ள கோயிலை அடுத்து இம்மலையின் வட முனையிற் பாறையினுள் வேர்வைத்து இந்த ஆலமரம் செழிப்பதாக வளர்ந்து நிற்கின்றது.



சோழ நாட்டிலே பழையாறை என்பது கி.பி 831 இல் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. அங்கு குமராங்குசன் என்னும் அரசன் அப்பொழுது ஆட்சி செலுத்தினான். இவனுடைய மகள் சீர்பாததேவி.

நகுலேச்சரத் தலவரலாற்றிற் குறிப்பிட்டுள்ள மாருதப்புர வீகவல்லி என்பவளுக்கு நரசிங்கன் என்னும் மகன் ஒருவன் இருந்தான். அவன் சீர்பாததேவியைத் திருமணஞ் செய்தான். இவர்கள் இருவரும் தம் சுற்றத்தாருடன் இலங்கைக்கு வருவதற்குச் சோழநாட்டிலிருந்து கப்பலிற் புறப்பட்டனர். அப்பொழுது சீர்பாததேவி இலங்கையின் நாட்டு வளத்தைப் பார்க்க விரும்பினாள். எனவே, கப்பல் இலங்கையின் கிழக்குக் கரையோரமாகப் பயணஞ் செய்தது.

கப்பல் திருக்கோணமலையை அண்மித்தபொழுது திருக்கோணேச்சரந்தென்பட்டது. அரசி அவ்விறைவரை வணங்கினாள். அதே நேரம் கப்பலும் நங்கூரம் இட்டது போன்று நிலையாய் நின்றது. அரசி மிகவுந் துயரடைந்து விக்கினங்களை அகற்றுபவரான விநாயகரைத் தொழுதாள். பின்னர் படகோட்டியைக் கப்பலின் கீழே சென்று பார்க்குமாறு பணித்தாள். கப்பல் தரையிற் பட்டுவிட்டதென்றே அவள் கருதினாள். எனினும், அங்கு தரை இருக்கவில்லை. ஆயின், கடலில் மிகுந்த ஆழத்தில் விநாயகர் விக்கிரகம் ஒன்று இருந்தது. அதனை அவள் கப்பலுக்குள் எடுப்பித்த பின்னர் கப்பல் மீண்டும் ஓடத்தொடங்கியது. இவ்வாறாகக் கடல்கோளாற் கீழே சென்ற புராதன ஆலயத்தின் விநாயகர் விக்கிரகம் இவ்வளவு மகிமை உடையதென்றாற் கோணேச்சரப் பெருமானின் மகிமையைக் கூறவும் வேண்டுமோ?

திருக்கோணேச்சரப் பெருமான் திருவுலாவுக்கு எழுந்தருளிய பின்னரே போர்த்துக்கேயர் கோயிலினுட் புகுந்தனர் என்று முன்னர் கூறப்பட்டது. எனவே, அந்த விக்கிரகங்கள் காப்பாற்றப் பட்டிருத்தல் வேண்டும். அவை இப்பொழுது கண்டெடுக்கப்பட்ட விநாயகரும் சோமாஸ்கந்தருமாக இருக்கலாம். இந்த விநாயகர் விக்கிரகம் மிகவுஞ் சியப்பான அம்சங்களைக் கொண்டுள்ளது. பழைய கோயிலின் பல விக்கிரங்கள் தற்செயலாகக் கிடைத்தன என்பது இறைவனின் செயல். இதுவும் திருக்கோணேச்சரப் பெருமானின் மூர்த்திச் சிறப்பினையே புலப்படுத்துகின்றது.

#### தலச்சிறப்பு

இந்தத் தலத்தின் சிறப்புக் காரணமாகவே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருகோணேச்சரப் பெருமான் மீது தோவாரத் திருப்பதிகம் பாடினார். இத்தலத்தின் மகிமையை அடியார்கள் சொல்லக்கேட்டு அவர் இப்பதிகத்தைப் பாடினார். அருணகிரிநாதர் தாம் பாடிய திருபுகழ் ஒன்றில்

*"நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்*
*திருக் கொணாமலை தலத்தாறு கோபுர"*

என்று இத்தலத்தை வருணித்துள்ளார்.

குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் இத்தலம் அமைந்துள்ளது. திருக்குணமலை, திருமலை, தென் கைலாயம், கோகர்ணம், திரிகூடம், மச்சேஸ்வரம் என்பன இத்தலத்தின் பிறபெயர்கள்.

#### தீர்த்தச் சிறப்பு

இக்கோயிலின் தீர்த்தம் பாவநாசம் எனப்படும். இந்தச் சொல்லின் பொருளை நோக்கும் பொழுது இக்கோயிலின் தீர்த்தச் சிறப்புப் புலப்படும். இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்த்தமாடுபவர்களின் பாவம் தொலைந்து விடும் என்பது இதன் கருத்து.

சுவாமி மலையின் தென் பக்கத்தில் ஆழமான ஒரு கிணறாகப் பாவநாச தீர்த்தம் இப்பொழுது இருக்கின்றது. இதனைச் சுனை என்று கூறமுடியாத அளவுக்குப் போர்த்துகேயர் பழைய கோயிலை இடித்து அங்கிருந்த தீர்த்த கேணியையுஞ் சுனையுந் தூர்த்து விட்டனர். இப்பொழுதுள்ள கேணியுந் தீர்த்தக் கிணறுஞ் சேர்த்த பெரிய கேணி ஒன்று முன்பு இருந்ததென ஊகிக்கப்படுகின்றது. அற்புதமான இந்த தீர்த்தத்தின் ஒரு சிறுபகுதியையாயினும் பாவநாச தீர்த்தக் கிணற்றின் மூலம் திருகோணேச்சரர் தம் அடியார்களாகிய நமக்குத் தந்தருளினாரே என்பது இந்த தீர்த்தத்தின் சிறப்பு.



### பூசைகள் விழாக்கள்

இங்குஆறுகாலப்பூஜைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. சிவராத்திரிக் காலத்திலே திருகோணேச்சரப் பெருமான் நகரத்தினுள்ளே திருவுலாவாக எழுந்தருளுதல் கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கோயிலின் மகேற்சவம் பங்குனி உத்தரத்திலே தொடங்கிப் பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும்.



### நூல்கள்

கோணேசர் கல்வெட்டு இக்கோயிலின் சரித்திரத்தை உரை நடையிலுங் கவிதையிலுங் கூறுகின்றது. சீர்பாதகுல வரவாறு, மட்டக்களப்பு மான்மியம், ராஜாவளிய, மச்சபுராணம், திருகோணாசலப் புராணம், இலங்கைச் சரித்திரம் (தெனன்று) தட்சிண கைலாய புராணம், திருகோணமலைத் திருவுருவங்கள் குடுமியா மலைச் சாசனம், திருகோணமலைக் கோட்டை வாயிற் கல்வெட்டு முதலியன இக்கோயிற் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன. திருக்கோணேச்சரத் தேவாரத் திருப்பதிகம், கோணேஸ்வரர் குறவஞ்சி, திருக்கோணேஸ்வரர் அகவல், திருக்கோணமலை அந்தாதி முதலியன இக்கோயில் மேல் எழுந்த இலக்கியங்களாகும்.

SHARMIN
ELECTRONICS
We Install Local TV Antenna Wall Mounting, TV Brackets LED-LCD & CRT
We Undertake to repair & Service. T.V, Video, Surround Sound Systems ,VCD & CD Hi-fi Sets DVD, Bread Toaster, Rice Cooker, Microwave Oven & Blender, Steam Iron & All Electronics & Electrical Items.
அனைத்து வகையான இலத்திரனியல்
உபகரணங்கள் குறித்த நேரத்தில், திருப்திகரமாக திருத்தி தரப்படும்.
Home Visit Repair
No. 7-1/1, Orchard Building, 1st Floor, Galle Road, Wellawatte, Colombo - 6. Tel: 011 7 205 182
Hotlines : 0777 820 440 / 0786 013 014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூரிய வழிபாடு

சீலமாய் வாழ சீர் அருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

-சூரிய துதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரிய கிரகணத்தின் போது என்ன செய்ய வேண்டும்?

பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்த போது அதிலிருந்து அமிர்தம் வெளிப்பட்டது.

பகவான் விஷ்ணு ஓர் அழகான மோகினி வடிவம் தாங்கி அசுரர்களை மயக்கி, அந்த அமிர்தத்தை தேவர்களுக்கு மட்டும் வழங்கினார். ஆனால் சுவர்பானு என்ற அசுரன் மட்டும் தேவர்களைப் போல உருவம் தாங்கி வந்தான்.

இதை அறிந்த சூரியனும் சந்திரனும் அதை மோகினியிடம் தெரிவித்தனர். உடனே மோகினியாக இருந்த விஷ்ணு அசுரனின் தலையை கொய்து விட்டார். ஆனால் அதற்குள் அமிர்தம் கழுத்து வரை சென்றுவிட்டதால் அவன் சாகவில்லை. அவனது தலை ராகுவாகவும், உடல் கேதுவாகவும் அழைக்கப்பட்டன. தங்களைக் காட்டிக் கொடுத்த சூரிய, சந்திரரை பழிவாங்கும் விதத்தில் அவ்வப்போது ராகுவும், கேதுவும் சூரியனையும் சந்திரனையும் விழுங்குகின்றனர்.

வானசஸ்திரப்படி சூரியன், சந்திரன், பூமி ஒரே கோட்டில் வரும்போது, நடுவில் சந்திரனோ, பூமியோ வரும்போது சூரியசந்திர கிரகணங்கள் ஏற்படுகின்றன. கிரகண காலத்தில் மக்கள் மற்றும் தங்கத்தை தானமாக அளிக்க வேண்டும். கிரகணத்திற்கு மறுநாள் ஏழைகள் மற்றும் சாதுகளுக்கு உணவளிக்க வேண்டும். கிரகணம் முடிந்தபின் வீடுகளைச் சுத்தம் செய்ய வேண்டும். கிரகண காலத்தில் ஒருவரும் சாப்பிடக்கூடாது. தொடங்கும் நேரத்தில் முன் உண்ட உணவு முழுவதும் ஜீரணமாயிருக்க வேண்டும். கிரகணம் விட்ட பிறகு சூரியனைப் பார்த்த பின்னரே உணவு உட்கொள்ள வேண்டும்.

கிரகணத்தின் போது சூரியனை கர்ப்பமான பெண்கள் பார்க்கவே கூடாது. அவர்கள் பார்த்தால் பிறக்கப் போகும் குழந்தைகள் செவிடு, ஊமை அல்லது குருடராகப் பிறக்கும் இதே காரணத்திற்காகவே கிரகண நேரத்தில் தாம்பத்ய உறவும் கொள்ளுதல் கூடாது.

இந்த நேரத்தில் ஒருவர் தேள் கடிக்காமலோ மற்றும் காயத்திலிருந்து ரத்தம் வெளியேறாமல் பார்த்துக் கொள்ளுவது அவசியம். இவற்றால் பயங்கர விளைவு ஏற்படும். கிரகண நேரத்தில் ஒரு மண்புழு கடித்தால் கூட விஷம் இருக்கும். கிரகண நேரத்தில் ஜெபம், தியானம் செய்பவர்கள் பெரும் நன்மை அடைவார்கள். இவ்வேளையில் செய்யும் ஜெபம், சங்கீர்த்தனம் (இறைவனைக் குறித்த பாடல்கள்) அல்லல்களையும், பீடைகளையும் அகற்றும். தேவர்களின் ஆசி கிடைக்கும். நமது சிற்றறிவினால் பிரபஞ்சத்தில் நிகழும் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியாது. எனவே, முனிவர்களின் வார்த்தைகளை நம்புங்கள். உலக வாழ்வு நிலையற்றது என்ற ஆன்மஞானமாகிய நிஜத்தை அறியாமை மறைக்கிறது. எனினும், இந்தத் திரையாகிய கிரகணம் நிச்சயம் ஒருநாள் அகலும். நீங்கள் உங்கள் இயற்கையான புகழுடன் ஒளிவீர்கள். இதுதான் கிரகணத்தின் ஆன்மீகத் தத்துவமாகும்.

கிரக நேரத்தில் ஆறு, குளம், கடல்களில் நீராடி முன்னோருக்காக தர்ப்பணம் செய்யலாம். வீட்டில் இருப்பவர்கள் இறை வணக்கப்பாடல்களை கிரகண நேரத்தில் பாடுவதன் மூலம் எவ்வித தோஷமும் இல்லாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். எந்தக் கிழமையில் கிரகணம் நிகழ்கிறதோ, அந்த கிரகண நாளில் பிறந்தவர்கள், கிரகணம் முடிந்த பிறகு நீராடிவிட்டு, கோவில்களுக்கு சென்று தங்கள் பெயரில் அர்ச்சனை செய்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரிய வழிபாட்டின் தொன்மை

உலகில் எழுந்த பல்வேறு நூல்களில் ரிக் வேதம் மிகப் பழமையானது. இதில் சூரிய வழிபாடு குறிக்கபட்டிருக்கிறது. இதனால் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாரத நாட்டில் சூரிய வழிபாடு நடைபெற்று வந்தது என்று அறிகிறோம்.

சிவபெருமானே சூரியனாக எழுந்தருள்கிறார் என்கிறது யஜுர்வேதம். சூரிய நாராயணர் என்று வைணவமும் கொண்டாடும்.

தமிழில் நமக்கு கிடைத்துள்ள நூல்களில் தொல்காப்பியம் மிகப் பழமையானது. இந்நூலில் குறிப்பிடப்படும் 'கொடி நிலை' என்ற சொல்லுக்கு "கீழ் திசைக் கண்ணே நிலை பெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டலம்" என்று உரை எழுதப்பட்டுள்ளது. வெஞ்சுடர் மண்டலம் என்பது சூரிய மண்டலம். மேலும் சங்க இலக்கியத்தில் ஒன்றான சிலப்பதிகாரத்தில், கனாத்திறம் உரைத்த காதையில் சூரியன் கோவில் "உச்சிக் கிழான் கோட்டம் என்ற இரண்டு குளங்கள் சந்திரன் பெயராலும், சூரியன் பெயராலும் இருந்தமை குறிக்கப்படுகின்றது. சிலப்பதிகார மங்கல வாழ்த்துப்பாடலில்.

*"ஞாயிறு போற்றதும்! ஞாயிறு போற்றதும்! காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு மேரு வலம் திரிதலான்"* என்று சூரிய வணக்கமும் காணப்படுகிறது.

சூரிய உதயத்தை கொண்டே நாள் கணக்கிடப்படுகிறது. இவர் ஒவ்வொரு ராசியிலும் ஒரு மாதம் விதம் தங்கி இருக்கின்றனர். அதாவது மேஷம்(சித்திரை) தொடங்கி. மீனம் (பங்குனி) வரை பன்னிரண்டு ராசிகளின் பள்ளிக்கு ஆதித்தியர்களாக (சூரியர்களாக) வழிபடப்படுகிறார்.

சூரியனை "முழுமுதற் கடவுள்" என்று ஆதி சங்கரர் வகுத்த "சௌரம்" என்ற பக்தி நெறி கூறுகிறது. 8-ம் நூற்றாண்டு முதல் 13-ம் நூற்றாண்டு வரை சூரிய வழிபாடு. இந்தியாவில் உன்னத நிலையில் இருந்துள்ளது. வட இந்திய மன்னர்கள் பலர், தங்களை சூரிய குலத்தோன்றல்களாக சொல்லிக் கொண்டார்கள். நாடு முழுவதும் சூரியனுக்கு கோவில்கள் எழுப்பப்பட்டன. கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனால் சூரிய யந்திரம் ஒன்று அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. சூரிய சக்கரம், அஷ்டதிக் பாலகர்கள், நவகிரகம், நடுவில் பத்ம பீடம் என்று இது அமைந்துள்ளது.

## யாரெல்லாம் சூரிய நமஸ்காரத்தை தவிர்க்க வேண்டும்?

கண்நோய் அதிகமான அல்லது ஆழமான தலைப்புண், முதுகுத் தண்டுவட பாதிப்பு, இடுப்பு எலும்பு பாதிப்பு, கைகால்கள் மூட்டு அழற்சி, குறைந்த மற்றும் அதிக ரத்த கோளாறு, இதய நோய் பாதிப்பு, வலிப்பு நோய் போன்றவைகள் உள்ளவர்கள் சூரிய நமஸ்காரத்தை நிச்சயம் தவிர்ப்பதே நல்லது. ஆனால் நுரையீரல் சம்பந்தப்பட்ட ஆஸ்துமா, உள்ளவர்களும், முறைச்சுரம், மஞ்சள் காமாலை, முதலியவற்றினால் பாதிக்கப்பட்டு குணமானவர்களும் மற்றும் அறுவை சிகிச்சை நிகழ்ந்து சில காலம் ஆனவர்களும் ஆசிரியரின் நேர்முக அறிவுரையின்படி சூரிய நமஸ்காரம் மேற்கொள்ளலாம்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ ராம பக்த அனுமார் புராணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அனுமன் பிறப்பு

இராமபக்த அனுமாரை சிவ மற்றும் விஷ்ணு பக்தர்கள் அனைவரும் வழிபடுகின்றனர். இராம பக்தர்களுக்கு அனுமார் காட்சியளித்து அவர்களின் துயர்களைத் தீர்ப்பார் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. அனுமார் இராமனை எப்பொழுதும் தம்முள் இருத்தி துதித்து வருபவர். இராமனின் அருளைப் பெற்று அவரும் மற்றவர்களுக்கு அருள் வழங்கும் மகிமைப் பெற்றவராகத் திகழ்கிறார். எல்லா விஷ்ணு ஆலயங்களிலும் அனுமாருக்கென்று தனி சன்னதிகள் இருக்கின்றன. சிவாயலங்கள் பலவற்றிலும் அவருக்கு தனி சன்னதி அமைத்து வணங்கி வருகின்றனர். அனுமாருக்கென்று தனி ஆலயங்களும் உள்ளன.

பஞ்சபூதங்களில் ஒன்றான காற்று, முதன்மையானதும் மற்றவற்றைக் காட்டிலும் வலிமை பெற்றதுமாகும். அக்காற்றுத் தேவனின் புதல்வனான அனுமானை தம்மைக் காக்கும் இரட்சகனாக மக்கள் மதித்து தொழுது வருகின்றனர். அவருக்கு பிரியமான வெண்ணெயை சாத்தியும் வடமாலையை சூட்டியும் அவரை மகிழ்வித்து வருகின்றனர்.


"ஸ்ரீராமஜெயம் ஸ்ரீராமஜெயம்" என்று ஜெபித்தாலே போதும்! அனுமாரின் கருணை கிட்டிவிடும். அவரை வழிபடுபவர்கள் உடல் நலனும் உறுதியும் பெற்றவர்களாய் எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டவர்களாய் இருப்பார்கள். அத்தகைய மகிமைபெற்ற அனுமான் இறைவன் அவதாரமாக இல்லாவிட்டாலும் இறைவனின் அருளைப் பெற்று அதன் மூலம் தானும் வலிமை பெற்று இறைவனுக்கு ஈடாக மதிக்கப்படுகிறார்.

அவருக்கு ஆஞ்சநேயர், வாயுபுத்திரன், மகாபலிஷ்டன், மாருதி, இராமேஷ்டன், அர்ஜுனசகன், பிங்காட்சன், அமிதவிக்ரன் என்று இன்னும் பல பெயர்கள் உண்டு. அவர் திரேதா யுகத்தில் பிறந்து இன்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகிறார் என்று நம்பப்படுகிறது. அவருடைய புராணம் சிறப்புப் பெற்றதாகவும் சுவை மிகுந்ததாகவும் இருக்கிறது.

திரேதா யுகத்தில் கேசரி என்ற சிவபக்தன் ஒருவன் வசித்து வந்தான். அவனுக்கு திருமணமாகி நீண்ட காலமாகியும் மக்கட்பேறு உண்டாகவில்லை. அதனால் துயருற்ற அவன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். அப்பொழுது கூட சிவன் அருள் புரியவில்லை. அதனால் நீர் ஆகாரம் எதுவுமின்றி காற்றையே உணவாகக் கொண்டு திடமனதுடன் நீண்டகாலம் தவம் புரிய சிவபெருமான் அவன்முன் காட்சி தந்தார்.

கேசரி தனக்கு பிள்ளைவரம் வேண்டுமென்றான். அதுவும் அந்த மகன் வலிமையும், வீரமும் பெற்று மரணமும் இல்லாதவனாக இருக்க வேண்டுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




noolaham.org | aavanaham.org

# Menu
## LADIES TAILORING

Specialist in

- SAREE BLOUSE
- SHALWARS, SKIRTS
- OFFICE PANTS
- PATIALA
- SCHOOL UNIFORMS

Cell: 077 506 2968

**WELLAWATTE.**
4B, Collingwood Place,













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேட்டான். கேசரிக்கு பூர்வ புண்ணியமில்லாததால் இப்பிறவியில் மகன் பெறும் பாக்கியம் இல்லை என்பது சிவனாருக்குத் தெரிந்தது. அதனால் அவர் "பக்தா உனக்கு மகன் பிறக்க பாக்கியமில்லை. ஒரு மகள் பிறக்க பேறு உள்ளது. அந்த மகளுக்கு ஒரு மகன் பிறப்பான். அந்த மகன் நீ கோரியபடி சிறப்புற்று திகழ்வான்." என்று கூறி மறைந்தார்.

அவ்வாறே அவன் மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அஞ்சனை என்ற பெயரிட்டு சிறப்புடன் வளர்த்து வந்தான். தக்கப் பருவத்தில் அவள் விரும்பியவாறே வானர வீரன் ஒருவனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். அவளுக்கும் நீண்ட காலமாகியும் குழந்தை பாக்கியம் உண்டாகவில்லை. தன் தந்தைக்கு சிவபெருமான் கொடுத்த வரம் தவறாது என்று எண்ணினாலும், அவளால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை.

அச்சமயத்தில் தருமதேவதை குறத்தி வடிவில் வந்து "திருவேங்கட மலைக்கு கணவனுடன் சென்று பெருமாளை வணங்கி வந்தால் ஆண்மகன் பிறப்பான்" என்று கூறிச் சென்றாள். அவ்வாறே அவளும் கணவனுடன் சென்று வழிபட்டாள். பிறகு காற்றையே உணவாகக் கொண்டு இறைவனைக் குறித்து தவமிருந்தாள். அதனால் வாயு பகவானின் அருளினால் ஒரு கரு அவள் வயிற்றில் வளர்ந்தது.

தவமிருந்த நிலையிலேயே தான் கருவுற்றதையறிந்து வேதனையுற்றாள். அப்பொழுது அசரீரீ குரல் "வருந்த வேண்டாம். வயிற்றில் உருவாகி வளர்ந்து வரும் கரு மகேஸ்வரனின் கருணையால் தான். வாயுதேவனின் சொரூபமே உன் கருவில் இருப்பதால் வாயுபுத்திரன் என்று பெயரிடுவாய். அவன் சகல சக்திகளும் பெற்றவனாய் என்றும் சிரஞ்சீவியாய் திகழ்வான்" என்று கூறியதும் மகிழ்ச்சியுற்றாள்.

உரிய காலத்தில் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். அவனுக்கு அனுமன் என்று பெயரிட்டனர். அஞ்சனா தேவியின் மகன் என்பதால் ஆஞ்சநேயன் என்றும் வழங்கப்பட்டான்.



வாயுதேவனின் அருளினால் பிறந்தவனாகையால் காற்றைப்போல எல்லாத் திசைகளிலும் திரியும் ஆற்றல் பெற்றிருந்தான். குழந்தையிலேயே மலைச்சிகரங்களையும் தாண்டுவான். கேசரியும் தன் பேரனின் ஆற்றலையும், வேகத்தையும் கண்டு மகிழ்ந்து அவனை வாழ்த்தினான்

**குழந்தைப் பருவத்தில் அனுமன்**

ஒரு சமயம் அனுமன் பசி பொறுக்க மாட்டாமல் வீறிட்டு அழுது கொண்டிருந்தான். அப்பொழுது வானத்தில் சூரியன் செந்நிறமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட வாயுபுத்திரன் சிவந்த பழமென்று நினைத்து அதைப் பிடிக்க அருகில் சென்றான். அதே சமயத்தில் சூரிய கிரகணமான அன்று இராகு, சூரியனை பிடிப்பதற்காக வந்து கொண்டிருந்தான். அவன் அனுமானை பார்த்து திடுக்கிட்டு தேவேந்திரனிடம் முறையிட்டான். சூரியனை பிடிக்க விடாமல் ஒரு குழந்தை தடுத்து நிற்கிறது. அதை நீங்கள் தான் விரட்ட வேண்டும் என்று வேண்டினான்.இந்திரன் கோபத்துடன் கையில் வஜ்ஜிராயுதத்தை ஏந்தியபடி சூரியமண்டலம் வந்தான். தன் ஆயுதத்தை அனுமன் மீது ஏவினான். அது அவனுடைய தாடையை தாக்கியது. அனுமன் பூமியில் வீழ்ந்து மயக்கமுற்றான். இச்செய்தி அஞ்சனைக்குத் தெரிந்து வானர வீரர்களுடன் அனுமன் இருந்த இடத்திற்கு வந்தாள். தன்மகனின் நிலைமையக் கண்டு மகேஸ்வரனை வேண்டினாள்.

அச்சமயம் இந்திரன் அங்கு தோன்றி "அஞ்சனையே! கவலை வேண்டாம். அனுமன் சூரியனைப் பிடித்திருந்தால் அதன் கிரகணங்களால் தீமைகள் விளையும். அதனால்தான் தடுப்பதற்காக என் வஜ்ஜிராயுதத்தை ஏவினேன். அனுமன் சிவபெருமான் வரம் பெற்றவன். தேவர்களாகிய எங்கள் அருளும் அவனுக்கு என்றும் இருக்கும்" என்று கூறினார். அனுமன் சிறிது நேரத்தில் விழித்தெழுந்தான். ஆனால் வஜ்ஜிராயுதம் தாடையில் தாக்கியதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அது நீண்டு இருந்தது. பின்னர் அத்தோற்றம் மாறவில்லை. அதுவே அனுமனின் உருவத்தில் பிரத்தியேக அமைப்பாக உள்ளது.

ஒரு சமயம் அனுமன் தன் தோழர்களுடன் காடுகளிலும் மலைகளிலும் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் பெரிய மரங்களையெல்லாம் ஒரே கையால் பிடுங்கி வீசி எறிவான். பாறைகளையும் அவ்வாறே பந்துபோல தூக்கி விளையாடிக்கொண்டிருந்தான். அவ்வாறு இருக்கும் பொழுது ஒரு பகுதியில் யாகம் செய்துக் கொண்டிருந்த முனிவர்கள் மீது அவன் எறிந்த மரங்களும் பாறைகளும் விழுந்தன. இதனால் அவர்களுக்கு கோபம் ஏற்பட்டது. "அனுமன் தன் வலிமையைப் பற்றி தான் உணராமல் போகட்டும்" என்று சாபமிட்டனர். இதைறிந்த அஞ்னாதேவி முனிவர்களிடம் வந்து தன் மகனின் பிழையை பொறுக்குமாறு மன்றாடினாள். முனிவர்களும் அனுமனின் சிரஞ்சீவி தன்மையும், மகிமையும் உணர வந்தது. அதனால் பிறர் எடுத்துரைக்கும் போது தன் வலிமையையுணர்ந்து செய்வதற்கரிய செயலைப் புரிவான் என்று அவனை வாழ்த்தினர்.

அதன்பிறகு அனுமன் முனிவர்களை பெரிதும் மதித்தான். அவர்களைப் பணிந்து அவர்களிடமே வேதசாஸ்திர புராணங்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தான். அனுமன் உடல் பலத்துடன் அறிவு வளரப் பெற்றான். அஞ்சனாதேவி தன் மகனை கிஷ்கிந்தைக்கு வாலியின் தம்பியான சுக்கிரீவனிடம் அழைத்துச் சென்றான். சுக்கிரீவன் அனுமனின் அறிவாற்றலையும் செயல்திறனையும் கண்டு அவனை தன் அமைச்சனாக ஏற்றுக் கொண்டான்.

### இராமன் அன்பைப் பெற்ற அனுமன்

சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் பகைமூண்டதால் சுக்கிரீவன் நாட்டை விட்டு விரட்டப்பட்டான். தன் அண்ணனை எதிர்ப்பதற்கு வலுவின்றியிருந்தான். அச்சமயமத்தில் தசரதகுமாரன் இராமன் தந்தையின் வாக்குப்படி தன் மனைவி சீதை, இலக்குவணனுடன் ஆரண்யவாசம் செய்து வந்தபோது இலங்கேஸ்வரனான இராவணன் சீதையை கவர்ந்து சென்றுவிட்டான். அதனால் வேதனையுற்ற இராமனும் இலக்குவணனும் சீதையைத் தேடி அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். அவர்களை சுக்கிரீவன் பார்க்க நேர்ந்தது. வாலியின் ஆட்கள்தான் தன்னை எதிர்க்க வந்திருக்கிறார்களோ என்று அஞ்சி அனுமனை அவர்களைப் பற்றி அறிந்துவர அனுப்பினான்.

அனுமனுக்கு இராமனை முதன்முறையாக பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. அப்பொழுதே அவன் இராம பக்தனாக மாறி விட்டான். இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்பு ஏற்பட பாலமாக அமைந்தான் அனுமன். சீதையை இராவணன் கவர்ந்து சென்ற போது அவள் தன் ஆபரணங்களை பூமியில் வீசியெறிந்தாள். அவற்றை வானர வீரர்கள் கண்டெடுத்து சுக்கிரீவனிடம் கொடுத்தனர். அவற்றை இராமனுக்கு காட்ட இவை சீதையினுடையதே என்பதை அறிந்து மேலும் துயருற்றான்.

சீதையைக் கண்டு ஒப்படைக்கும் பொறுப்பை சுக்கிரீவன் ஏற்றான். இராமன் வாலியை வதம் செய்து சுக்கிரீவனை மன்னாக்கினான். அதன்பிறகு சீதையைத்தேடி வர வானரப் படையினரை அணியாகப் பிரித்து பல திசைகளுக்கும் அனுப்பி வைத்தான் சுக்கிரீவன். அப்போது இராமன் அனுமனை மட்டும் தனியே அழைத்து "வாயுபுத்திரா! உன் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீ சீதையை காண நேரிடும் போது இந்தக் கணையாழியை அவளிடம் காட்டி எங்கள் நிலவரத்தை தெரியப்படுத்து" என்று கூறி தன் கணையாழியைக் கழற்றிக் கொடுத்தான். அத்துடன் சீதைக்கும் தனக்கும் தெரிந்த சில இரகசிய நிகழ்ச்சிகளையும் அவனுக்குக் கூறினான். சீதை அனுமனைக் கண்டு அஞ்சாமல் நம்பிக்கையுடன் இருக்க வேண்டுமென்பதற்காகவே இராமன் இவ்வாறு செய்தான்.

### கடலைத் தாண்டினான்

வானர வீரர்கள் எல்லாத் திக்குகளிலும் சீதையைத் தேடி அலைந்தனர். எங்கும் கிடைக்கவில்லை. அனைவரும் மகேந்திர மலையில் வந்து கூடினர். இன்னும் எங்கு சென்று தேடுவது என்ற புரியாமல் விழித்தனர். அவளைக் கண்டுப்பிடிக்காமல் செல்வதைவிட சாடாயுவைப் போல வீரமரணம் அடையலாம் என்று வானர வீரர்களுக்கு அனுமன் கூறினான். இந்த வார்த்தையைக் கேட்டு சடாயுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அண்ணன் தீய்ந்து போன சிறகுடைய சம்பாதி அங்கு வநதான். சடாயு இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற சமயம் அவனை தடுத்துப் போரிட்டுப் பின் அவனால் வதைக்கப்பட்டான் என்ற விவரத்தை சம்பாதி அறிந்து மிகவும் வருந்தினான்.

சம்பாதி சீதை இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் என்ற உண்மையைக் கூறினான். அப்போதே அவனுடைய தீய்ந்து போன சிறகுகள் மீண்டும் முளைத்தன. அவன் மேலும் உற்சாகமுற்று மகேந்திர மலையின் உச்சியிலிருந்து இலங்கை இருக்கும் நிலவரத்தையும், நூறு யோசனை தூரமுள்ள இலங்கையை இங்கிருந்து ஒரே மூச்சில் தாண்ட வல்லவர்களால் தான் அடைய முடியும் என்று சொன்னான்.

இதைக் கேட்டு வாலியின் மைந்தனான அங்கதன் கூட அசந்து போனான். வானர வீரர்களில் யாருக்கும் அத்தகைய வலிமை இல்லை என்ன செய்வது என்று புரியாமல் விழித்தனர். அப்போது கரடி அரசனான ஜாம்பவானும் அவர்களுடன் இருந்தான். ஜாம்பவானும் இராமன் மீது பக்தியும் சீதையை தேடுவதில் ஆர்வமும் கொண்டிருந்தான். அவனுக்கு அனுமன் மீது நம்பிக்கை வந்தது. சிறு குழந்தையாக இருந்தபோது வானத்திலிருந்த சூரியனையே தாவிப் பிடிக்கச் சென்ற அவனால் நிச்சயம் இலங்கையை அடைய முடியும் என்று அனுமனின் வலிமையை எடுத்துக் கூறினான்.

அப்பொழுது தான் அனுமனுக்கும் தன் வலிமையைப் பற்றி தெரிய வந்தது. அவன் மனதில் உத்வேகம் பிறந்தது. "ஸ்ரீராம் ஸ்ரீராம்" என்று இராமநாமத்தை ஜெபிக்க அவன் பேருருவம் எடுத்தான். மகேந்திர மலையின் உச்சியை அடைந்து அங்கிருந்து வாயு வேகத்தில் கடலைக் கடந்து பறந்து சென்று கொண்டிருந்தான்.

அனுமன் வானத்தில் பறந்து செல்லும் காட்சியை காண தேவர்கள் வான்வெளியில் வந்து கூடினர். அனுமன் இராமனின் காரியமாக செல்வதை அறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலரசன் அவனுக்கு இடையூறு செய்யவில்லை. உதவ விரும்பி கடலுக்கடியில் இருக்கும் மைனாக மலையிடம் "இராம காரியமாக செல்லும் அனுமன் களைப்புறுவான். அதனால் அவன் களைப்பாறிச் செல்ல உதவு" என்றான். அவ்வாறே உதவ மைனாகமலை கடலுக்கடியிலிருந்து உயரச் சென்றது. குறுக்கே மலை இருப்பதைக் கண்ட அனுமன் கோபத்துடன் கைமுஷ்டியினால் ஓங்கி அறைய மலை கடலில் அடிக்குச் சென்றது. மலையரசன் மனித உருவுடன் அனுமனிடம் "நான் உனக்கு உதவவே வந்தேன். தங்கள் தந்தையான வாயுபகவான் இந்திரனின் கோபத்திலிருந்து என்னைக் காப்பாற்றி இந்தக் கடலினுள் வைத்திருக்கின்றான். இராம காரியமாகச் செல்லும் நீ சிறிது நேரம் என் மீது தங்கி இளைப்பாறிச் செல்ல வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள "இப்பொழுது நேரமில்லை. திரும்பும் போது தங்குகிறேன்" என்று கூறிவிட்டு தொடர்ந்து சென்றான்.

இதைக் கண்ட தேவர்கள் அனுமனின் வலிமையை சோதிக்க பாம்புகளுக்கு அன்னையான ஸுரஸை அனுப்பி வைத்தனர். ஸுரஸ் ஆகாயத்திற்கும் பூமிக்கும் குறுக்கே வழி மறித்து நின்று, "வானரனே! உன்னை நான் விழுங்கப் போகிறேன்." என்றாள். அனுமன் "உனக்காக சாகப் பயப்படவில்லை. ஆனால் நான் இராம காரியமாக செல்வதால் தடுக்காதே வரும்போது நானே உனக்கு இரையாகிறேன். என்று கூறியும் கேட்காமல் தன் வாயைத் திறந்தாள். அனுமன் சட்டென்று தன் உருவை சிறிதாக சுருக்கிக் கொண்டு வாய் வழியாக புகுந்து வாயை மூடுவதற்குள் வெளியில் வந்து விட்டான். தேவர்கள் அனுமனின் திறமையைக் கண்டு வியந்தனர். ஸுரஸ் அனுமனைப் பணிந்து "உன் ஆற்றலை சோதிக்கவே இவ்வாறு செய்தேன். நீ வெற்றியுடன் திரும்புவாயாக!" என்று வாழ்த்தி அனுப்பினாள்.

ஸிம்ஹிகை என்ற அரக்கி கடலிலிருந்து இலங்கைக்கு எவ்வித ஆபத்தும் வராமல் காத்து வருபவள். அவள் அனுமன் இலங்கைக்குப் போவதைக் கண்டு அவன் நிழலைப்பிடித்து கீழே இழுத்தாள். அவனை விழுங்கி விட தன் வாயை அகலமாக திறந்தாள். அனுமன் இராமநாமத்தை உச்சரித்தப்படி தன் உருவத்தை சுருக்கினான். அரக்கியின் வாயினுள் புகுந்து வயிற்றைப் பிளந்து கொண்டு வெளியேறினான். அரக்கி அலறியபடி கடலிலேயே உயிரிழந்தாள்.

**இலங்கையில் அனுமன்**

அனுமன் கடலைக் கடந்து இலங்கையை அடைந்தான். இலங்கையின் அழகை கண்டு ரசித்துக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த வேளையில் இலங்கையின் காவல் தெய்வமாகிய இலங்கினி அவனைத் தடுத்தாள். ஆனால் அவன் நிற்கவில்லை. அதனால் இலங்கினி அவனை அடிக்க கையை ஓங்கினாள். அதற்குள் அனுமன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு தன் கையால் ஓங்கி அறைந்தான். அந்த வலி தாங்க முடியவில்லை. அத்துடன் பிரம்மன் கூறியது நினைவுக்குவந்தது. அனுமனிடம் "என்றைக்கு ஒரு குரங்கு என்னை வெல்லுமோ அப்போதே இலங்கை அழிவுறும் என்று ஒருமுறை பிரம்மா கூறியிருக்கிறார். அது நடக்கப் போகிறது. தர்மம் வெல்லும் நீ சென்று வெற்றியுடன் திரும்பு" என்று காவல் தெய்வமே வாழ்த்தி அனுப்பியது.

இலங்கை அரண்மனையினுள் புகுந்தான் அனுமன். ஒவ்வோர் இடமாகச் சென்று பார்த்தான். எங்கும் சீதையைக் காணவில்லை. அப்போது இராவணனின் சயன அறைக்குச் சென்று பாரத்தான். அவனோ கம்பீரமாக படுத்திருந்தான். அவன் வாய் "சீதை" என்று பிதற்றிக் கொண்டிருப்பதையும் கண்டான். அடுத்து இராவணனின் மனைவி மண்டோதரி படுத்திருந்த அறைக்குச் சென்றதும் வியப்பும் அதிர்ச்சியும் கொண்டான். இவ்வளவு பேரழகு வாய்ந்தவள் சீதையாகத் தான் இருப்பாளென்று தவறாக எண்ணினான். பிறகு கூர்ந்து கவனித்தபோது திறந்திருந்த அவள் வாயிலிருந்து எச்சில் வழிந்த அவள் கன்னங்களில் காய்ந்திருப்பதை கண்டு, அவளும் அரக்கியாகத் தான் இருப்பாள் என்று மனந் தெளிந்தான். தான் சந்தேகப்பட்டதற்காக பெரிதும் வருந்தினான்.

அரண்மனை முழுவதும் தேடியும் சீதையை காணவில்லை.. முடிவில் அசோக வனத்தில் சீதையைக் கண்டான். சீதை இராமனின் நினைவாகவே பிதற்றிக் கொண்டிருந்ததைக் கண்டு பெருமைப்பட்டான். அப்பொழுது இராவணன் வந்து சீதையின் அன்பைப் பெற பல ஆசை வார்த்தைகளைக் கூறினான். ஆனால் அவளோ அவனை இகழ்ந்துரைத்தாள். இராமனின் பெருமைகளைக் கூறி அவனிடம் தன்னை ஒப்படைத்த விடுவதே அவனுக்கு உகந்தவழி என்றும் எடுத்துரைத்தாள். ஆனால் இராவணன் இன்னும் இரண்டு மாதத்திற்குள் இணங்காவிட்டால் கொன்றுவிடுவதாக பயமுறுத்திவிட்டு சென்றான்.


அவன் சென்ற பிறகு அங்கிருந்த அரக்கிகள். சீதைக்கு இராவணனை விரும்பும்படி உபதேசம் செய்தனர். அவர்களையெல்லாம் சினந்தாள் சீதை. இக்காட்சிகளை கண்ட அனுமன். சீதையின் பெருமையை உணர்ந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கிருந்த அரக்கிகள் உறங்கிவிட்டனர். பிறகு அனுமன் சீதை தன்னை நம்ப வேண்டுமென்பதற்காக சீதையின் காதில் விழுமாறு இராமனின் அருமை பெருமைகளைக் கூறினான். அவற்றைக் கேட்க கேட்க சீதையின் முகபாவனை மாறியது.

இவ்வளவு நாள் இல்லாது இப்பொழுது இவ்வாறு பேசுவது யார் என்று எண்ணிய பொழுது அனுமன் சீதையின் முன் தோன்றி இராமன் அளித்த கணையாழியைக் காட்டி நம்பிக்கைப் பெறச் செய்தான்.

ஜானகிக்கு ஆறுதலையும் விரைவில் வந்து இராமபிரான் மீட்பான் என்ற நம்பிக்கைகளையும் கொடுத்தான். சீதை தன்னிடமிருந்த சூடாமணியை அனுமனிடம் கொடுத்து இராமனிடம் அடையாளமாகக் காட்டும்படி கூறினாள். பிறகு அனுமன் விடைபெற்றான். அனுமன் இராவணனின் மீது இருந்த கோபத்தினால் அசோக வனத்தை அழிக்க முற்பட்டான். அதைக் கண்ட அரக்கிகள் இராவணனிடம் முறையிட்டனர். ஒரு குரங்குக்கு இத்தனை வலிமையா என்று எண்ணினான். இராவணன் தன் படைகளை அனுப்பி குரங்கை அழைத்துவரச் செய்தான். அவர்களுடன் அனுமன் தனித்து நின்று பயங்கரமாகப் போரிட்டான். மந்திரிகளையும் சேனாதிபதிகளையும் கொன்றான்.

அரக்கர்கள் பலர் உடலுறுப்புகளை இழந்து துடிதுடித்தனர்.. இராவணனின் இளைய மகனான அச்சக்குமாரனின் மண்டையை உடைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றான் அனுமன். அதனால் வேதனையுற்ற இராவணன் மூத்தமகன் இந்திரஜித்தை [illegible]ான். இந்திரஜித் அவனை போரில் வெல்ல [illegible] என்று நினைத்து பிரம்மஹஸ்திரத்தை ஏவி அவனைக் கட்டி இராவணன் அவைக்கு இழுத்து வந்தான்.

இராவணன் அரண்மனையில் தன்னை இராமன் அனுப்பிய தூதனாக அறிமுகம் செய்து கொண்டு இராவணன் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி மனந்திருந்தி சீதையை இராமனுடன் சேர்த்து விடுமாறு சொன்னான். ஆனால் இராவணன் அனுமன் மீது சீறி பாய்ந்தான். அவனைக் கொல்ல முற்பட்டதைக் கண்ட அவன் தம்பி விபீஷணன் தூதுவனைக் கொல்வது தருமம் அல்ல என்று தடுத்தான்.

பிறகு அனுமனைக் கொல்லாது அவன் வாலில் ஒரு துணியைச் சுற்றி நெருப்பு வைத்து துரத்திவிட்டனர். அனுமன் இலங்கை நகரில் எல்லாப் பகுதிகளிலும் திரிந்து ஒரு வீடுகூட பாக்கிவிடாமல் தீக்கு இரையாக்கினான். ஏராளமான அரக்கர்களும் பொருட்களும் நாசமாயின. ஆனால் சீதை இருந்த இடத்திற்கு மட்டும் எந்தவித சேதமும் உண்டாக்கவில்லை.

*தொடரும்...*




[illegible]யான தகவல்களை அள்ளித்தரும்

FLEX Publications வெளியீடுகள்

flex அருள்

flex Wellawatte Guide

flex STUDENT

flex Dehiwala Guide

flex எக்ஸ்பிரஸ்

[illegible] Road, Colombo 6.
Tel: 2364157, 2506614,
Fax: 2501766
Hotline: 0777-555026
E-mail: flexvijay@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

மாணிக்கவாசகர் குருபூஜை (ஜூன்-24, ஆனி 10)



### அறிமுகம்

சைவ சமய குரவர் நால்வரில் மாணிக்கவாசக சுவாமிகள் ஏனைய மூவரிலும் வேறுபட்டவராவார். அவர் பட்டம் பதவிகள் பெற்றவர். அவற்றைத் துறந்து, ஆன்மீக வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தவர். தில்லை நடராசப்பெருமானே அவரது திருவாசகப் பாக்களை ஏட்டில் எழுதிய புண்ணியம் பெற்றவர். பசவர், போப்பையர் போன்றோரால், உருக்கப் பண்பு நிறைந்த பாடல்களைப் பாடியவர் என்ற மதிப்பைப் பெற்றவர். காலம், இடம் மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்து கொடுக்கப்பட்ட இம்மதிப்பு மாணிக்கவாசக சுவாமிகளின் சிறப்பின் சிகரமாகும்.

### வாழ்வும் பணியும்

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாதவூரினர். திருவாதவூர் மதுரையை அடுத்துள்ளது. மதுரை அக்காலப் பாண்டி நாட்டின் தலைநகர். அக்காலத்தில் பாண்டி நாட்டை அரிமர்த்தன பாண்டியன் என்பவன் ஆண்டவன் என்பது வரலாறு. பாண்டிய மன்னர்களுக்கு அமைச்சர்களை அளித்த அந்தணர்குலம் ஒன்றிருந்தது. அக்குலத்திலேதான் சுவாமிகள் பிறந்தவர்கள். ஆதி சங்கரர் வகுத்த ஏகான்மவாதம் "மிண்டிய மாயாவாதம்" எனப் பேசப்பட்ட காலம் அது என்பர் சமய வரலாற்றினர். ஆயினும், மாணிக்கவாசகரின் பெற்றோர், இயற்பெயர், குடும்ப வாழ்க்கை என்பன பற்றிய குறிப்புகள் இப்போது திருத்தமாகக் கிடைக்கவில்லை.

அறிவாற்றல் மிக்க மாணிக்கவாசகர் பாண்டிய அரசனின் அவையில் அமைச்சராகப் பணிபுரிந்தார். அவரது திறமையையும், பணியையும் மெச்சிப் பாண்டிய மன்னன் "தென்னவன் பிரமராயன்" என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினான். ஆயினும், உலகியல் வாழ்வில் நிலை பெறாத அவரது மனம் ஆன்மீக விசாரணையிலேயே நாட்டம் கொண்டது.

### வாழ்க்கையில் திருப்பம்

கீழைக்கடற்கரையில், மரக்கலங்களில் அராபியக் குதிரைகள் வந்திறங்குவது வழக்கம். அக்குதிரைகளை வாங்கிவரும் பணியைப் பாண்டியன் மாணிக்கவாசகரிடம் ஒப்படைத்தான். அவர் பரிவாரங்களுடன் சென்றார். செல்லும் வழியில், திருப்பெருந்துறை என்னும் இடத்தில், குருந்தமர நிழலில் குருநாதர் ஒருவர் சீடர்களுக்கு, ஞானோபதேசம் அளிக்கும் காட்சியைக் கண்டார். அவரின் சீடராகச் சேர்ந்து உபதேசம் பெற்றார். அரச பணியை மறந்தார். பரிவாரத்தினர் மாணிக்கவாசகரின் செயற்பாடுகளைப் பாண்டியனிடம் சென்று முறையிட்டனர். பாண்டியன் இதனை அறிந்தவுடன் மாணிக்கவாசகருக்குச் செய்தி ஓலை அனுப்பினான். மாணிக்கவாசகர் ஓலையை கொண்டு வந்த ஏவலர்களைக் கொண்டே அதனை வாசிப்பித்தார். "இறைவனின் அடியவனான எனக்குப் பாண்டியன் எவ்வாறு கட்டளை இட முடியும்?" என்று குருநாதரிடம் அவர் வினவினார். அதற்குக் குருநாதர் "நீ மதுரைப் போ: அங்கு ஆவணி மூல நாளிற் குதிரைகள் வருமென்று பாண்டியனுக்குத் தெரிவி" என்று கூறிவிட்டார். அத்துடன் அரசனுக்கு வழங்குமாறு மாணிக்கக்கல் ஒன்றினையுங் குருநாதர் மணிவாசகரிடங் கொடுத்தார். குருவின் சொல்லைச் சிரமேற் கொண்டு மணிவாசகர் மதுரைக்கு ஏகினார்.

### திருவிளையாடற் சோதனைகள்

மணிவாசகர் கொண்டுசென்ற நிதி பற்றி வினவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தான். தண்டலாளர்கள் அவரை வருத்தினர். ஆவணி மூல நாளில் குதிரைகள் மதுரைக்கு வந்தமையால் பாண்டியன், மணிவாசகருக்கு விடுதலை வழங்கி, கொற்றக் குதிரையில் வந்த குதிரை வணிகத் தலைவருக்குச் சிறப்புப் பரிசும் அளித்தான். இக்குதிரைகள் சிவபிரானின் திருவிளையாடலால் பரி வடிவம் பெற்ற நரிகளாகும். குதிரை வணிகத் தலைவனாக சிவபிரான் வந்தது பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்தில்,

**'பெற்றி பெறற்கரிய பெம்மான் பெருந்துறையான்**
**கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி'**

எனப் பாடியுள்ளார்.

அன்றிரவு சிவபிரானின் மற்றொரு திருவிளையாடல் இடம்பெற்றது. பரிகள் மீண்டும் நரிகளாயின. குதிரைப் பந்தியில் கட்டப்பட்டிருந்த உண்மைக் குதிரைகளைக் கடித்து அவை ஊளையிட்டன. இதைக் கேள்வியுற்ற பாண்டியன் மணிவாசகருக்கு மீண்டும் தண்டனை வழங்கினான். நிதி முழுவதையும் திருப்பி ஒப்படைக்கும்வரை கடுந்தண்டனை வழங்கினான். தண்டலாளர்கள் ஆற்றுச் சுடுமணலில் நிறுத்தி, நெற்றியில் கல்லேற்றி வதைத்தனர்.

இந்நிலையில் மணிவாசகருக்கு அபயம் அளிக்கத் திருவுளம் கொண்ட சிவபிரான் மற்றொரு திருவிளையாடலைச் செய்தார். வற்றி வரண்டிருந்த வைகை நதி பெருகிக் கரை மீறிப் பாய்ந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. எனவே, மக்கள் கருத்திற்கு மதிப்புக் கொடுத்த பாண்டிய மன்னன் மணிவாசகருக்கு விதித்த தண்டனையை விலக்கினான். வெள்ளச் சேதம் எதிர்காலத்தில் நிகழாதிருக்க, வெள்ளத்தடை அணைகட்டும் பணியைக் கூட்டுறவு அடிப்படையில் நிறைவேற்றப் பாண்டியன் ஆணையிட்டான். 'செம்மனச் செல்வி' என்னும் பிட்டுவாணிச்சி தனது பங்கை நிறைவேற்ற இயலாதவளாக இருந்தாள்.

இவ்வேளையில் சிவபிரான் பிட்டுவாணிச்சியின் கூலி ஆளாக மாறி மற்றொரு திருவிளையாடலைப் புரிந்தார். அவர் பிட்டுவாணிச்சியின் உதிரும் பிட்டை உண்டும் மணலில் படுத்துறங்கியும் வேலை செய்யாது காலத்தை வீணே கழித்தார். இப்பொதுப்பணியை மேற்பார்வை செய்யவந்த பாண்டியன், பிட்டுவாணிச்சியின் பணி நிறைவேறாதது கண்டு, அவளது கூலி ஆளின் முதுகிலே தன் கையிலிருந்த பிரம்பால் ஓங்கி அடித்தான். மாயக் கூலியாள் மறைய, அவ்வடி உலகிலுள்ள சகல உயிர்கள் மீதும் பட்டது. இச்சம்பவத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

**'மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன்மேனி பாடுதுக்காண் அம்மானாய்'**

என்று கூறியுள்ளார்.


இதன் பின்னர் மதுரை மக்களும் மன்னனும் சிவபிரானின் திருவிளையாடலை உணர்ந்தனர். பாண்டியன் மணிவாசகரின் மதிப்பை உணர்ந்து, அவரின் ஞான மார்க்கத்தைத் தொடர அனுமதியளித்தான்.

**ஆலய தரிசனம் சிதம்பர முத்தியும்**

சுவாமிகள் அதன் பின்னர் தமது வாழ்க்கையை சமயத்திற்காகவே அர்ப்பணித்தார். திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று சிவபிரானை வழிபட்டார். அங்கெல்லாம் பதிகங்கள், பத்துக்கள் போன்ற பல பாசுரங்களைப் பாடினார். இப்பாசுரங்களில், தென்னாட்டுச் சைவரிடையே வழங்கிய, நாட்டுப் பாடல் வடிவங்களையும் இசை வடிவங்களையும், ஞானமும் பக்தியும் மிளிரக் கையாண்டுள்ளார். இவற்றை அவரின் திருவெம்மாவை, திருச்சாழல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவெம்பாவை, திருக்கோத்தும்பி முதலிய பாடல் தொகுதிகளில் காணலாம். தமது யாத்திரைகளின் போது, மாற்றுச் சமயத்தவரோடு வாதங்கள் பல புரிந்து வெற்றியீட்டினார். அவரது வாழ்க்கை வரலாற்றில், ஊமை இளவரசியைப் பேசச் செய்தமை முதலான அற்புதங்கள் குறிப்பிடத்தக்கவை.

மாணிக்கவாசக சுவாமிகள் தமது அந்திமகாலத்தில் சிதம்பரத்தில் வாழ்ந்தார். ஒரு நாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து, 'நீர் பாடிய பாடல்களை ஓத விரும்பி அவற்றை உம்மிடம் கேட்டு எழுதுவதற்கு வந்தேன்'' என்று கூறினார்.

எனவே, அவர் அப்பாடல்களை மீண்டும் பாட, அந்தணர் அவற்றை ஏட்டில் எழுதினார். பின்னர் சிதம்பரநாதரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துக் கோவைப் பிரபந்தம் ஒன்று பாடுமாறு அந்தணர் கேட்டுக் கொண்டார். சுவாமிகளும் அவ்வாறே திருக்கோவையாரைப் பாடினார். இதனையும் எழுதிய பின் அந்தணர் விரைவாக மறைந்து விட்டார்.

அடுத்த நாள் காலையிலே தில்லைப் பெருமானுக்குப் பூசை செய்ய வந்த தில்லை மூவாயிரவரில் ஒருவர், கோயிற் படியில் ஏடு ஒன்று இருக்கக் கண்டார். அவர் அதனை எடுத்துப் பார்த்த பொழுது, அதிலே திருவாசகமும் திருக்கோவையாரும் எழுதப்பட்டிருந்தன. ஏட்டின் ஈற்றில், “வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது” என்று அடிக் குறிப்பு எழுதி, “அழகிய சிற்றம்பலமுடையான்” எனக் கையொப்பமும் இடப்பட்டிருந்தது. இதனை அறிந்து வியந்த தில்லை மூவாயிரவர் பலர் அடிகளிடஞ் சென்று, “நீர் பாடிய பாடல்களுக்குப் பொருள் யாது?” என்று கேட்டனர். மூவாயிரரையும் அழைத்துக் கொண்டு தில்லைப் பெருமானின் கோயிலுக்குச் சென்று, அங்கு அம்பலத்தரசனைச் சுட்டிக்காட்டி இவரே அதன் பொருள்' என்று கூறிவிட்டுச் சிவசாயுச்சியம் அடைந்தார். 'சிவத்தோடு இரண்டறக் கலத்தல்' என்னும் அத்துவித முத்தியே, திருவாசகம் கூறும் ஞானமார்க்கத்தின் பொருள் என்பதை மாணிக்கவாசகரின் கடைசிச் சொல் உணர்த்துகிறது. மேலும்,

**‘கடையூழி வரும் தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள் உடையார் உன்வாசகத்தில் ஒருபிரதி கருதினதே’**


என்னும் சுந்தரம்பிள்ளையவர்களின் (மனோன்மணீயம்) கூற்று மாணிக்கவாசகரது திருவாசகத்தின் சிறப்பை எடுத்தியம்புகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் பங்கீடு

-போகர

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சரஸ்வதி நதிக்கரையில் மிகவும் உயர்ந்த நாகரீகம் இருந்தது. அங்கு வசித்தோர் இயற்கையோடும் தேவதைகளுடனும் ஒட்டி வாழ்ந்து வந்தார்கள்.





இவர்களில் பலர் வேதங்களை உருவாக்கிய ரிஷிகள். இவர்கள் நீண்ட ஆயுளையும் சுகமான வாழ்வையும் கோரி பிறப்பு ஆகியவற்றின் இரகசியம் பற்றி ஆராய்ந்தும் வந்தார்கள். இவர்களில் ஒருவனே ருரு என்பவன்.



ருரு ஒரு ரிஷியின் புதல்வன். அதே ரிஷி பிரமத்வரை என்ற கந்தர்வப் பெண்ணை தம் ஆசிரமத்திலேயே வளர்த்து வந்தார். ருருவும் பிரமத்வரையும் ஒன்றாகக் காட்டிலும் நதிக்கரையிலும் திரிந்து விளையாடி ஆனந்தமாகக் காலம் கழித்து வந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருவரும் வளர்ந்து விவாக வயதை அடைந்த போது இருவருக்கும் விவாகம் செய்ய நிச்சயிக்கப்பட்டது. விவாக முகூர்த்தத்திற்கு முதல் நாள் ருரு காட்டிற்குள் போய் பிரமத்வரைக்காக மலர்கள் பறித்து வந்தான். பிரமத்வரை அவன் வரவிற்காக எதிர்பார்த்திருந்தாள்.

அப்போது ஒரு நல்ல பாம்பு அவளைத் தீண்டி விட்டுப் போய் விட்டது. விஷம் அவளது உடலில் பரவுவது கண்டு அவள் கீழே விழாமல் ருரு தாங்கிக் கொண்டான்





பிரமத்வரையும் உடனேயே இறந்து விடவில்லை ருரு அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டது கேட்டு அவள் கண் விழித்துப் பார்த்தாள். ஆனால் அவளால் பேச முடியவில்லை. கண்ணையும் மூடிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆசிரமப் பகுதியில் வாழ்ந்த மற்ற ரிஷிபத்தினிகள் வந்து பிரமத்வரையின் உடலை எடுத்துச் சென்றார்கள். ருரு வெகு நேரம் வரை தனியாகஇருந்தான். தன்னையும் பிரமத்வரையையும் பிரித்த மரணதேவதையை என்ன செய்வது என்று அவன் யோசிக்கலானான்.





ருரு வெகு நாட்கள்வரை காட்டில் அலைந்து திரிந்தான். அவனைத் தேற்ற யாருமே துணிவு கொள்ளவும் இல்லை. ஏனெனில் அவன் திடீரெனக் கோபம் கொண்டு சபித்து விடுவானோ என்ற பயமே அவர்களுக்கு ஏற்பட்டது.

முடிவில் மன்மதன் ருருவின் முன் தோன்றி அவன் எமலோகத்திற்குப் போகும் வழியைக் கூறினான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ருரு எமலோகத்திற்குப் போனான். அவன் எமகிங்கரர்களைப் பற்றிக் கவலைப் படாமல் நேரே யமதர்மனையே போய்ப் பார்த்தான்.



ருரு பிரமத்வரையின் உயிரைத் திருப்பிக் கொடுக்குமாறு கேட்கவே எமதர்மனும் "என்னால் அவள் உயிரைக் கொடுக்க முடியாது. ஆனால் ஒரு வழி உள்ளது. நீ உன் வாழ்நாளில் பாதியை அவளுக்குக் கொடுத்தால் அவள் மீண்டும் உயிர் பெறமுடியும்" என்றான். ருரு இதற்கு இணங்கினான்.



ருரு மறுநிமிடமே பூலோகத்திற்குத் திரும்பி வந்தான். பிரமத்வரையும் தூங்கி எழுந்தவள் போல எழுந்து வந்தாள். அவர்களது விவாகம் நடைபெற ரிஷி முனிவர்கள் அத் தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN UK

Undergraduate and Postgraduate Courses







## OUR SERVICES ARE ABSOLUTELY FREE


Before the Visa or After Getting Visa





**flex Institute**
*Step Towards a Bright Future*
(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Colombo 6.
**Hotline: (+94) 777-761346**
Fax: (+94) 11 2501766
E-mail: flexinstitute@sltnet.lk
**Web: www.flexinstitute.lk**



## Attractive Airfares to all Destinations

**Air Ticketing / Reservations** | **Worldwide Tour Packages** | **Visa Arrangements**

**flex Travels & Tours**
*Total Travel Solution*
(A Subsidiary of Flex Graphic)

**Colombo Office**
4, IBC Road, Colombo 06.
Hotlines : 0775 952357, 0773 520383
Tel: 0117207787 Fax: 11 2501766
E-mail: flextravels@sltnet.lk

**Chennai Branch Office**
Jain Plaza # 8 1st Floor,
124/63, Pondy Bazaar, T.Nagar.
Chennai - 600 017, Indai.
Tel: (+91) 44 4217 8154
Mobile : (+91) 87 5471 2613


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-சென்ற இதழின் தொடர்ச்சி-

# அசுரனுக்கும் வரமளித்த பெருமான்

கிருச்சமதர் ஒரு மகாமுனிவர். கடுந்தவம் புரிந்து விநாயகப் பெருமானை நேருக்கு நேராகச் சந்திக்கும் பேறடைந்து அவருடைய அனுக்கிரகத்தை குறைவறப் பெற்றவர்.

அமைதி நிரம்பிய ஒரு கானகத்தில் விநாயகப் பெருமானின் திருவடிகளை சதா நினைத்து பூஜித்த வண்ணம் வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒரு நாள் முனிவர் கிருச்சமதர் ஆழ்ந்த தியானத்திலிருந்தார்.

தியானம் முடித்து அவர் கண்களைத் திறந்தபோது அவருடைய கண்களிலிருந்து வீசிய யோகாக்கினியிலிருந்து பலி என்ற கோர சொருபமுடைய ஓர் அசுரன் தோன்றினான்.

இடியோசை போன்ற அவனுடைய பயங்கர முழக்கத்தைக் கேட்டு கிருச்சமதர் திடுக்கிட்டார். திடீரென தம்முன் காட்சியளிக்கும் அந்த அசுரன் எப்படி வந்தான் என்று முதலில் அவருக்கு விளங்கவில்லை.

ஞான திருஷ்டியினால் பார்த்தபோது முன்னர் தமக்குள்ள ஒரு சாபத்தின் விளைவாகத் தம்மிடமிருந்து அவன் தோன்றியிருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டார்.

அப்புறந்தான் அவருக்குத் தைரியம் வந்தது. பலி என்ற அந்த அசுரன் கிருச்சமதரை வணங்கி, "தந்தையே, தங்கள் அருளால் தோன்றிய நான் மூவுலகங்களையும் வென்று அதிபதியாகத் திகழ்ந்து புகழ்பெற விரும்புகின்றேன். அந்த நிலையை நான் அடைய தயவு செய்து வழிகாட்டி உதவுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

"மகனே! உலகத்தில் வேண்டியவர்களுக்கு வேண்டும் வரங்களைத் தடையின்றி தரும் கருணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியாகத் திகழ்பவர் விநாயகப் பெருமான். அவருடைய அருளுக்கு நீ பாத்திரனானால் உன் விருப்பத்தையெல்லாம் அவர் நிச்சயமாக நிறைவேற்றுவார்'' என மொழிந்தார் கிருச்சமதர்.

''தந்தையே! விநாயகப் பெருமானின் அருளைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்?'' என வினவினான் பலி.

''குழந்தாய்! விநாயகப் பெருமானின் மகா மந்திரத்தை நான் உனக்கு உபதேசிக்கின்றேன். இந்த மந்திரத்தை ஜெபித்து மன ஒருமைப்பாட்டுடன் விநாயகப் பெருமானை மனத்திலே தியானித்து கடுந்தவம் புரிந்தால் எளிதாக வேழமுகத்தானின் அருட் கருணையை நீ பெற முடியும்'' என்று கூறி கிருச்சமதர் அவனுக்கு விநாயகர் மகாமந்திரத்தை உபதேசம் செய்தார்.

பலி தந்தையை வணங்கி அவருடைய ஆசிகளுடன் விடை பெற்றுக் கொண்டு தவமியற்றும் நோக்கத்துடன் கானகம் சென்றான்.

பலி ஐம்புலன்களை அடக்கி, மனத்தை ஒருமுகப்படுத்தி, கணநாதர், திருவுருவத்தை நெஞ்சிலே நிறுத்தி பல்லாண்டுக் காலம் தொடர்ந்து கடுந்தவமியற்றினான்.

விநாயகப்பெருமான் பலியின் கடுமையான தவத்தைக் கண்டு மகிழ்ந்து அவனுக்குக் காட்சி கொடுத்தார்.

பலி பேரானந்தப் பரவசனாக விநாயகப் பெருமானைப் பணிந்து பலவாறாகத் துதித்து,



''விக்கினேசுவரா! என்பால் கருணை கொண்டு என் தவத்தால் எனக்குக் காட்சி கொடுத்தது எனக்குப் பேரானந்தத்தை விளைவிக்கின்றது. அடியேனுடைய சிறிய ஆசையைத் தாங்கள் நிறைவேற்றி அருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

''உன் விருப்பத்தைச் சொல்'' என்றார் விநாயகப் பெருமான்.

''கணநாதா! மூவுலங்களுக்கும் நான் அதிபதியாக வேண்டும். இந்திராதி தேவர்கள் எனக்குக் குற்றேவல் செய்ய வேண்டும். என் உயிரை மாய்க்கும் ஆற்றல் யாருக்கும் இருக்கக்கூடாது. இவைதான் நான் கோரும் வரங்கள்'' என பலி விநாயகப் பெருமானைக் கேட்டுக் கொண்டான்.

''பலி! நீ கோரியது நிறைவேற அருள் செய்தோம். மூவுலகங்களுக்கும் நீ அதிபதியாவாய். உன் உயிருக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தில் கரும்பொன், வெண்பொன், பசும்பொன் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட கோட்டைகளையும் அளித்தோம். கயிலாய பதியாகிய பரமேசுவரனைத் தவிர வேறு எவராலும் உன்னை வென்று கொல்ல முடியாது.''

இவ்வாறு விநாயகப் பெருமான் பலிக்கு வரமளித்து அருள் புரிந்து மறைந்தார்.

வரம் பெற்ற மறுகணமே அகம்பாவமும், ஆணவச் செருக்கும், கொடுமை இயல்பும், கொலை வெறியும் பலியிடம் குடிகொண்டுவிட்டன.

யுத்த வெறிபிடித்தவனாக அண்டம் அதிர முழக்க மிட்டவாறு புறப்பட்டான். அவனுடைய முழக்கம் கேட்டு மூவுலகமும் நடுங்கின.

### அசுரத் தலைவன் அட்டகாசம் விண்ணுலகில் குழப்பம்

விநாயகப் பெருமானிடம் வரம் பெற்று உலகத்தில் தனக்கு மிஞ்சிய வல்லமையுடையவன் யாரும் கிடையாது என்று ஆணவச் செருக்கு மேலிடப் புறப்பட்டான் 'பலி' என்ற அசுரன்.

ஒருகணத்தைக்கூட வீணாக்காது மூவுலகத்தையும் சுற்றி வளைத்து தனக்கு அடிமைப்படுத்தும் முயற்சியினை அவன் மேற்கொண்டான்.

எடுத்த எடுப்பிலேயே பூலோகத்தின் மீது அவன் பாய்ந்தான்.

பூவுலகத்து மன்னர்களால் பலியின் ஆவேசத் தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியவில்லை.

பலி வருகிறான் என்று தெரிந்த உடனே ஒவ்வொரு நாட்டு மன்னரும் அவன் அடிபணிந்து அவனுக்கு அடிமைப்பட்டு அவனுடைய ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர்.

ஆகவே பூவுலகம் எந்தவிதச் சிரமமும் படாத நிலையில் பலியின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது.

அடுத்து பலி பாதாள லோகத்தின் மீது படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எடுத்தான். பாதாள லோகத்திலும் அவனுக்கு எதிர்ப்பே இல்லை. பலி வருகிறான் என்று கேள்விப்பட்ட உடனே பொறுப்பிலிருந்தவர்கள் தலை தப்பினால் போதும் என்று ஓடி மறைந்துகொண்டனர்.

ஆகவே பலி கண் மூடித் திறப்பதற்குள் பாதாள லோகத்தையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து விட்டான்.

பலியின் வல்லமையும், பிரபஞ்சத்தில் அவனுக்கு பெருகி வரும் செல்வாக்கு ஆதிக்கத்தையும் கண்ட பிரபஞ்சம் முழுவதும் பரவிக் கிடந்த அரக்கர்கள் அணியாகத் திரண்டு பலியினுடைய தலைமையை ஏற்று தங்கள் முழு ஒத்துழைப்பையும் அவனுக்கு நல்க முன்வந்தார்கள்.

பலியின் கவனம் அடுத்து இந்திர லோகத்தின் மீது திரும்பியது.

இந்திரனை அடிமைப்படுத்தி இந்திர லோகத்தைப் பிடித்துக்கொண்டால் விண்ணுலகத்தை வெற்றி கொள்வதற்கான தொடக்கமாக அது அமையும் என்று பலி கருதினான்.

ஆகவே திரளான அசுர படைவீரர்கள் சகிதம் தேவலோகத்தின் மீது படையெடுத்துச் சென்றான்.

பலி வருகிறான் என்ற செய்தி காதில் விழுந்த உடனே தேவர்கள் அஞ்சி நடுநடுங்கி விழுந்தடித்துக் கொண்டு ஓடி கிடைத்த இடங்களில் மறைந்து கொண்டனர். தப்பிப் பிழைத்து ஓடிய சிலர் தங்கள் தலைவன் இந்திரனைச் சந்தித்து பலியின் வருகையைப் பற்றி இந்திரனிடம் கூறினர்.

அதே சமயம் பலியினால் அனுப்பப் பெற்ற தூதுவர்கள் இந்திரனை வந்து சந்தித்தார்கள்.

"இந்திரா! பூவுலகத்திற்கும், பாதாள லோகத்துக்கும் ஏக சக்கராதிபதியாகத் திகழும் அசுரகுலத் திலகம் பலிச் சக்கரவர்த்தியின் தூதுவர்கள் நாங்கள். உம்முடைய தேவலோகத்தின் மீது படையெடுக்கும் நோக்கத்துடன பலிச் சக்கரவர்த்தி வந்திருக்கிறார். பூவுலகமும், பாதாளலோகமும் முன்னதாக பலிச்சக்கரவர்த்திக்குப் பணிந்து, அவருடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டதால் இரத்தக் களறியையும், ஏராளமான உயிர்ப்பலியையும் தவிர்க்க முடிந்தது. அந்த ராஜ தந்திரத்தை நீரும் கடைப்பிடித்து எங்கள் சக்கரவர்த்திக்கு அடிபணிந்து, அவருடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எங்கள் தலைவர் பலி எதிர்பார்க்கிறார். இந்தச் சமாதான உடன்படிக்கைக்கு நீர் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் உடனடியாக உம்மைப் போருக்குத் தயாராக இருக்குமாறு எச்சரிக்கை செய்யச் சொன்னார். நீர் என்ன சொல்லுகிறீர்?"

இவ்வாறு பலியின் தூதுவர்கள் இந்திரனை மிரட்டினார்கள்.

இந்திரன் கோபாவேசமடைந்தான்.

பலியினுடைய தூதுவர்களை நோக்கி, "யாரிடம் பேசுகிறீர்கள் என்பதை மறந்து விட்டீர்கள். உங்கள் தலைவனுடைய மிரட்டல்கள் இங்கே பலிக்காது. பலி என்னிடம் சரியானபடி பாடம் கற்றுக் கொள்ளப் போகிறான். நான் யுத்தத்திற்கு தயார் என்பதை உங்கள் தலைவன் பலியிடம் கூறுங்கள். பலிக்கு ஆண்மையிருந்தால்-சக்தியிருந்தால் போர்முனையில் சந்தித்து என்னைத் தோற்கச் செய்து, என் உலகத்தைக் கைப்பற்றட்டும்" என இந்திரன் ஆவேச மொழியில் பதில் சொன்னான்.

தூதுவர்கள் திரும்பிச் சென்று தங்கள் தூது முயற்சி தோல்வியடைவிட்டது என்ற தகவலையும், இந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியைப் போர்முனையில் சந்திக்கத் தயாராக இருப்பதையும் தங்கள் தலைவர் பலியிடம் எடுத்துக் கூறினார்கள்.

"ஆஹா! இந்திரன் அப்படியா சொன்னான்? அவனுக்குக் கேடு காலம் நெருங்கிவிட்டது. போனால் போகிறது என்று அவனுக்கு உயிர்ப் பிச்சையளிக்க நினைத்தேன். அவன் அழிவுக்கு அவனே வழி தேடிக் கொண்டுவிட்டான். இனி நமது அரக்கர் படை தேவலோகத்தில் புகுந்து துவம்சம் செய்யட்டும். இந்திரன் என்னை போர் முனையில் நேருக்கு நேர் சந்திக்கட்டும். நான் அவனைக் கவனித்துக் கொள்கிறேன்" என பலி தன் படைவீரர்களுக்கு ஆணையிட்டான்.

அரக்கர் சேனை பெரும் ஆரவாரத்துடன் தேவலோகத்தில் பிரவேசித்தது.

கண் முன் தென்பட்ட தேவ மக்களை அடித்து நொறுக்கிக் கசக்கி எறிந்தனர்.

பயந்து மறைந்து கிடந்தவர்களையெல்லாம் இழுத்து வந்து கொன்று அழித்தனர். தேவ குலப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

பயங்கரமான பேரழிவினை நிகழ்த்தியவாறு அரக்கர் படை தனது லோகத்தில் முன்னேறி வருவதை அறிந்த தேவேந்திரன் தன்னுடைய சக்தி வாய்ந்த வச்சிராயுதத்தைக் கரத்திலேந்தி தேர் மீது ஆரோகணித்தவாறு ஆயுத பாணிகளான தேவகணங்கள் புடைசூழ போர் முனைக்கு வந்து பலியை நேருக்கு நேராக் சந்தித்தான்.

அசுரப் படைகளுக்கும் தேவகணங்களுக்கும் இடையே கடுமையான போர்முண்டது.

அந்த பயங்கரமான மோதலின் போது இரு தரப்பிலும் பலத்த ஆட்சேதம் ஏற்பட்டது.

தலை போனவர்களும், கால்கள் இழந்தவர்களும், கைகள் முறிந்தவர்களுமாக போர் முனை எங்கும் சிதறிக்கிடந்தனர்.

போர்க்களமெங்கும் எழுந்த மரண ஓலம் பூவுலகிலும் பிரதிபலித்தது.

கடுமையான போருக்குப் பிறகு அசுரர்கள் பக்கம் இலேசான தோல்வியின் சாயல் படிய, அவர்கள் சோர்வடைவதைப் பார்த்த பலி அசுரப் படைவீரர்களை உற்சாகமூட்டும் நோக்கத்தில் வீர முழக்கம் செய்து இந்திரனை நேருக்கு சென்று எதிர்த்தான்.

பலியும், இந்திரனும் பயங்கரமாக மோதிக் கொண்டனர்.

இந்திரன் தன் சக்தி முழுவதையும் திரட்டிப் போரிட்டான். தன்னிடம் இருந்த வல்லமை வாய்ந்த போர்க் கருவிகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் பிரயோகித்தான்.

தேவேந்திரன் அளவுக்கு சாதுரியமாகவும், வீரத்துடனும் பலி சண்டையிடவில்லை என்றாலும், விநாயகப் பெருமானிடம் அவன் பெற்றிருந்த வரங்களின் மகிமை காரணமாக அவனை எளிதாக வென்று கொல்லவோ வதைக்கவே முடியவில்லை.

கடைசி முயற்சியாக இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்ற நோக்கத்துடன் இந்திரன் தனது வெள்ளை யானையான ஐராவதத்தின் மீது ஏறி அமர்ந்து, வச்சிராயுதத்தைக் கையிலேந்தி பலியுடன் மோதினான்.

இந்திரன் எடுத்துப் பிரயோகித்த வச்சிராயுதம், பலி ஏறியிருந்த குதிரையின் கால்களை ஒடித்துத் தள்ளி விட்டு பலியையும் கடுமையாகத் தாக்கிவிட்டுத் திரும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வச்சிராயுதத்தால் தாக்கப்பட்ட யாரும் உயிர் தப்பியது கிடையாது. ஆகவே பலியும் செத்து வீழ்ந்திருப்பான் என எண்ணி இந்திரன் அவனை கவனித்தான்.

பலி வச்சிராயுதத்தால் தாக்கப்பட்டதன் காரணமாக மூர்ச்சித்து விழுந்தான் என்றாலும் விநாயகப் பெருமான் அளித்திருந்த வரம் அவன் உயிரைக் காப்பாற்றிவிட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் பலி மூர்ச்சை தெளித்து, எழுந்து தரையில் நின்றவாறே இந்திரனை எதிர்த்துப் போரிடத் தொடங்கிவிட்டான்.

பலியின் பேராற்றலுக்கு பின் பலமாக விநாயகப் பெருமானின் வரமகிமை அமைந்திருக்கிறது என்பது அப்போது தான் இந்திரன் மனத்தில் பட்டது.

இனித் தொடர்ந்து பலியுடன் மோதுவதால் ஒரு பயனும் விளையாது என்பதை உணர்ந்து கொண்டான்.

உடனே பலியின் கண்களுக்குத் தெரியாமல் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு இந்திரன் கயிலாயத்தை நோக்கி ஓடினான்.

கை விடப்பட்ட நிலையில் திகைத்துப் போய் நின்ற ஐராவதத்தின் மீது பலி ஏறியமர்ந்து வெற்றி முழக்கமிட்டான்.

பிறகு தேவ லோகத்தில் தனது அதிகாரத்தை ஆட்சியை நிலை நிறுத்தினான்.

தேவலோகத்தைத் தன் கட்டுக்குள் கொண்டு வந்துவிட்ட பிறகு பலியின் கவனத்துக்கு வந்தது பிரம்ம தேவனின் சத்திய லோகமும், திருமாலின் வைகுந்தமுந்தான்.

அசுரப் படைகளில் ஒரு பகுதியை மட்டும் தேவலோகத்தில் நிறுத்தி வைத்துவிட்டு, மிச்சமிருந்தபெரும் படையை நடத்திக் கொண்டு பலி பிரம்ம தேவரின் சத்திய லோகத்தை நோக்கி ஆரவார அமர்க்களங்களுடன் சென்றான்.

பயந்து போன பிரம்ம தேவன் வைகுந்தத்திற்கு தப்பியோடி திருமாலிடம் அடைக்கலம் புகுந்து பலி சத்திய லோகத்தின் மீது படையெடுத்து வருவதைப் பற்றிச் சொன்னான்.

"பிரம்ம தேவா, பலி விஷயத்தைப் பற்றி நானுந்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். சத்திய லோகத்தைப் பிடித்த பிறகு அவனுடன் நாமெல்லாம் போரிடுவது வீண். அவன் விநாயகப் பெருமானின் அனுக்கிரகத்தினால் தன்னை யாரும் அழிக்க முடியாதவாறு வரம் பெற்றிருக்கிறான்.

"தந்திரமாகத்தான் அவனை அழிக்கவேண்டும். நாம் இருவருமே திருக்கயிலையை அடைந்து தற்காலிகமாக மறைந்து வாழ்வோம். தக்க சமயத்தில் தக்கவாறு பலியை வீழ்த்த முயற்சிப்போம்" என்றார்.

பிரம்ம தேவனும், திருமாலும் கயிலாயம் நோக்கித் தப்பியோடினர்.

பிரம்ம தேவரின், சத்திய லோகத்தையும், மகா விஷ்ணுவின் வைகுந்தத்தையும் ஒருவித எதிர்ப்பு மில்லாமல் பலி பிடித்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, பலி விருப்பப்பட்டவாறு மூவுலகமும் அவனுடைய ஆளுகைக்கு வந்து விட்டது. பிரபஞ்சம் முழுமைக்கும் தானே சக்கரவர்த்தி என்று மகுடாபிஷேகம் செய்து கொண்டான்.

பிறகு வெற்றி முழக்கத்தோடு பூவுலகம் வந்தான். பூவுலகத்திலேயே இனித் தனது வாழ்க்கையை நிரந்தரமாக அமைத்துக் கொண்டு அங்கிருந்தபடியே அனைத்து உலகங்களையும் ஆட்சி நடத்தத் திட்டமிட்டான்.

பலி சிந்தையிலே கணநாதரைத் தியானித்து தமக்கு மூன்று வாரிசுகள் வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

விநாயகப் பெருமானின் அருளினால் பலியின் முன்னால் மூன்று புத்திரர்கள் தோன்றி நின்றார்கள்.

அவர்களுக்கு வச்சிரகமிஷ்ட்ரன், வீமகாயன், காளகூடன் என்று பலி பெயர் சூட்டினான்.

விநாயகப் பெருமானை மறுபடியும் தியானித்து முன்பு அவர் தமக்கு அளிப்பதாக வாக்குறுதி அளித்த மூன்று கோட்டைகளையும் அளித்து உதவுமாறு வேண்டிக் கொண்டான்.

விநாயகப் பெருமான் பலி வேண்டியவாறே இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களினால் அமைக்கப்பட்ட மூன்று கோட்டைகளை அளித்தார்.

இரும்புக் கோட்டையை முதல் மகன் வச்சிர கமிஷ்ட்ரனுக்கு அளித்தான்.

வெள்ளிக் கோட்டையை வீமகாயனுக்கு கொடுத்தான். காளகூடனுக்கு பொன் கோட்டையை அளித்தான். அவரவர்க்குரிய கோட்டைகளில் இருந்து மூவுலக ஆட்சியினையும் ஒழுங்கான கண்காணிப்புடன் நடத்தி வருமாறு உத்தரவிட்டான்.

மற்றும் சண்டன் - பிரசண்டன் என்ற இருவரை பலி தோற்றுவித்தான்.

சண்டனை சத்தியலோகம், தேவலோகம் ஆகியவற்றை நிர்வாகம் செய்யுமாறும், வைகுந்தத்தை பிரசண்டன் நிர்வாகிக்கவேண்டும் என்று கூறி அவர்களை அந்தந்த லோகங்களுக்கு அனுப்பி வைத்தான்.

இவ்வாறு தன்னுடைய ஆட்சிப் பொறுப்பினை ஒழுங்குபடுத்திவிட்ட பிறகு பலி மிகுந்த மகிழ்ச்சியுடன் நிம்மதியாக வாழ்க்கை நடத்தத் தொடங்கினான்.

அவனுடைய பிரதிநிதியாக இருந்து மூவுலகத்தையும் ஆட்சி நடத்தியவர்கள் மூவுலகத்திலும் இருந்தவர்களை பயங்கரமான கொடுமைகளுக்கு இலக்காக்கி, சித்திரவதை செய்து தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர்.

*தொடரும்...*


# COMPUTER COURSES

**Dip in Computerized Accounting**
Tally, M.Y.O.B, Acc Pac, Quick Book — Course Fee Rs. 2,000
**Dip in Peachtree** — Rs. 2,000

**Dip in Album Creating**
Photoshop, Priemiere Pro — Course Fee Rs. 5,000

**Dip in Software Engineering**
PHP with Mysql, Java, VB net — Course Fee Rs. 10,000

**Graphic Designing**
CorelDRAW, Adobe Photoshop, Adobe Illustrator. — Course Fee Rs. 2,500/-

**Dip. in Web Development**
HTML, Adobe Photoshop, Flash, Dream Weaver, MySQL, PHP, Java Script. — Course Fee Rs. 7,000/-

**MS Office**
Microsoft Word, Microsoft Excel, Internet & E-mail, Microsoft Access, Microsoft PowerPoint. — Course Fee Rs. 1,250/-

**Dip. in Computer Studies**
Microsoft Word, Microsoft Excel, Microsoft Access, PowerPoint, Visual Basic, Internet & E-mail. — Course Fee Rs. 2,000/-

**Dip. in Web Designing**
HTML, Flash, Adobe Photoshop, Dream Weaver. — Course Fee Rs. 3,000/-

**and more...**

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Colombo 6.
Hotline: 0770 - 778737
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



**Product inside**

1. Two Shri Dhan Laxmi Kavach (**24ct.gold plated foil pendant**)
2. Siddha Maa Laxmi Idol
3. Meru Shri Yantra (Gold Plated)
4. Maa Laxmi Charan Paduka (Gold Plated)
5. Shri Laxmi Yantra (Gold Plated)

Swiss gold

FREE GIFT



## இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

கையிருப்பு உள்ளவரை மட்டுமே..,
இன்றே முந்துங்கள்!

flex அருள்

No: 04, IBC ROAD, WELLAWATTE.
Tel: 0777 614 186



CALL NOW & WIN SAREE

# JEYECHANDRANS

The Art of Fashion

முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

திருக்கோணேச்சரம் இறைவி பெயர் என்ன?

- கற்பகாம்பாள்
- மாதுமை அம்பாள்
- சிவகாமி

**JEYECHANDRANS**
கேள்விபதில் போட்டியில்
கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையை கூறி
குலுக்கல் முறையில் வெற்றிபெறும் போட்டியாளருக்
**JEYECHANDRANS TEXTILE**
வழங்கும் பட்டுப்புடவை பரிசாக வழங்கப்படும்.

**077 8335552**
**Flex Publications**
Call Monday - Friday From 9a.m - 5p.m

(1st June - 15th June)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவத்திரு ஆறுமுக நாவலரவர்களின் சைவ வினாவிடை

## தமிழ் வேத இயல்

01. உலகத்துக்குக் கருத்தா யாவர்?
சிவபெருமான்.

02. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
நித்தியரும், சருவவியாபகரும், அநாதிமலமுத்தரும், சருவஞ்ஞரும், சருவகர்த்தாவும், நித்தியானந்தரும், சுவதந்திரருமாய் உள்ளவர்.

03. நித்தியர் என்பது முதலிய சொற்களுக்குப் பொருள் என்ன?

நித்தியர்=என்றும் உள்ளவர்
சருவவியாபகர்=எங்கும் நிறைந்தவர்
அநாதிமலமுத்தர்=இயல்பாகவே பாசங்களின் நீங்கினவர்
சருவஞ்ஞர்=எல்லாம் அறிபவர்
சருவகர்த்தா= எல்லாம் செய்பவர்
நித்தியானந்தர்=என்றும் மகிழ்ச்சியுடையவர்
சுவதந்திரர்= தம்வயமுடையவர்.

04. சிவபெருமான் செய்யும் தொழில்கள் எவை?
படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துமாம்.

05. இவ்வைந்தொழிலுஞ் சிவபெருமான் செய்வது தம் பொருட்டோ பொருட்டோ?

தம்பொருட்டன்று: ஆன்மாக்களாகிய பிறர் பொருட்டே (ஆன்மா, பசு, புற்கலன் என்பவை ஒரு பொருட் சொற்கள்.)

06. படைத்தலாவது யாது?

ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களை முதற் காரணத்தினின்றும் தோற்றுவித்தல்.

07. காத்தலாவது யாது?

தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன் போகங்களை நிறுத்தல்.

08. அழித்தலாவது யாது?

தனு கரண புவன போகங்களை முதற் காரணத்தில் ஒடுக்குதல்

09. மறைத்தலாவது யாது?

ஆன்மாக்களை இருவினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் அமிழ்த்துதல்.

10. அருளலாவது யாது?

ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதல்.

11. தனு கரண புவன் போகம் என்றது என்ன?
தனு உடம்பு: கரணம் மன முதலிய கருவி: புவனம் உடம்புக்கு ஆதாரமாகிய உலகம் போகம் அனுபவிக்கப்படும் பொருள்.

12. ஒரு காரியத்திற்கு காரணம் எத்தனை?

முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்றாம் குடமாகிய காரியத்துக்கு முதற் காரணம் மண். துணைக் காரணம் திரிகை, நிமித்த காரணம் குயவன், திரிகை-சக்கரம்.

13. தனு கரண புவன் போகம் எனப்படும் பிரபஞ்சமாகிய காரியத்தில் முதற்காரணம் துணைக்காரணம் நிமித்த காரணம் எவை?

முதற் காரணம் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி என மூன்று. துணைக்காரணம் சிவசக்தி: நிமித்த காரணம் சிவபெருமான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜூன் | வைகாசி | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 19 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.22 - 11.52<br>5.52 - 7.22<br>2.52 - 4.22<br>7.22 - 8.52 | துவாதசி பின்னிரவு 12.33, சித்திரை பி.ப. 4.21, சித்தயோகம் | வைஷ்ணவ ஏகாதசி |
| 02 | 20 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.52 - 10.22<br>2.52 - 4.22<br>1.22 - 2.52<br>5.52 - 7.22 | திரயோதசி முன்னிரவு 10.07, சுவாதி பி.ப. 2.44, அமிர்தசித்தம் | பிரதோஷ விரதம் |
| 03 | 21 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.22 - 5.52<br>8.52 - 10.22<br>11.52 - 1.22<br>2.52 - 4.22 | சதுர்தசி முன்னிரவு 7.41, விசாகம் பி.ப. 1.06, மரணயோகம் | வைகாசி விசாகம் |
| 04 | 22 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.22 - 8.52<br>11.52 - 1.22<br>10.22 - 11.52<br>1.22 - 2.52 | பூரணை மாலை 5.21, அனுசம் மு.ப. 11.31, சித்தயோகம் | பூரணை விரதம் |
| 05 | 23 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.52 - 4.22<br>10.22 - 11.52<br>8.52 - 10.22<br>11.52 - 1.22 | பிரதமை பி.ப. 3.08, கேட்டை மு.ப. 10.03, சித்தாமிர்தம் | திருஞானசம்பந்தர், திருநீலகண்டயாழ்ப்பாணர் குருபூஜை |
| 06 | 24 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.52 - 1.22<br>4.22 - 5.52<br>7.22 - 8.52<br>11.52 - 1.22 | துதியை பி.ப. 1.07, மூலம் மரணயோகம் மு.ப. 8.46 | |
| 07 | 25 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.22 - 2.52<br>7.22 - 8.52<br>5.52 - 7.22<br>8.52 - 10.22 | திருதியை மு.ப. 11.25, பூராடம் மு.ப. 7.48, சித்தயோகம் | சங்கடஹரசதுர்த்தி |
| 08 | 26 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.22 - 11.52<br>5.52 - 7.22<br>2.52 - 4.22<br>7.22 - 8.52 | சதுர்த்தி மு.ப. 10.02, உத்தராடம் சித்தயோகம் மு.ப. 7.08 | |
| 09 | 27 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.52 - 10.22<br>2.52 - 4.22<br>1.22 - 2.52<br>5.52 - 7.22 | பஞ்சமி மு.ப. 9.06, திருவோணம் காலை 6.55, சித்தயோகம் | |
| 10 | 28 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.22 - 5.52<br>8.52 - 10.22<br>11.52 - 1.22<br>2.52 - 4.22 | ஷஷ்டி மு.ப. 8.38, அவிட்டம் மரணயோகம் மு.ப. 7.09 | |
| 11 | 29 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.22 - 8.52<br>11.52 - 1.22<br>10.22 - 11.52<br>1.22 - 2.52 | ஸப்தமி மு.ப. 8.40, சதயம் சித்தம் மு.ப. 7.53 அட்டமி மு.ப. 8.40ன் மேல் | |
| 12 | 30 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.52 - 4.22<br>10.22 - 11.52<br>8.52 - 10.22<br>11.52 - 1.22 | அட்டமி மு.ப. 9.13, பூரட்டாதி மரணயோகம் மு.ப. 9.06 | அட்டமி - நவமி |
| 13 | 31 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.53 - 1.23<br>4.23 - 5.53<br>7.23 - 8.53<br>10.23 - 11.53 | நவமி மு.ப. 10.16, உத்தரட்டாதி சித்தம் மு.ப. 10.50 நவமி மு.ப. 10.16, வரை | |
| 14 | 32 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.23 - 2.53<br>2.23 - 8.53<br>5.53 - 7.23<br>8.53 - 10.23 | தசமி மு.ப. 11.50, ரேவதி பி.ப. 12.56, சித்தாமிர்தம் | |
| 15 | ஆனி<br>01 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.23 - 11.53<br>5.53 - 7.23<br>2.53 - 4.23<br>7.53 - 8.53 | ஏகாதசி பி.ப. 1.39, அச்சுவினி பி.ப. 3.20, அமிர்தசித்தம் | ஏகாதசி விரதம் கரிநாள் |
| 16 | 02 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.53 - 10.23<br>2.53 - 4.23<br>1.23 - 2.53<br>5.53 - 7.23 | துவாதசி பி.ப. 3.34, பரணி மாலை 5.52, சித்தாமிர்தம் | பிரதோஷ விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜூன் | ஆனி | | | |
|---|---|---|---|---|
| 17 | 03 | ராகு 4.23 - 5.53<br>சுப 8.53 - 10.23<br>எம 11.53 - 1.23<br>குளி 2.53 - 4.23 | திரயோதசி மாலை 5.31, கார்த்திகை முன்னிரவு 8.25, சித்தயோகம் | கார்த்திகை விரதம் |
| 18 | 04 | ராகு 7.24 - 8.54<br>சுப 11.54 - 1.24<br>எம 10.24 - 11.54<br>குளி 1.24 - 2.54 | சதுர்த்தசி மு.ப. 7.22, ரோகிணி முன்னிரவு 10.52, அமிர்தயோகம் | புதூர் நாகதம்பிரான் பொங்கல் |
| 19 | 05 | ராகு 2.54 - 4.24<br>சுப 10.24 - 11.54<br>எம 8.54 - 10.24<br>குளி 11.54 - 1.24 | அமாவாசை முன்னிரவு 8.55, மிருகசீரிடம் சித்தயோகம் பின்னிரவு 1.00 | அமாவாசை விரதம் |
| 20 | 06 | ராகு 11.54 - 1.24<br>சுப 4.24 - 5.54<br>எம 7.24 - 8.54<br>குளி 10.24 - 11.54 | பிரதமை முன்னிரவு 10.04, திருவாதிரை பின்னிரவு 2.45, சித்தயோகம் கரிநாள் | |
| 21 | 07 | ராகு 1.24 - 2.54<br>சுப 7.24 - 8.54<br>எம 5.54 - 7.24<br>குளி 8.54 - 10.24 | துதியை முன்னிரவு 10.46, புனர்பூசம் பின்னிரவு 4.02, அமிர்தயோகம் | |
| 22 | 08 | ராகு 10.24 - 11.54<br>சுப 5.54 - 7.24<br>எம 2.54 - 4.24<br>குளி 7.24 - 8.54 | திருதியை முன்னிரவு 10.57, பூசம் பின்னிரவு 4.49, மரணயோகம் | |
| 23 | 09 | ராகு 8.55 - 10.25<br>சுப 2.55 - 4.25<br>எம 1.25 - 2.55<br>குளி 5.55 - 7.25 | சதுர்த்தி முன்னிரவு 10.37, ஆயிலியம் மரணயோகம் பின்னிரவு 5.06 | சதுர்த்தி விரதம் |
| 24 | 10 | ராகு 4.25 - 5.55<br>சுப 8.55 - 10.25<br>எம 11.55 - 1.25<br>குளி 2.55 - 4.25 | பஞ்சமி முன்னிரவு 9.48, மரணயோகம் பின்னிரவு 4.55 | மாணிக்கவாசகர் குருபூஜை ஸ்கந்த பஞ்சமி |
| 25 | 11 | ராகு 7.25 - 8.55<br>சுப 11.55 - 1.25<br>எம 10.25 - 11.55<br>குளி 1.25 - 2.55 | ஷஷ்டி முன்னிரவு 8.33, பூரம் சித்தயோகம் பின்னிரவு 4.17 | குமாரஷஷ்டி விரதம், இரவு நடேசரபிஷேகம் |
| 26 | 12 | ராகு 2.55 - 4.25<br>சுப 10.25 - 11.55<br>எம 8.55 - 10.25<br>குளி 11.55 - 1.25 | ஸப்தமி முன்னிரவு 6.56, உத்தரம் பின்னிரவு 3.20, அமிர்தசித்தம் | |
| 27 | 13 | ராகு 11.55 - 1.25<br>சுப 4.25 - 5.55<br>எம 7.25 - 8.55<br>குளி 10.25 - 11.55 | அட்டமி மாலை 5.01, அத்தம் பின்னிரவு 2.06, சித்தயோகம் | அட்டமி - நவமி |
| 28 | 14 | ராகு 1.26 - 2.56<br>சுப 7.26 - 8.56<br>எம 5.56 - 7.26<br>குளி 8.56 - 10.26 | நவமி பி.ப. 2.52, சித்திரை பின்னிரவு 12.39, சித்தாமிர்தம் | நவமி பி.ப. 2.52 வரை |
| 29 | 15 | ராகு 10.26 - 11.56<br>சுப 5.56 - 7.26<br>எம 2.56 - 4.26<br>குளி 7.26 - 8.56 | தசமி பி.ப. 12.32, சுவாதி சித்தயோகம் முன்னிரவு 11.04 | |
| 30 | 16 | ராகு 8.56 - 10.26<br>சுப 2.56 - 4.26<br>எம 1.26 - 2.56<br>குளி 5.56 - 7.26 | ஏகாதசி மு.ப. 10.06, விசாகம் முன்னிரவு 9.26, சித்தயோகம் | சயன ஏகாதசி விரதம் |



PORTRAIT
IN PASTEL / PENCIL
A portrait is a Perfect Gift
Call : 0777 614 186 | E-mail : flexvijay@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆஞ்சநேயரை
## அழகாக வர்ணம் தீட்டுங்கள்



சிறுவர்களுக்கான

ART CLASSES

வயது - 6-12 வரை

இவ் வகுப்பிற்கு
10 சிறுவர்கள்
மாத்திரமே சேர்த்துக்
கொள்ளப்படுவர்.

சனிக்கிழமைகளில்
காலை 9.00 மணி முதல்
12.00 மணி வரை

Cell-0777-555026
4, IBC Road, Wellawatte.


flex Institute
Step Towards a Bright Future

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழா

## கடந்த மாத நிகழ்வுகள்

- கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி அருள் மிகு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் கோவில் தேர் திருவிழா 05.05.2012 அன்று நடைப்பெற்றது.
- கொழும்பு முகத்துவாரம் அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலய தேர் இரத பவனி 02.05.2012 அன்று நடைப்பெற்றது.
- கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வசந்த மண்டபம் தட்ஷணாமூர்த்தி அங்குரார்ப்பண வைபவம் 02.05.2012 அன்று விமர்சையாக கொண்டாடப்பட்டது.
- ஹட்டன் மாணிக்க பிள்ளையார் ஆலயத்தின் பஞ்சரத பவனி மே மாதம் 3ம் திகதி நடைப்பெற்றது.
- நுவரெலியா ஆ வேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சித்ரா பௌர்ணமி முத்தேர் திருவிழா 05.05.2012 நடைப்பெற்றது.
- பதுளை ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான நந்தன வருஷ அலங்கார உற்சவ முத்தோர் பவனிப் பெருவிழா 05.05.2012 அன்று நடைப்பெற்றது.
- மட்டக்களப்பு ஏறாவூர் நான்காம் குறிச்சி வட சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பால்குட பவனி மற்றும் தேர்த்திருவிழா 04.05.2012 அன்று நடைப்பெற்றது.
- காரை நகர் கருங்காலி போசுட்டி அருள்மிகு ஸ்ரீ முருக மூர்த்தி கோவில் தேர்த்திருவிழா 05.05.2012 அன்று நடைப்பெற்றது.



- மகியாவ ஸ்ரீ முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா 05.05.2012 அன்று நடைப்பெற்றது.
- வவுனியா கூமாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் நடைப்பெற்றது.
- புங்குடுதீவு கண்ணகியம்மன் ஆலயத் தேர் திருவிழா 04.05.2012 அன்று நடைப்பெற்றது.
- திருகோணமலை மடத்தடி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மகோட்சவத்தின் ஒரு நிகழ்வாக 02.05.2012 சிம்ம வாகனத்தில் வெளி வீதி உலா நடைப்பெற்றது.




மே மாத FLEX அருளில் JEYECHANDRANS கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு 'திருமாலிஞ்சோலை' என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.27/1A, விஹார லேன், வெள்ளவத்தையைச் சேர்ந்த திருமதி வடிவேலு சிவமணி அவர்களுக்கு JEYECHANDRANS வழங்கிய பட்டுப்புடவை ஒன்று FLEX PUBLICATIONS நிர்வாக இயக்குனர். திரு P.விஜய் அவர்களால் வழங்கப்பட்டது.




மே மாத FLEX அருளில் CD WORLD MUSIC CENTRE கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு 'தாய்' என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.3 1/1, 39 வது ஒழுங்கை, Off விஹார லேன்,வெள்ளவத்தையைச் சேர்ந்த செல்வி சந்குணம் கபிலக்ஷிகா அவர்களுக்கு CD WORLD MUSIC CENTRE வழங்கிய AUDIO CD ஒன்று FLEX PUBLICATIONS நிர்வாக இயக்குனர். திரு P.விஜய் அவர்களால் வழங்கப்பட்டது.

ஜூலை மாதத்திற்கான விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

**Flex Publications**
04, IBC Road, Wellawatte. Tel: 0777614186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.M. MOHANN WATCH & GIFT ITEMS



33/1, Plaza Complex, Galle Road,
Wellawatte. Tel: 2507323

# WORLD COMMUNICATION

NET TO CALLS, POSTAL WORKS,
STAMPS COURIER SERVICE TO
ALL COUNTRY DOCUMENT
FAST SERVICE PARCEL
ALL PHOTO COPY, PRINTOUT

NO: 298 GALLE ROAD WELLAWATTE
COLOMBO 06
TEL: 0112 504233-7

# நாமும் போகலாம் ஆன்மிக சுற்றுலா!

**சென்னை கோவில்கள்**
*Daily Departure

- > கபாலீஸ்வரர் கோவில்
- > பார்த்தசாரதி கோவில்
- > காளிகாம்பாள் கோவில்
- > மருந்தீஸ்வரர் கோவில்
- > வடபழனி ஆண்டவர் கோவில்
- > வடசபரிமலை
- > பாம்பன் சுவாமிகள் கோவில்
- > சாய்பாபா கோவில்
- > ராமகிருஷ்ணர் கோவில்
- > திருவள்ளுவர் கோவில்
- > விவேகானந்தர் கோவில்

- ■ மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ■ காஞ்சி காமாட்சியம்மன் கோவில்
- ■ ஸ்ரீ ரங்கம், திருப்பதி, திருத்தனி ■ முருகனின் ஆறுபடை கோவில்
- ■ பிள்ளையார் பட்டி – காரைக்குடி

3 Days / 2Nights Cost Includes
> Return Air Tickets > A/C transport > Accommodation
**Rs. 19,990/=**

flex
Travels & Tours
Total Travel Solution
(A Subsidiary of Flex Graphic)

4, IBC, Road, Wellawatte.
**Hotline: 0777-555026** *Conditions apply

## ஆன்மீக வினாவிற்கான விடையை கூறி பரிசு பெறுங்கள்!

திருக்கோணேச்சரம் அமைவிடம் எங்கே?
- ▸ மன்னார்
- ▸ திருக்கோணமலை
- ▸ நுவரெலியா

Call Now & Win
பக்தி பாடல்கள் Audio CD

(1st June-15th June)
Call Monday - Friday
From 9am - 5pm.
Flex Publications
0778 335 552

முன்னணி பாடகர்கள் பாடிய
பக்திப்பாடல்கள்
இங்கு கிடைக்கும்

CD WORLD MUSIC CENTRE
DVD
No. 298, Galle Road, Wellawatte.
Tel: 0112 554 481

## புதிய தொழில்நுட்பத்தில்

முழுமையான மந்திரங்கள்,
சுலோகங்கள் மற்றும் பக்திப்பாடல்கள்

All-In-One
# தீப ஆர்த்தி
இசைக் கருவி

ஆலயங்கள், இல்லங்கள், மற்றும்
அலுவலகங்களின் பூஜை அறைகளில்
பக்தி மணம் கமழும்.

NO.1 Best Quality

flex அருள்

No: 04, IBC ROAD, WELLAWATTE.
Tel: 0777 614 186

Rs. 2000/-

இப்பொழுது
# வெள்ளவத்தையில்



உங்கள் வசதிக்காக...
சகல விதமான
விளம்பரங்களும்
கையளிக்கலாம்.

வர்த்தகம் பெருக
விளம்பரம் செய்க....

**FLEX Graphic**
4, IBC Road, Wellawatte.
Call: 0777-555026


# FLEX DIGITAL PRINTING
வெள்ளவத்தையில்...
Rs. Per Sqft 45/=

flex GRAPHIC

# DUPLO PRINTING
# OFFSET PRINTING
YOU NAME IT. WE FIX IT
Flex Digital Light Box * Plastic Name Board

4, IBC Road, Wellawatte.
Cell: 0777-614 186


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாதத்திற்கான ராசி பலன்




13 ஆம் தேதிக்குமேல் ஆதவன் அழகாக 3 ஆம் இடத்தில் பிரவேசிப்பதால் அற்புதமான பலன் கிட்டும். சுக்கிரனும் புதனும்கூடத் தங்கள் பங்களிப்பைச் செய்கிறார்கள். எனவே ஜூன் மாதத்தைத் தேன் மாதம் என்பேன். மனைவியால் நலம் வரும். மக்களால் சுகம் வரும். முனைந்திடும் செயல்களெல்லாம் முத்தாய்ப்பாய் முடிந்திடும். நினைவுகள் இதம் பெறும். நிம்மதி நிறைந்திருக்கும். வெகுமதி ஒன்று வெகு தொலைவிலிருந்து வந்து சேரும். 55% முதல் 60% வரை நன்மைகள் உண்டென்பேன்.

சாதகமான தேதிகள் : 3, 6, 14, 16, 21, 23, 27, 30.




எடுத்த காரியத்தை எண்ணம்போல் முடிக்க முடியாமல் எதிர்நீச்சல் அடுக்கடுக்காய் இடர்கள் வந்தாலும் எதிர்நீச்சல் போட்டு எப்படியும் சாதித்துவிடுவீர்கள். முடுக்கிவிட்ட பம்பரம் போல் முனைந்து செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். துடுக்குத்தனமான பேச்சினால் துயரம் விளைந்திடலாம். ஆதலால் நாவடக்கம் தேவை. ஏறத்தாழ 60% நன்மைகளை அள்ளிக் கொள்ளலாம்.

சாதகமான தேதிகள் : 1, 4, 9, 13, 16, 19, 21, 22, 28.




ஜூன் மாதம் சுகமான மாதம்தான் என்று சுக்கிரனாரும் புதனாரும் சொல்கிறார்கள். விரைய ஸ்தானத்தில் உலவுகின்ற சூரியனோ இது ஒரு தொந்தரவான மாதமென்று சொல்கிறார். எனவே இரண்டுவிதமான பலன்களும் கலந்து தான் இம்மாதத்தில் நடைபெறும். சற்று அலைந்து திரிய வேண்டியிருக்கும். ஆனால் பட்ட பாட்டிற்கு ஏற்ற பலன் நிச்சயம் உண்டு. சில விஷயங்களுக்காக மன அழுத்தத்துடன் காத்திருக்க வேண்டியிருக்கும். காத்திருப்புக்கு ஏற்ற பலன் கடைசியில்தான் கையில் வரும். உடல்நலத்தில் கவனம் தேவை. வீணான விரையச் செலவுகளும் உண்டு. அவசியமான ஆனந்தச் செலவுகளும் உண்டு. ஏறத்தாழ 60% வரை நன்மையுண்டு.

சாதகமான தேதிகள் : 1, 3, 5, 9, 16, 19, 23, 28, 29.




ஜூன் மாதமும் சுகமான மாதம்தான் என்று சாட்சி சொல்கின்றன கிரகங்கள்! ஆட்சியில் இருப்போரால் அனுகூலங்கள் கிட்டுமென்பேன். சூழ்ச்சி செய்வோரைத் தூர விலக்கி மாட்சி அடைவீர்கள். இனிய பல காட்சி காண்பீர்கள். பேச்சுத் திறமையால் பெருலாபம் குவிப்பீர்கள். பாய்ச்சிகை உருட்டிவிட்டால் காய்களெல்லாம் உங்கள் சார்பாகவே உருளுமென்பேன். முழு வீச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் அடைவீர்கள். 65% நல்ல மாதமிது.

சாதகமான தேதிகள் : 1, 2, 6, 11, 14, 24, 26, 28, 29.




ஜூன் மாதம் சுகமான மாதமென்பேன். சொல்கின்றன கிரகங்கள். கருதியவை பல வெற்றிக் கட்டியம் சாதிப்பீர். கருதி கூட்டுவீர் உங்கள் சுக வாழ்வுக்கு! தேக்கமின்றி ஆக்கம்பல சேர்ப்பீர்கள். வாழ்வின் நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரிந்துகொண்டு அதைநோக்கி ஊக்கத்துடன் பயணிப்பீர். தேக்கமாகி நின்றவை அனைத்தும் உங்களைத் தேடிவந்து சேருமென்பேன். 75% நற்பலன்கள் ஐயமின்றிக் கிடைத்து விடும்.

சாதகமான தேதிகள் : 3, 4, 7, 11, 13, 14, 19, 21, 24, 28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாதத்திற்கான ராசி பலன்




சூரியன் 10ல் பிரவேசிப்பதால், துணிவு மிகுந்துவிடும். சுறுசுறுப்புக் கூடிவிடும். பணி உடனே நடந்து பல காரியங்கள் சாதிப்பீர். பிணிபலவும் போய்மறையும். பிரச்சினைகள் ஏதுமில்லை. அணிகலன்கள் வாங்கிடலாம். ஆசைகளை நிறைவேற்றிடலாம். உல்லாசப் பயணமுண்டு. உற்சாக விருந்துண்டு. கல்வி சம்பந்தமாக எதிர்பார்த்த பல விஷயங்கள் நலவிதமாக நடந்தேறும். 55% வரை அடையலாம் அனுகூலங்களை!.

சாதகமான தேதிகள் : 2, 3, 8, 13, 17, 17, 21, 25, 26, 28.




நலம் தரும் மாதமிது. நல்ல பலன் பெறும் மாதமிது. இன்பப் பயணம் சென்றிடலாம். இனிய அனுபவம் பெற்றிடலாம். அன்புக் கதைகள் பேசிடலாம். ஆனந்தத்தில் மூழ்கிடலாம். துன்பக் கதைக்கு முடிவுரையைத் துணிந்தே எழுதிடலாம். சூரியனின் சஞ்சாரம் சரியில்லை என்பதால் ஏதாவது தேவையற்ற எம்பூர்ப்புகள் வரலாம். எச்சரிக்கை தேவை. 55% முதல் 60% நன்மைகளை எதிர்பார்க்கலாம்

சாதகமான தேதிகள் : 2, 4, 7, 11, 15, 20, 21, 25, 27, 29.




எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாத மிது! உச்சரிக்கும் வார்த்தைகளில் உஷாராக இருந்திடுங்கள்! நச்சரிக்கும் நண்பர்களை நயமாகச் சமாளியுங்கள்! பாவையரின் பச்சரிசிப் பல்லழகைப் பார்த்து மயங்க வேண்டாம். மயங்கினால் முச்சந்தி வரை வந்து நிற்கும் சச்சரவால் சங்கடப்பட நேரிடலாம். கெடுபலன்கள் நடந்த போதிலும் அவற்றையெல்லாம் சமாளித்து தலை நிமிர்ந்து நடப்பீர்கள் 40% நன்மையுண்டு.

சாதகமான தேதிகள் : 1, 3, 7, 11, 12, 15, 22, 28, 29, 30.




இந்த ஜூன் மாதத்தைத் தேன் போல இனிக்கும் மாதமென்பேன். மங்கையரால் லாபமுண்டு. மனைவி வழியில் யோகமுண்டு. தங்கம் வாங்கிடலாம். தன்னிறைவு பெற்றிடலாம். நல்ல மாதமிது. நடைமுறையில் காண்பீர்கள். அல்லல் நீக்கிக் காக்கும் ஆண்டவனின் அருளாலே வாழ்வில் திருப்பம் ஒன்றைச் சந்திப்பீர். 70% ஏற்றமிகு மாதமிது.

சாதகமான தேதிகள் : 4, 5, 7, 10, 12, 14, 21, 25, 30.




கிரகங்கள் சாதகமாகச் சஞ்சரிப்பதால் புதியதொரு நபராலே புதுப்பாதை கண்டிடுவீர். இதயம் மகிழும்படி இதமான சம்பவங்கள் நடந்தேறும். எதையும் சாதிப்பீர். ஏராளம் சம்பாதிப்பீர். பொருளாதார வளர்ச்சியிலே அசையாத இடத்தை அடைந்து விடுவீர்கள். கற்பனைக் கனவொன்று உங்கள் கையில் வசப்படும் என்பதால் கணக்கிலா ஆனந்தம் அடைவீர்கள். எடுத்துக் கொள்ளலாம் 60% நற் பலன்களை!

சாதகமான தேதிகள் : 3, 5, 6, 9, 13, 14, 24, 28, 29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாதத்திற்கான ராசி பலன்




இந்த மாதத்தில் இன்னல் சில உண்டென்றாலும் கன்னல் இனிப்பைப்போல் நற் பலன்கள் பல உண்டு. மின்னலிடை மங்கையரால் மிகப் பெரிய நன்மை வரும பின்னர் வரும் காலத்துக்குப் பிரமாதமாய்த் திட்டமிட்டு. வண்ண மயமாய் வாழ்வை வடிவமைத்துக் கொள்வீர்கள். எண்ணமெல்லாம் இன்பமயம். இதயமெல்லாம் அன்பு மயம். சொன்ன சொன்ன சொல்லைச் சொன்னபடி நிறைவேற்றிப் பாராட்டுப் பெறுவீர்கள். 50% முதல் 55% வரை அடையலாம் நன்மைகளை!

சாதகமான தேதிகள் : 3, 4, 7, 9, 15, 18, 20, 22, 27, 30.




ஜுன் மாதத்தையும் தேன் மாதமென்று கூறமுடியும். கட்டியம் கூறுகின்றன கிரகங்கள். தைரியம் மிகுந்துவிடும். தன்னம்பிக்கை கூடி விடும். துணிச்சலுடன் செயல்தொடங்கித் தொடர் வெற்றி பெறுவீர்கள். அணிகலன்கள் வாங்கிடலாம். அங்குமிங்கும் போய்வரலாம். வணிகத்திலே மேன்மையுண்டு. வைத்தியச் செலவு வந்திடலாம். வருத்தப்பட தேவையில்லை. மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகி விடும்.

சாதகமான தேதிகள் : 1, 4, 5 8, 9, 10, 11, 14, 25, 30.

# ஜூன் மாதத்திற்கான விரதங்கள்



| | | | | |
|---|---|---|---|---|
| 01ம் | திகதி | வெள்ளி | - | வைஷ்ணவ ஏகாதசி |
| 02ம் | திகதி | சனி | - | பிரதோஷ விரதம் |
| 03ம் | திகதி | ஞாயிறு | - | வைகாசி விசாகம் |
| 04ம் | திகதி | திங்கள் | - | பூரணை விரதம் |
| 07ம் | திகதி | வியாழன் | - | சங்கடஹரசதுர்த்தி |
| 15ம் | திகதி | வெள்ளி | - | ஏகாதசி விரதம் |
| 16ம் | திகதி | சனி | - | பிரதோஷ விரதம் |
| 17ம் | திகதி | ஞாயிறு | - | கார்த்திகை விரதம் |
| 19ம் | திகதி | செவ்வாய் | - | அமாவாசை விரதம் |
| 23ம் | திகதி | சனி | - | சதுர்த்தி விரதம் |
| 25ம் | திகதி | திங்கள் | - | குமாரஷஷ்டி விரதம் |
| 30ம் | திகதி | திங்கள் | - | சயன ஏகாதசி விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திக் கதைகள்

-யோகா

## ஆத்திசூடி தந்த ஔவையார்



ஔவையாரின் இயற் பெயர் ஞானப்பூங்கோதை! சிறு பிராயத்திலிருந்தே பள்ளிக்குச் சென்றுவரும் நேரம் தவிர மீதிப் பொழுதை இறை வழிபாட்டிலேயே கழித்தார். விநாயகப் பெருமானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு வழிபட்டு வந்தார்.

மற்றக் குழந்தைகள் போல ஆடல் பாடல்களிலும், ஆடை அலங்காரங்களிலும் விருப்பம் இன்றி சதா சர்வகாலமும் பக்தி வழிபாட்டிலேயே ஈடுபட்டிருந்த அவரை நினைத்து பெற்றோர் மிகவும் வியப்படைந்தனர். இந்நிலையில் அவருக்கு பதின்மூன்று வயது பூர்த்தியானது அத்துடன் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டனர் பெற்றோர். ஔவைக்கு படிப்பை நிறுத்தியது மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது.

விளைவு முழுநேரமும் அன்ன ஆகாரமின்றி, உறக்கத்தையும் மறந்து பக்தியிலேயே ஈடுபட்டார்! 13 வயதுச் சிறுமியின் இத்தகைய போக்கு பெற்றோரை மிகவும் கவலை அடையச் செய்தது. பெற்றோரும், உறவினரும் கலந்து ஆலோசனை செய்து பூங்கோதை (ஔவை)க்கு திருமணம் செய்து வைப்பது என்று முடிவு செய்தனர்.

திருமணம் செய்து விட்டால் பூங்கோதை குடும்பப் பொறுப்பு ஏற்பட்டு, கணவன், குழந்தை என்று பாச பந்தங்களில் மூழ்கி ஆன்மிக ஈடுபாட்டை மறந்து விடும் என்று கருதினர். அதன்படி, பூங்கோதைக்கு திருமண ஏற்பாடு நடப்பது தெரியாத வண்ணம் மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பமானது.

உறவினர்கள் வழியில் மணமகன் கண்டுபிடிக்கப்பட்டு, மணமகளுக்குத் தெரியாமலேயே முகூர்த்தநாள் முடிவு செய்யப்பட்டது. இம்முடிவுப்படி, மணமகனும் உறவினர்களும் திருமண நாளுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பே பெண் வீட்டிற்கு (ஔவையார்) வந்து சேர்ந்தனர். உறவினர்கள் சூழ வீடே திருமணக் கோலம் பூண்டிருந்ததை அறியாத பூங்கோதை, தாயாரிடம் 'என்ன விசேஷம்' என்று கேட்க பெற்றோர் உண்மையைச் சொல்லாமல் மறைத்துவிட்டனர்.

இரவு உறங்குவதற்குச் சென்ற பூங்கோதைக்கு உறவினர்களின் பேச்சொலியில் உறக்கமே வரவில்லை. உறங்காமல் படுத்து புரண்டு கொண்டிருந்த பூங்கோதைக்கு பெற்றோரும், உறவினர்களும் பேசிக் கொண்டிருந்த விஷயங்கள் காதில் விழுந்தன! 'விடியற்காலையில் தனக்கு திருமணம் நடைபெறப் போகிறது!' என்பதை அறிந்த பூங்கோதைக்கு உடல் பதறியது! தனக்குக் கட்டாயத் திருமணம் செய்துவிடுவார்கள் என்பதை அறிந்து கண்ணீர் வடித்தாள் பூங்கோதை! 'இதற்குச் சரியான வழியை நீதான் காட்டவேண்டும் விநாயகப் பெருமானே' என்று கதறித் தொழுதாள். 'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்' என்பதைப் போல பூங்கோதையும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாது 'தும்பிக்கையான் துணை' இருக்க பயமில்லை என்ற நம்பிக்கையோடு உறங்கிவிட்டாள்.

பொழுது விடியுமுன்பே பூங்கோதையை நீராடச் செய்து புதிய ஆடை ஆபரணங்கள் எல்லாம் பூட்டி மணக்கோலம் பூணச் செய்தார்கள். பூங்கோதையும் மறுக்காமல் மணமகள் கோலம் பூண்டாள். "எந்தவித எதிர்ப்புமின்றி எல்லாம் நினைத்தபடியே நடப்பதால், திருமணம் இனிதே முடிந்து விடும்" என பெற்றோர் மகிழ்ந்தனர். அதனால் கட்டுக்காவல், கண்காணிப்பு இன்றி பூங்கோதை தனித்து விடப்பட்டாள் தக்க தருணம் இது தான் என்று பூங்கோதை வீட்டிலிருந்து தப்பி விநாயகப் பெருமான் வீற்றிருக்கும் ஆலயம் நோக்கி விரைந்தாள்.


"விநாயகப் பெருமானே உன்னை நம்பிக்கையோடு பக்தி செலுத்தி வேண்டுவோர்க்கு வேண்டியதைத் தந்து அவர்களுக்கு வரும் வேதனைகளை நீக்கி அருளும் ஞான முதல்வனே நீயே கதி. இத் திருமணம் நடக்காதபடி செய்து என்னை காத்தருள்வாய் இல்லையேல் என் உயிரை மாய்த்துக்கொள்வேன் இது உறுதி உன் மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணை" என்று கதறினார். விஷயமறிந்து பெற்றோர் மணமகன் மாப்பிள்ளை வீட்டார் சூழ விநாயகர் கோயிலுக்கே வந்துவிட்டனர்.

வந்தவர்கள், வணங்கி எழுந்த பூங்கோதையை 'வாடி' என்று இழுத்துச் சென்றனர். அவர்கள் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு ஓடிச்சென்ற பூங்கோதை "வேழமுகத்தானே என் வேதனையை தீராயோ என் உயிரை உனக்கு காணிக்கை ஆக்குகிறேன்" என்றபடி கோயில் கதவில் தலையை வேகமாக மோதினாள் மூர்ச்சையானாள். மோதிய வேகத்தில் அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. கதவு படாரென்று திறந்தது. ஐங்கரன் அடிவீழ்ந்து கிடந்த பூங்கோதையை அள்ளியெடுத்த பெற்றோர், அடுத்த விநாடியே பதறித்துடித்தனர்.

பூங்கோதை கிழவயது மூதாட்டியாக காட்சி தந்தாள். "ஔவையே" என அழைத்து புன்னகை பூத்தார் வேழமுகத்துப் பெருமான். உண்மைதான் பிள்ளையாரால் அழகுததும்பும் மணப்பருவ வயது பூங்கோதை முதிய கிழவயது ஆகும்படி செய்ததால் 'ஔவையார் 'என அழைக்கப்பட்டார். அத் தமிழ் மூதாட்டி நமக்குத் தந்த தமிழ் சுரங்கம்தான் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நெறிநூல்கள்.



# உயர்ந்த பரிசு

சீதா ராம கல்யாணம் முடிந்து அயோத்தி வந்த ராமரை எல்லோரும் வாழ்த்தி விலை உயர்ந்த பரிசுகளை அளித்தனர். அப்போது மித்ரபந்து என்ற செருப்புத் தைக்கும் தொழிலாளி அழகிய பாதுகைகளை மிகவும் சிரத்தையுடன் செய்து கொண்டு வந்தான். பின்னர், உயரிய பரிசுகளை பலர் தரும் போது நாம் அற்ப பாதுகைகளையா தருவது என வருந்தி பின் வாங்கினான். இதைக் கவனித்த ராமர், "உண்மையான உழைப்பில் உதித்த உன் பரிசுதான் உயர்ந்தது" எனக் கூறி பாதுகைகளை ஏற்றுக்கொள்ள, மித்ரபந்து மகிழ்ந்து போனான்.

ராமர் காட்டுக்குப் புறப்பட்ட போது, "வனவாசம் போகும் போது எதையும் உடன் எடுத்துப் போகக் கூடாதுதான். இருந்தாலும் இந்தப் பாதுகைகளை அணிந்து செல்கிறேன்" என்று கைகேயியிடம் கூறிவிட்டு, கண்ணீருடன் நின்ற மித்ரபந்துவை பார்த்து, "விலை உயர்ந்த பரிசுகள் எனக்குப் பயன்படவில்லை. உன்னுடைய பாதுகைகள்தான் கல்லும், முள்ளும் குத்தாமல் காக்கப் போகிறது" என்றார். அந்தப் பாதுகைகள்தான் 14 வருஷம் அயோத்தியையும் ஆண்டது.

# ஸ்ரீராமர் பாதுகைகள்



கைகேயிக்குத் தசரதர் அளித்த வரம், பொய்யாகி விடக்கூடாது என்பதால், ஸ்ரீராமர் வனவாசம் சென்றார். பட்டாபிஷேகத்துக்கு தேதி பார்த்து, அரசுரிமையைத் தர விரும்பிய தசரதரின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில், ஸ்ரீராமரின் பாதுகையை ஏற்று, அரசுக்குப் பாதுகாவலனாக மட்டுமே இருந்தான் பரதன். பித்ரு வாக்கியப் பரிபாலனம் என்பது அவனது சிறப்பம்சம். ஸ்ரீராமரைப் போலவே அவனும் சிந்தித்தான். பாதுகை மூலம் அவனுக்கு அரசுரிமையைத் தந்தார், ஸ்ரீராமர். அதேபோல், வாலியை விலக்கி சுக்ரீவனுக்கு அரசுரிமை அளித்தார்: ராவணனை விலக்கி விபீஷணனுக்கு அரசுரிமையைத் தந்தார். ஆக, காட்டில் இருந்தாலும், அரசனாகவே இருந்தார் ஸ்ரீராமர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிக்குணம்



ஒருமுறை எண்ணெய் வியாபாரி ஒருவர், குருதேவரை தரிசிப்பதற்காக வந்திருந்தார். அவர் நெடுநேரம் குருதேவரின் செயல்பாடுகளைப் பார்த்தபடியே பேசாமல் அமர்ந்திருந்தார். குருதேவரின் தீர்க்கமான பார்வை அவரின் மௌனத்தைக் கலைத்தது.

"குருதேவா! நான் எண்ணெய் வியாபாரம் செய்துவந்தேன். நல்லமுறையில் வியாபாரம் நடந்ததால் பெரும்பொருள் சேர்ந்தது. வயது ஏற ஏற தெய்வதரிசனம் பெற வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. சொத்துக்களை பிள்ளைகளுக்கு எழுதிவைத்துவிட்டு, வியாபாரத்தையும் அவர்களிடம் ஒப்படைத்தேன். பொருள், வியாபாரம் என்று அனைத்தையும் விட்ட பிறகும் தெய்வதரிசனம் கிடைக்கவில்லையே ஏன்? "என்று ஏக்கத்துடன் தெரிவித்தார்.

குருதேவர் வியாபாரியைப் பார்த்து,"நீர் ஒரு வியாபாரி. நேற்றுவரை வியாபாரத்தில் அக்கறை காட்டினீர்! உமக்குத் தெரியாத தொழில் நுட்பமா நான் சொல்லித் தரப்போகிறேன். நேற்று வரை கடையில் இருந்த எண்ணெய்குடத்தை எடுத்துக் கொள்வோம். அதில் இருந்த எண்ணெயை இன்று காலி செய்ததாக வைத்துக் கொள்ளுங்கள். அதில் இருந்த எண்ணெய் தான் போகுமே ஒழிய எண்ணெய் வாசனை அவ்வளவு எளிதில் போய் விடுமா?" என்று அவர் பாணியிலேயே பதில் கேள்வி கேட்டார்.

வியாபாரி, "குருவே! மன்னித்துவிடுங்கள்! நான் தான் அவசரப்பட்டு விட்டேன். எண்ணெய்க்குடம் போலத்தான் நானும் என்பதை மறந்துவிட்டேன்! சொத்துக்களை வேண்டுமானால் பிள்ளைகளுக்கு எழுதி வைக்கலாம். ஆனால், அதிலிருந்து பற்றை அவ்வளவு எளிதில் போக்கமுடியவில்லை. பிறவிக்குணம் ஒரே நாளில் மாறி ஞானம் வருவதில்லை என்ற உண்மையை உணர்ந்துவிட்டேன்" என்று சொல்லி குருதேவரை வணங்கினார்.

# குசேலர்



குசேலர் கண்ணனின் பள்ளிக்கூட நண்பர். 27 குழந்தைகளின் தகப்பனார். அக்காலத்தில் அந்தணர்கள் வேதம் கற்பது யாகம், பூஜை செய்வதில் கிடைக்கும் வருமானத்தில் எளிமையாக காலம் கழிப்பர். இதனால் வறுமை அவர்களை வாட்டும். அதற்காக அவர்கள் கலங்குவதில்லை. குசேலரும் பிள்ளைகள் இருக்கிறார்களே என வருத்தப்பட்டதில்லை. ஆனால், அவரது மனைவி சுசீலைக்கு குழந்தைகள் பட்டினி கிடப்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் கண்ணனிடம் போய் பணம் வாங்கி வரச் சொல்லி அனுப்பினாள். ஒரு பொட்டலம் அவலுடன் குசேலரும் போனார்.

கண்ணனால் நன்கு உபசரிக்கப்பட்டார். அவலைக் கட்டாயப்படுத்தி வாங்கி சாப்பிட்டார். ஏன் தெரியுமா, பாலயவயதில் சாந்தீபனி முனிவரின் மனைவி இவர்களை விறகு பொறுக்கி வர அனுப்பினாள். போகும் போது வெல்லம் கலந்த அவல் கொடுத்து பிரித்து சாப்பிடும்படி சொல்லிவிட்டாள். சிறுவன் குசேலன் கண்ணனின் பங்கையும் சேர்த்து சாப்பிட்டுவிட்டான். பிறர்பொருள் திருடுவது பாவம் இதனால், இப்போது திருடியதை கடவுள் கட்டாயமாக திருப்பி எடுத்துக் கொள்கிறார். அவர் அவலைத் தின்னவும் அவந்தியிலுள்ள குசேலனின் வீடு செழித்தது. இன்னும் ஒரு பிடி அவலை வாயில் போட்டால், கண்ணனின் செல்வம் முழுமையாக அங்கே போய்விடும். என்பதால் ருக்மணி தடுத்தாள் என்று சொல்வார்கள். இது தவறு. பரந்தாமனையே கணவனாகப் பெற்ற அவள், அழியும் செல்வத்துக்கா ஆசைப்படுவாள். தன் கணவர் மீது குசேலன் செலுத்தும் அபரிமான பக்தி அவனுக்கு கிடைக்கப் போகும் செல்வத்தால் அழிந்து விடக் கூடாது என்றெண்ணி தடுத்தாள்.

அதே போல் ஊர் திரும்பிய குசேலனும் கேவலம்! பசியைப் போக்க செல்வம் வேண்டி உன்னிடம் வந்ததற்காக வெட்கப்படுகிறேன். இது எனக்கு வேண்டாம். முக்தி என்னும் பெருஞ் செல்வத்தைக் கொடு எனக் கதறினார். அவர் நித்திய செல்வமாகிய வைகுந்தம் சென்றார். எதிர்பார்ப்பற்ற பக்தி வேண்டும் என்பதையே குசேலன் கதை விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூர்வ துறவி



ஒரு நகரின் எல்லைப் புறத்தில் சந்நியாசி ஒருவர் வாழ்ந்து வந்தார். ஆடம்பரத்தினாலோ ஆரவாரத்தினாலோ இறைவனை அடைய முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்த அவர் எளிமையும் பக்தியுமே இறைவனை அடைய உதவும் சாதனம் என்பதை நன்றாக அறிந்திருந்தார். தினமும் கடும் தியானம் மேற்கொண்ட அவர் ஞானமுதிரச்சி பெற்று, ஒரு மகானுக்குரிய உயர்ந்த நிலையை அடைந்தார். பூலோகத்திலுள்ள் சாதாரண மனிதன் தனது இடைவிடாத ஆத்ம சாதனைகளாலும் சுயநல எண்ணத்தினாலும் இறைபக்தியில் உயர்ந்து நின்றதைக் கண்டார் லோக சஞ்சாரியான நாரதமுனிவர். அவர் தேவர்களிடம் இந்த தகவலை தெரிவித்தார். தேவர்கள் அந்த மகானுக்கு சில அபூர்வ சித்திகளைத் தர வேண்டும் என்ற எண்ணம் கொண்டனர். அவர்கள் அனைவரும் பூலோகம் வந்து மகானை சந்தித்தனர். மகான் அவர்களை அன்புடன் வரவேற்று பல உபசாரங்களைச் செய்தார். இதைப் பார்த்த தேவர்களும் மகிழ்ந்தனர். "மாமுனிவரே! உமது பரிசுத்தமான மனதையும் வாழ்க்கையையும் கண்டு நாங்கள் மிக மகிழ்கிறோம். உம்மை மனதார பாராட்டுகின்றோம். எங்களின் மகிழ்ச்சியின் அடையாளமாக தங்களுக்கு சில அபூர்வ சக்திகளைத் தருகின்றோம். அவற்றைக் கொண்டு நீங்கள் மக்களுக்கு மிகுந்த நன்மை செய்யலாம். உதாரணமாக, நோயுற்றவர்களை தொட்டால் அவர்கள் உடனே குணமடைந்து விடுவார்கள். இது யாருக்குமே கிடைக்காத அபூர்வ சித்தி. இதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்கள். அந்த மகான் தேவர்களிடம், "அன்புமிக்க தேவர்களே! நீங்கள் தரும் இந்த வரத்தை மறுப்பதற்காக வருந்துகின்றேன். நோயுற்றவர்களை காப்பாற்றும் பொறுப்பு என்னுடையதல்ல. அதை இறைவன் பார்த்துக் கொள்வான். தேவர்கள் எவ்வளவோ வற்புறுத்தினார்கள். "இந்த சித்தி வேண்டாமென்றாலும் பணமோ, பொருளோ பெற்றுக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு மக்களுக்கு உதவுங்கள்" என்றனர். எதுவும் வேண்டமென்று மகான் மறுத்துவிட்டார். அவரது மனஉறுதியைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர். "அன்பரே! தாங்கள் எங்களுடைய மனமகிழ்ச்சிக்காவது எதையாவது ஏற்றுக் கொள்ளுங்கள். என்ன வேண்டும் என்பதை நீங்கள் சொல்லுங்கள்" என்றனர். அதற்கு அந்த மகான் "இறைவனுடைய அருள் மட்டுமே எனக்கு போதும். அதை பெறுவதற்கு நீங்கள் உதவி செய்தால் நான் மிகவும் மகிழ்வேன்" என்றார்.

தேவர்கள் அதற்குரிய ஏற்பாட்டை செய்வதாக அவருக்கு வாக்களித்து விட்டு "இவ்வளவு நல்ல மனிதராக இருக்கும் நீங்கள் எங்கு சென்றாலும் அந்த இடம் செழிப்படையும். நோயாளிகள் குணமடைவார்கள். இன்னும் அதிசயங்கள் எல்லாம் நடக்கும். ஆனால நாங்கள் கொடுக்கும் இந்த வரத்தை சற்று நேரத்தில் நீங்கள் மறந்துவிடுவீர்கள். உங்களை அறியாமல் நீங்கள் போகுமிடமெல்லாம் நன்மையே நடக்கும்" என்றனர். பின்னர் அவர்கள் மறைந்து விட்டனர். அதன்பின் அந்த மகான் சென்ற இடமெல்லாம் மழை கொட்டியது. பட்ட மரங்கள் பூத்துக் குலுங்கின. வறண்டு போன அருவிகள் நீரைச் சுரந்தன. வறண்ட பூமி செழித்தது. நோயாளிகள் குணமடைந்தனர். மனநோயாளிகள் அமைதி பெற்றனர். ஊனமுற்றவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள். பேசாதவர்கள் பேசினர். அந்த சந்நியாசியோ இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் தன்போக்கில் சென்றுகொண்டே இருந்தார். மக்கள் அவரை தங்கள் மனதுக்குள் புகழ்ந்தனர். அந்த மகான் அதையும் கண்டுகொள்ளாமல் அமைதியாக வாழ்க்கை நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. P.விஜய்
நிர்வாக இயக்குனர்



திரு K.யோகேந்திரன்
ஆசிரியர்

# இதுவரை வந்த இதழ்கள்!

2010

டிசம்பர்


2011

ஜனவரி


பெப்ரவரி


மார்ச்


ஏப்ரல்


மே


ஜூன்


ஜூலை


ஆகஸ்ட்


செப்டம்பர்


ஆக்டோபர்


நவம்பர்


டிசம்பர்


2012

ஜனவரி


பெப்ரவரி


மார்ச்


ஏப்ரல்


மே


ஜூன்


NEW ISSUE

எம்மை தொடர்புகொள்ள:

**Flex Publications**
04, IBC Road Wellawatte,
Colombo 6.
Tel:0777 614 186


## வாழ்க்கையில் வெற்றி பெற...

- அன்பு காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
- இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்துவிடாதே
- பணிவாயிரு ஆனால் கோழையாயிராதே
- சிக்கனமாயிரு ஆனால் கஞ்சப்படாதே
- வீரமாயிரு ஆனால் போக்கிரியாயிராதே
- சுறுசுறுப்பாயிரு ஆனால் பதட்டப்படாதே
- தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே
- பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே
- நம்ப நட ஆனால் நம்பி நடவாதே
- உழைப்பை நம்பு ஆனால் கடவுளையும் பெற்ற தாயையும் மறவாதே.

## ஏழு 7 செல்வங்கள்!

- ★ நல்ல நம்பிக்கை
- ★ நல்ல ஒழுக்கம்
- ★ மனசாட்சி
- ★ பழிக்கு அஞ்சுவது
- ★ பெருந்தன்மை
- ★ அறிவு
- ★ நல்ல படிப்பு

## நற்குணங்கள் சில...

- மென்மையாக பேசுங்கள்.
- எண்ணங்களைத் தூய்மையாக வைத்திருங்கள்.
- அன்பே தெய்வம் என்று உணருங்கள்.
- நியாயமற்ற செயல்களில் ஈடுபடாதீர்கள்.
- தவறு செய்பவர்களை மன்னியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

flex **Wellawatte Guide**

இரு மாதங்களுக்கு
ஒரு முறை
வெளிவருகிறது!

தொடர்புகளுக்கு: 0777555026

# June

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 + ■ * | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## May

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 + ■ * |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## July

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 + ■ * | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

● Poya Day ★ Public Holiday + Mercantile Holiday ■ Bank Holiday

**நீங்கள் படித்துச் சுவைத்த தரமான இந்து மத சம்பந்தமான தகவல்களையும், இலங்கையில் அமைந்துள்ள கோயில்கள் பற்றிய தகவல்களையும் எமக்கு எழுதியனுப்பினால் சிறந்ததை நாம் பிரசுரிப்போம்.**

**Flex Publications**
(A Subsidiary of **Flex Graphic**)

04, IBC. Road, Wellawatte.
Tel:- 2364157, 2506114 Fax:- 2501766
www.flexguidemag.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகள் சிரிப்பில் இறைவனைக் காண
# வருக எம்மோடு! இணைக நற்பணிகளில்

## பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்- கோகுலம்

**இல.607A, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளை. தொ.பேசி-2948398**



**கோகுலம் சிறுவர் இல்லமானது 115 பிள்ளைகளுடன் ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் கருணை இல்லமாக இயங்கிவருகின்றது. இங்கு உணவு, உடை, உறைவிடம், வைத்திய வசதிகள் உட்பட சகலவசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு கல்வி பயில அதனுடன் இணைந்த பாடசாலையும் உள்ளது. அவர்களுக்கு தாங்களும் தங்களால் இயன்ற அளவு உதவிசெய்து பகவான் அருள் பெற வேண்டுகின்றோம்.**

தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூபா.25000/= செலவாகின்றது.

**தங்கள் நன்கொடைகளை பிறந்ததினம், திருமண வருடப்பூர்த்தி மற்றும் உறவினர்களின் ஞாபகார்த்தமாகவோ வழங்கி உதவலாம்.**

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்- இஸ்கோன்






இஸ்கோன்- ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம் 1976ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை சிறப்பான ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன. 2007ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆலயத்திற்கான நிலம் சொந்தமாக வாங்கப்பட்டது. தற்போது ஆலயம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆகவே பக்தர்களும் இந்நற்பணியில் பங்குகொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருள்பெற வேண்டுகின்றோம்.

பகவான ஸ்ரீ விஷ்ணுவுக்கு ஆலயம் அமைக்கும் ஒருவனுக்கு ராஜாசுய யாகம், மற்றும் அஷ்வமேத யாகம் செய்த பலன் அனைத்தும் கிடைக்கும் (விஷ்ணு தர்மோத்தர).

## இஸ்கோன் கோசலா- பசுக்களை பராமரிக்கும் திட்டம்

**இல.44/88, கிருஸ்த்துராஜ மாவத்தை, ஏகித்த, வத்தளை.**



1999ம் ஆண்டு முதன் முதலாக ஒரு பசு எங்கள் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இன்று 28 பசுக்கள் (கன்றுகளுடன்) கொண்ட ஒரு பண்ணையாக மாறிவிட்டது. ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் மக்கள் பசுவதை செய்வதையும் பாலை பசுவிடமிருந்து பெற்ற பின்பு தாயாக மதிக்கபடவேண்டிய பசுவைக் கொன்று உணவாக உண்பதைப் பார்த்து பசுக்களைக் காக்க வேண்டுமென்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவரது திட்டத்திற்கேற்ப உருவாக்கப்பட்டதே எமது இஸ்கோன் கோசலாவாகும்.

நீங்களும் எமது சேவையில் பங்குகொண்டு பசுக்களின் காவலன் கண்ண கோபாலன் அருளைப் பெற்று உய்ய வேண்டுகின்றோம்.

## சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்

ஸ்தாபக ஆச்சாரியார். அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்கள்


சுவாமி பிரபுபாதா

இச்சேவைகளில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்புகளுக்கு-

**ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்**

இல.188,புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13. தொ.பேசி- 0112433325

**Email-iskcon@slt.lk / Web- www.iskcon.lk / www.gokulam.lk**

**A/C NAME: ISKCON, A/C NO:1050669901 BANK: COMMERCIAL BANK, KOTAHENA BRANCH**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Published by Flex Publications, 4, 19B Road, Wellawatte. Tel: 0777 614 186

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org